22

10-3-94

மந்தணம்



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
LAID ON THE TABLE OF THE HOUSE ON
10 NOV 1994

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்தில் செங்குந்தர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் இடையே 8-11-1992 ஆம் நாளன்று நிகழ்ந்த மோதல் குறித்து விசாரிக்க நீதித்துறை உறுப்பினர் ஆர். சி. டி., ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி (நிலை I) திரு. கே. இ. வரதன் அவர்கள் நடத்திய விசாரணைக் கமிஷனின்

அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. இ. வரதன் விசாரணைக் கமிஷன் அறிக்கையை சட்ட மன்றப் பேரவையில் வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களைத் தெரிவிக்கின்ற விவர அறிக்கை.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்தில் செங்குந்தர்களுக்கும், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்குமிடையே 8-11-1992 அன்று ஏற்பட்ட வகுப்பு மோதல் குறித்து விசாரணை செய்த திரு. கே. இ. வரதன் விசாரணைக் கமிஷனின் அறிக்கை 8-1-1994 அன்று அரசுக்குக் கிடைக்கப்பெற்றது. நிருவாகக் காரணங்களினால், அவ்வறிக்கையை 7-7-1994 உடன் முடிவடைகின்ற ஆறு திங்களுக்குள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்க இயலவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

எஸ். ஹரிபாஸ்கர்,
தலைமைச் செயலர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்தில் செங்குந்தர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் இடையே 8—11—1992 ஆம் நாளன்று நிகழ்ந்த மோதல் குறித்து விசாரிக்க நீதித்துறை உறுப்பினர் திரு. கே. இ. வரதன் நடத்திய விசாரணைக் கமிஷனின் அறிக்கை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்.

		பக்கங்கள்.
1.	அறிக்கை	3—27
2.	விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் குறித்த பட்டியல்	31—35
3.	வைக்கப்பட்ட ஆவணங்கள் குறித்த பட்டியல்	39—57
4.	இணைப்பு I—விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது தொடர்பாக 9—12—1992 ஆம் நாளிட்ட அரசிதழ் அறிவிக்கை	61—62
5.	இணைப்பு II—விசாரணைக் கமிஷன், மோதல் நடந்த இடத்திற்குச் சென்று நடத்திய கள ஆய்வு குறித்த அறிக்கை	65
6.	இணைப்பு III—விசாரணை அறிக்கையின் 23 ஆம் பத்தியில் குறிப்பிடப் பட்டுள்ள அட்டவணை வடிவிலான விவர அறிக்கை	68—73
7.	விசாரணைக் கமிஷனுக்குத் தெரிவிக்கப்பட்ட பல்வேறு ஆய்வு வரம்புப் பகுதிகள் குறித்து அளிக்கப்பட்ட காரணங்கள், பதிவு செய்யப்பட்ட முடிவுகள் குறித்த சுருக்கம்	77—80
8.	விசாரணைக் கமிஷனின் பணி முன்னேற்ற விவரங்கள்	83

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1. அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1. அறிக்கை.

திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்தில், செங்குந்தர்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் இடையே அக்கிராமத்தில் உள்ள சொத்தினை உடைமையாக்கிக் கொள்வதிலும் அனுபவிப்பதிலும் நீண்டகாலமாக உள்ள தகராறு காரணமாக, 8—11—1992 அன்று பொன்னூர் கிராமத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக விசாரிக்க, என் தலைமையில் இந்த விசாரணைக் கமிஷனை தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் 9—12—1992 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட பொதுத் (சட்டம்–ஒழுங்கு-B) துறையின் 9—12—1992 ஆம் நாளிட்ட 1397 ஆம் எண் அரசாணையிலும் அதன் மூலமும் (இணைப்பு I) அமைத்தது. இச்சம்பவம் பற்றிக் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கை குறித்து அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைக் கமிஷனின் ஆய்வு வரம்புகள் வருமாறு :—

(i) திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்தில் செங்குந்தர்கள், ஆதிதிராவிடர்கள் ஆகிய இரு வகுப்பினருக்குமிடையே பொன் னூர் கிராமத்தில் உள்ள சொத்து ஒன்றினை உடைமையாக்கிக் கொள்வதிலும், அனுபவிப்பதிலும், நீண்டகாலமாக இருந்து வந்த தகராறு தொடர்பாக, பதட்ட நிலைமை தோன்றவும், வகுப்பு மோதல் நிகழவும் வழிவகுத்த காரணம், சூழ்நிலைகள் ஆகியவை குறித்தும், இந்த இரு வகுப்பினரிடையே 8—11—1992 அன்று நிகழ்ந்த பெரும் வகுப்பு மோதல் குறித்தும் விசாரித்தல் ;

(ii) 8—11—1992 அன்று மோதலில் ஈடுபட்ட இரு வகுப்பினரும் கலைந்து செல்ல காவல்துறையால் குறைந்த அளவு பலப் பிரயோகம் செய்யப்பட்டதா அல்லது அளவு மீறி செய்யப்பட்டதா என்பது பற்றி விசாரித்தல் ;

(iii) செங்குந்தர் வகுப்பினரின் தூண்டுதலின்பேரில் காவல்துறையினர் தாக்கினர் என்றும், காவல்துறையினர் 8—11—1992 அன்று ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பெரும் அளவில் சேதப்படுத்தினர் என்றும், காவல்துறையினருக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டில் நம்பகத் தன்மை உள்ளதா என்பது பற்றி விசாரித்தல் ;

(iv) காவல்துறையினரின் மேற்சொன்ன நடவடிக்கைக்குத் தேவையிருந்ததா என்பதுபற்றியும், மேற்சொன்ன சம்பவத்தில் காவல்துறையினரின் நடவடிக்கை அளவுமீறி இருந்ததா என்பது பற்றியும் விசாரித்தல் ;

(v) ஆதிதிராவிடர் சொத்துக்களுக்குப் பெரும் அளவில் சேதம் ஏற்படுத்தியதற்குப் பொறுப்பான அதிகாரிகள், அதிகாரிகள் அல்லாதோர்களைக் கண்டறிதல் ;

(vi) ஆதிதிராவிடர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கும் ஆட்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கும் அவர்கள் இழப்பீட்டுத் தொகை பெறத் தகுதியுடையவர்களா என்பதைக் குறிப்பிடுதல் :

(vii) இப்பகுதியில் வாழும் பலநரப்பட்ட வகுப்பினருக்கிடையே எதிர்காலத்தில் அமைதியும் ஒற்றுமையும் நிலைநாட்டப்படுவதற்கான நடவடிக்கைகளைத் தெரிவித்தல்.

முதலில், அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் என்று கமிஷனின் பதவிக் காலம் நிர்ணயிக்கப்பட்டது. பின்னர், இது தொடர்பான அரசிதழ் அறிவிப்புகளின் மூலம் இக்கால அளவு 13 மாதங்களுக்கு (8—1—1994 அன்று முடிவடைந்தது) நீட்டிக்கப்பட்டது.

2. மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு ஆய்வு வரம்புகள் குறித்து விரிவாக விளக்கும் முன்னர், இந்த விசாரணை தொடர்பான சில விரிவான தகவல்களைத் தெரிவிப்பது அவசிய மாகும். விசாரணையின் தொடக்கத்தில் ஆய்வு வரம்புகளில் வகை செய்யப்பட்டுள்ள கமிஷனின் ஆய்வு வரம்பு, பொருள் தொடர்பான விவரங்கள், தெரிந்தவர்களிடமிருந்து உறுதிமொழிப் பத்திரங்களைக் கேட்டும் இக்கமிஷனை ஏற்படுத்தியது பற்றி அறிவித்தும் ஆங்கிலத்திலும், அந்த வட்டார மொழியிலும் பிரபலமான நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது; அத்துடன் 24—2—1993 அன்று பொன்னூர் கிராமத்திற்கு நான் நேரில் வந்து பார்வையிட இருப்பதுபற்றி பொன்னூர் கிராமத்திலும் அதைச் சுற்றிலும் உள்ள ஊர்களிலும் வசிக்கும் பொதுமக்களுக்கு அறிவிப்பும் செய்யப்பட்டது. மேற்கூறிய நாளன்று நான் அங்கு நேரில் சென்று பார்வை யிட்டபோது மாவட்ட ஆட்சியரும், செய்யாறு பகுதி மாவட்டத் துணை ஆட்சியரும், அக்கிராமப் பகுதியின் அதிகார வரம்புகளைக் கொண்ட காவல்துறை அதிகாரிகளும், அக்கிராமத்தில் வசிக்கின்ற பல்வேறு வகுப்பினரின் பிரதிநிதிகளும் அங்கிருந்தனர். அங்கு நேரில் சென்று பார்வையிட்டது குறித்த என்னுடைய அறிக்கை இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளது. பொது அறிவிப்பு வெளியிடப்பட்டதையடுத்து, கமிஷன் அலுவலகத்திற்கு 211 உறுதிமொழிப் பத்திரங்கள் வந்தன. இவ்விசாரணையின்போது சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளவர்களின் உறுதிமொழிப் பத்திரங்கள் நீங்கலாக எனையமை (168) சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்பட்டு சான்றாவணங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, திருவண்ணாமலை வழக்குரைஞர் திரு. எஸ். ஆர். வீரராகவன், கமிஷனின் நிரந்தர வழக்குரைஞர்; திரு. ஆர். ரவி,

வழக்குரைஞர், செங்கல்பட்டு, திரு. ஈ. எஸ். ஜோஸ், வழக்குரைஞர், வந்தவாசி, பொன்னூர் ஆதிதிராவிடர்களின் வழக்குரைஞர்கள்; திரு. என். விஸ்வநாதன், வழக்குரைஞர், திருவண்ணாமலை, பொன்னூர் செங்குந்தர் வகுப்பினரின் வழக்குரைஞர் ; திரு. என். சேஷாத்ரி, அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை-I), திருவண்ணாமலை, திரு. ஜி. ராஜன்பாபு, அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர், சேலம், காவல்துறையினரின் வழக்குரைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்ட நேரடி விசாரணையில் 53 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர். அத்துடன் 367 ஆவணங்கள் சாட்சியமாகவும், உடைந்த கைக்கடிகாரம், எக்ஸ் கதிர் நிழற் படங்கள் ஆகியவை இரண்டும் காட்சிப் பொருள்களாகவும் பெறப்பட்டன. விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் குறித்த விவரங்களும் உறுதிமொழிப் பத்திரங்கள்பற்றிய விவரங்களும் வருமாறு :—

1 முதல் 19 வரையிலான சாட்சிகள் ஆதிதிராவிடர்கள் தரப்பிலும், 20ஆம் சாட்சி செங்குந்த முதலியார் தரப்பிலும், 27, 29, 31, 34 முதல் 41, 43 முதல் 52 வரையிலான சாட்சிகள் காவல்துறையினரின் தரப்பிலும் சாட்சியமளித்தனர். எனைய சாட்சிகளில் 21 முதல் 26 வரை, 28, 30, 32, 33, 42 ஆகிய சாட்சிகள் காயமடைந்தோரைப் பரிசோதித்து, விபத்துப் பதிவேட்டில் பதிவு செய்த மருத்துவர்கள் ஆவர் ; 53ஆம் சாட்சி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நீதித்துறைக் காவலில் வைத்த செய்யாறு நீதித்துறை மாஜிஸ்டிரேட்—II ஆவார். சாட்சியமாகப் பெறப்பட்ட உறுதிமொழிப் பத்திரங்களுள் சான்றாவணங்கள் A-131 முதல் A-253 வரையும் A-286-ம் ஆதிதிராவிடர்களும், சான்றாவணங்கள் A-254 முதல் A-279 வரையும், A-287-ம் செங்குந்த முதலியார் வகுப்பினரும், சான்றாவணங்கள் A-280, A-281, A-284, A-285, A-289 முதல் A-291 வரையும் வன்னியர்களும், சான்றாவணம் A-292 ஆசாரி ஒருவரும், சான்றாவணம் A-282 மக்கள் உரிமைக் கழகத்தின் (People's Union for Civil Liberties) உறுப்பினர் ஒருவரும் (இந்த உரிமைக் கழகத்தின் சார்பில் அனுப்பப்பட்ட தகவல் அறியும் குழு இச்சம்பவம் குறித்து அளித்த அறிக்கையை அதன் உறுப்பினர் தனது சாட்சியத்தின்போது குமுவிடம் அளித்தார். அந்த அறிக்கை சான்றாவணம் A-14 ஆகும்). சான்றாவணம் A-294 சம்பவம் நடந்த இடத்தின் புகைப்படங்களை எடுத்த புகைப்படக்காரரும், சான்றாவணங்கள் A-293, A-295, A-297 ஆகியவை முறையே ''தினமணி'', ''நினைத்தந்தி'', ''தினமலர்'' ஆகிய நாளிதழ்களின் நிருபர்களும், சான்றாவணம் A-296, தமிழ்நாடு இளைஞர் சங்க அமைப்பாளரும், சான்றாவணம் A-298, தமிழ்நாடு இளைஞர் முன்னணி பொதுச் செயலாளரும் தாக்கல் செய்தவையாகும். இரண்டு கடிதங்கள் (சான்றாவணங்கள் A-283, A-288 ஆகியவை) உறுதிமொழிப் பத்திரம் எனத் தவறாக, அனுமானிக்கப்பட்டு, சாட்சியத்தின்போது கவனக் குறைவாக பெறப்பட்டுள்ளன ; எனவே, அவை பரிசீலனையிலிருந்து விலக்கப்பட்டன. வழக்குரைஞர்களுக்கு ஏற்ற வகையில், வாய்மொழியாக முறையீடு செய்து கொள்ளவும், எழுத்து மூலமான நங்கள் தரப்பை முன்வைக்கவும் வழக்குரைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

ஆய்வு வரம்பு பகுதி I.

3. பொன்னூர் கிராமத்தில் இரு வகுப்பினரிடையே பதட்டம் ஏற்பட்டதற்கான காரணம், சூழ்நிலை ஆகியவை குறித்து விளக்கும் முன்னர் விசாரணையின்போது கிடைத்த ஆவணங்கள், பின்வரும் தொடர்புடைய தகவல்களை வெளிப்படுத்துகின்றன. வந்தவாசி நகரத்திலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பொன்னூர் ஒரு கிறிய கிராமமாகும். அக்கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 7,402 பேர் ஆகும். அதில் 2,950 பேர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த வர்களாவர் ; எஞ்சிய 4,452 பேர் செங்குந்த முதலியார் (இவர்கள் ஆதிதிராவிடர்களைக் காட்டிலும் பெரும்பான்மையோர்) வன்னியர், யாதவர், ஜெயின் போன்ற வகுப்பைச் சேர்ந்தவர் களாவர். செங்குந்தர் வகுப்பைச் சேர்ந்த கணிசமானோர் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களாகவும் ஆதிதிராவிடர்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலாளர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். கிராம வரைபடத்தில் (சான்றாவணம் A-354) காட்டப்பட்டவாறு கிழக்கேயிருந்து சென்றால், கிராமத்தின் நுழைவிடத்தில் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியில், ஆதிதிராவிடர்கள் அளவரும் வசித்து வருகின்றனர். சாதி இந்துக்கள் ஆதிதிராவிடர்கள் குடியிருப்பின் மேற்குப் பகுதிக்கு அருகில் வடக்கு—தெற்காக நீள அமைந்து கிடக்கும் ஊர்ப் பகுதியில் வசித்து வருகின்றனர். அதற்கும் மேற்கே, புளியந்தோப்பு ஒன்று உள்ளது. அந்தப் பகுதி மக்கள் அதனை '' தரும தோப்பு '' அல்லது '' பாவுத்தோப்பு '' என அழைக்கின்றனர். அது 331/1ஆம் எண் நில அளவைப் புலத்தில் அமைந்துள்ளது ; அதன் மொத்த பரப்பு 1·62 எக்டேராகும் ; செங்குந்தர் குடியிருப்புப் பகுதியின் நடுவே அது அமைந்துள்ளது. அருள்மிகு திரௌபதி அம்மன் கோயில், 331/1ஆம் எண் நில அளவையின் நடுவில் அமைந்துள்ளது என்பதையும்; மேற்சொன்ன திருக்கோயில் வளாகம் எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது என்பதையும் 332ஆம் எண் நில அளவையாக அது தனியே இலக்கமிடப்பட்டுள்ளது என்பதையும் மேலும் குறிப்பிட்டாக வேண்டும். இனாம் கட்டணப் பதிவேட்டுப் பதிவு நகல் (சான்றாவணம் A-367)331/1ஆம் எண் நில அளவையில் உள்ள இந்தத் தோப்பினை '' தர்மதாயம் '' (T.D. எண் 547) என விவரிக்கையில், பட்டா—அடங்கல் பகுதி நகல் (சா.ஆ. A-13) இந்தத் தோப்பு, பொன்னூர் கிராமத்திலுள்ள அருள்மிகு சௌந்தர்ய வரதராஜ பெருமாள், அருள்மிகு திருக்காமேஸ்வரர் கோயில்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காட்டுகிறது என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். 331/1ஆம் எண் நில அளவையின் கிழக்குப் பக்கத்தில், எல்லை வரையறுக்கப் படாத அடைவான ஒரு பகுதி அமைந்துள்ளது, அதன் நில அளவை எண் 334/1ஏ ஆகும்.

கிராமப் பதிவுருக்களில் (சான்றாவணம் A-13) இந்த நி.அ.பு. எண் 334/1ஏ களத்தை (Kalam) உள்ளடக்கிய '' பாட்டை புறம்போக்காகப் '' பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு மறுப்பில்லை. 334/1ஏ, நி.அ.பு. எண்ணிற்கு கிழக்கே தேசூருக்குச் செல்லும் வடக்கு—தெற்கு சாலை அமைந்துள்ளது. தேசூர் சாலைக்கு கிழக்குப் பகுதியில் செங்குந்தர்கள் வசிக்கும் வீடுகள் வழியாகச் செல்லும் பல கிளைச் சந்துகள் மூலம், மேற்குறிப்பிட்ட பாட்டை புறம்போக்கு, பாவு தோப்பு ஆகிய இரண்டு இடங்களுக்கும் கிழக்கேயுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலிருந்து எளிதாகச் செல்ல முடியும் என்பது தெளிவாகின்றது. பொன்னூர் கிராமம் வந்தவாசி காவல் நிலைய அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

4. விசாரணை ஆய்வு வரம்புகளிலிருந்து, செங்குந்தர்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கு மிடையேயுள்ள முக்கிய தகராறு பாவுத்தோப்பு பகுதியை அனுபவிப்பது தொடர்பானது என்று கூறப்படுகிறது. செங்குந்தர்கள் நெசவிற்கு முந்திய பணிகளைக் கவனிக்க (பாவு போடுதல்) அப்பகுதியீது முழு உரிமையும் அனுபவபாத்தியதையும் கோருகின்றனர். அதிகாலை வேளையில் காலை 5 மணி முதல் 8 மணிவரை தோப்புப் பகுதியில் நெசவிற்கு முந்திய நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு அனுமதி கோரும் செங்குந்தர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் ஆதி திராவிடர்கள் அதே வேளையில், அவர்கள் நீண்டகாலமாக மேற்குறிப்பிட்ட பாவுத்தோப்பு பகுதியில் அவர்களுடைய பழமை மரபிலமைந்த விழாக்களைக் கொண்டாடி வருவதாகவும், அவை ஓராண்டில் சில குறிப்பிட்ட சமயங்களில் மூன்று அல்லது நான்குமுறை நடைபெறும் என்றும், அப்போது அங்கு தெருக்கூத்து, கலை நிகழ்ச்சிகள், கூட்டங்கள் ஆகியவையும் நடைபெறும் என்றும், அவற்றையும் செங்குந்தர்கள் தோப்பில் மேற்கொள்கிற பாவுநடவடிக்கை களுக்கு எவ்வித வசதிக்குறைவுமின்றி இரவு 10 மணி முதல் காலை 4 மணிக்குள் நடத்தி வருவ தாகவும் தெரிவித்துள்ளனர். விசாரணையின்போது வெளிப்பட்ட மற்றொரு தகராறு, செங்குந்தர்கள் நெசவிற்கு முந்திய பாவுபோடும் நடவடிக்கைகளை 331/1 ஆம் எண் நி.அ. புலத்தில் மட்டும் அன்றி 334/1ஏ, நி.அ.பு. எண்ணில் அமைந்துள்ள பாட்டை புறம்போக்கில் களப்பகுதி நீங்கலாக மற்ற பகுதிகளிலும் செய்து வந்துள்ளதாகத் தெரிவித்த கோரிக்கை தொடர்பானதாகும். அவர்கள் மேற்குறிப்பிட்ட தோப்பின்மீது நீண்டகாலமாக உரிமையும் அனுபவபாத்தியதையும் வைத்துள்ளதன் காரணமாக, முன்னரே குறிப்பிடப்பட்டுள்ள பெருமாள், ஸ்ரீவரர் கோவில்களுக்குரிய உரிமையை ரத்து செய்து அதற்கான சட்ட பூர்வமான பத்திரத் தையும் (Prescriptive title) பெற்றுள்ளனர். கமிஷன் மேற்கொண்ட இவ்விசாரணை நடைபெற்று வரும்போதே, ஜூனி சார்நிலை நீதிமன்றத்தில் (சான்றாவணம் A-346 நகல்) தாக்கல் செய்துள்ள அவர்களுடைய மூல வழக்கு 30/1993-ல் மேற்சொன்ன கோரிக்கையை முன் வைத்துள்ளனர். இவ்வழக்கில், சச்சைக்குரிய தோப்பின் மீதான அவர் களுடைய உரிமை, அனுபவபாத்தியதை ஆகியவற்றில் இவ்விரு கோவில்களின் திருவாகியான தக்கார் நலையிடுவதைத் தடை செய்து, 11—2—1993-ஆம் நாளன்று அவர்கள் இடைக்காலத் தடை ஆணையும் (உறுதிமொழிப் பத்திரம், மனு, ஆணைகளின் நகல் சான்றாவணம் A-12) பெற்றுள்ளனர். ஆதி திராவிடர்கள் செங்குந்தர்களின் நெசவுக்கு முந்திய பாவு போடும் நடவடிக்கையை நில அளவை எண் 331/1-க்குள் மட்டும் செய்யும் வகையில் செங்குந்தர்களின் கோரிக்கையை மட்டுப்படுத்தி வரையறுக்க வேண்டுமென்று கோரினர். எனினும், செங்குந்தர்கள் தொடுத்த சிவில் வழக்கு நடவடிக்கைகளில் பெரும்பான்மையானவற்றில் (இவைபற்றி இதன் பின்னர் முழுமையாக விவரிக்கப்படுகிறது). இத்தகராறு தொடர்புடைய பாவுத்தோப்பு பற்றிக் குறிப்பிடும்போது அது, 331/1-ஆம் எண் நில அளவைப் புலத்தில் மட்டிலுமே அமைந் துள்ளது என்றும், அதன் பரப்பளவு 1·62 எக்டேர் என்றும் ஐயத்திற்கிடமின்றித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்; எனினும், அதன் எல்லைகள் குறித்து விவரிக்கையில் கிழக்கு எல்லை தேசூர் சாலை என்று குறிப்பிட்டுள்ள காரணத்தால், அவர்கள் அத்தோப்பு, நில அளவை எண் 334/1ஏ-ல் உள்ள பாட்டை புறம்போக்கின் பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் கருதினர். பரிசீலனையில் உள்ள இத்தகராறை அளந்தறிய உதவும் அளவு கோல்களாகக் குறிக்கப்பெறும் மேற்கூறிய குறிப்புகளுடன் இந்த விசாரணை நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களைப் பரிசீலித்து விரித்துரைக்க நான் முற்படுகிறேன்.

5. பாவுத்தோப்பின் உடைமையுரிமை மற்றும் அனுபவ உரிமை குறித்து ஆதி திராவிடர்களும், செங்குந்தர்களும் முன்பு தெரிவித்த விரிவான முரண்பட்ட தத்தம் தரப்புக் கோரிக்கைகளை மெய்ப்பிக்கும் பொருட்டு, இருவர் தரப்பிலும் கூறப்பட்ட வாய்மொழிச் சாட்சியத்தை நான் இப்போதைக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிடு கிறேன். இவி, நான், என் முன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டவையும், சிவில் நீதி மன்றங்கள், மாஜிஸ்திரேட்டு நீதிமன்றங்கள், இந்து சமய அறநிலையத்தின் சட்டப்படிக்கான அமைப்பு போன்ற பல அமைப்புகளின் முன்பாக, முன்னர் நடந்த விசாரணை நடவடிக்கைகளின் சான்றளிக்கப்பட்ட அல்லது அதிகாரபூர்வமான நகல்களாக விளங்குகின்ற வையுமான ஆவணங்கள் (சான்றாவணங்கள் A-3 முதல் A-5 வரை, A-12, A-345, A-346, A-351 முதல் A-353, A-360 முதல் A-363 வரை) தெரிவிக்கும் சில பொருத்தமான தகவல்களை முதற்கண் இங்கு எடுத்துரைக்க முற்படுகிறேன். மேற்கூறிய சில ஆவணங்களைப் படித்துப் பார்த்துப் பரிசீலனை செய்ததில், பாவுத்தோப்பை உடைமை யுரிமையிலும் அனுபோகத்திலும் வைத்திருப்பது குறித்து, செங்குந்தர் சமூகத்தினருக்கும் எனைய இந்து சமூகத்தினருக்கும் இடையே கடந்த காலத்தில் மிகப் பல ஆண்டுகளாக நீண்டகாலத் தகராறு இருந்து வந்திருக்கிறது என்பது தெரிகிறது. பாவுத்தோப்பு சம்பந் தப்பட்ட பெரும்பாலான விசாரணை நடவடிக்கைகளில், செங்குந்தர் சங்கத்தைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்கள் சிலர் கூட்டு நியமன தரப்பினர்களாக இருந்துள்ளனர். இந் நிலையில், அக்கிராமத்தைச் சேர்ந்த செங்குந்தர்கள், மேற்கூறிய விசாரணை நடவடிக்கைகள்

தொடர்பான அதிகார பூர்வமான ஆவணங்களை அவர்களுடைய பாதுகாப்பில் வைத்துள்ளனர் எனக் கருதுவது நியாயமானதாகும். உண்மையில், ஈண்டுத் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்து நடைபெற்றதாகத் தெரியவந்துள்ள முந்தைய வழக்கு விசாரணை நடவடிக்கைகளில் இவ்வழக்கிற்கு மிகவும் அதிக அளவில் தொடர்புடைய சில ஆவணங்கள் சாட்சியங்களின் போது சான்றாவணங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்டவாறு, ஆரணி சார்நிலை நீதிமன்றத்தில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் (அசல் வழக்கு எண் 30/1993) குறிப்பிடப்பட்ட '' பாவுத்தோப்பை '' தனிப் பட்ட உரிமை (உடைமை உரிமை) மற்றும் உடைமை உரிமையும் அனுபோக உரிமையும் கொண்டிருந்தது என்கிற அவர்களுடைய கோரிக்கைக்கு இடர் உண்டாக்கும் அல்லது ஊறு விளைவிக்கும் என்பதால் அந்த ஆவணங்களை அவர்கள் முன்யோசனையுடன் கொண்டு வந்து தராமல் (நங்கள் வசம்) நிறுத்தி வைத்துக்கொண்டார்கள் என்பது இதனால் தெளிவாகின்றது. பாவுத்தோப்பு தொடர்பான முந்தைய நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகள் (இதில் ஆதி திராவிடர்கள் தரப்பினர்களாக இல்லை) தொடர்பான ஆவணங்களைத் துருவித் தேடிக் கண்டுபிடித்து, அவற்றை இந்த விசாரணை நடவடிக்கைகளில் பரிசீலிப்பதற்காக தாக்கல் செய்யுமாறு வறுமை நிலையிலுள்ள ஆதி திராவிடர்களை எதிர்பார்ப்பது அல்லது அவர்களை வேண்டுவது பயனற்றதாகும். ஒரு சில வெளியிடப்படாத காரணங்களுக்காக, வன்னியர், யாதவர் வகுப்புகளைச் சேர்ந்த பொன்னூர் கிராம மக்கள், சில உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்துவிட்டு, இந்தப் பாவுத்தோப்பை உடைமையாக்கிக் கொண்டு, அனுபவிப்பதைப் பொறுத்த மட்டில், அக்கிராமத்தில் வசிக்கும் செங்குந்த முதலியார்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் இடையே தான் சச்சரவும் எதிர்ப்பும் இருந்து கொண்டிருக்கிறது என்று வெளிப்படையாக ஒரு தோற்றத்தை உருவாக்கிவிட்டு, இந்த விசாரணை நடைபெறும் போது, இதன் பின்னணியில் அமைதியாக இருக்க இப்போது முடிவு செய்துள்ளனர். ஆனால், இங்கு ஆராய்ந்து கண்டறியப்பட்ட முந்தைய ஆவணங்கள் வேறு வகையாகக் குறிப்பிடுகின்றன.

6. முதலில் அளிக்கப்பட்ட ஆவணம் சான்றாவணம் A-5 ஆகும். இது, திருவண்ணாமலை கோட்டாட்சியர், அலுவல் முறையில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில், பல்வகை வழக்கு எண் 1/1955-ல் 9—7—1955ஆம் நாளன்று பிறப்பிக்கப் பட்ட ஆணை ஆகும். சான்றாவணம் A-5ல் உள்ளவை தெரிவிக்கிறவாறு, அதன் நட வடிக்கைக் குறிப்புகள், பின்வரும் சூழ்நிலைகளில் உருவாகியவை ஆகும். 1948 வரை நி. அ. பு. எண் 331/1-ல் உள்ள நிலம், ''கோவில் தரும தோப்பு பாதுகாப்புக்காக நற் கால தருமகர்த்தர் '' என்ற அரசுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. செங்குந்தர் வகுப்பைச் சேர்ந்த அப்போதைய இரு தலைவர்கள் விண்ணப்பம் செய்து செங்குட்டன் பேரில், வட்டாட்சியர், 7—9—1948-ஆம் நாளிட்ட ஆணையின்படி (ப.வ. 1/1955-ல் சான்றா வணம் P-8 ஆக தாக்கல் செய்யப்பட்டது), கிராமக் கணக்கில் '' தருமகர்த்தா '' என்ற சொல்லுக்குப் பின்னர், வேதாசல முதலியார், அப்பாவு முதலியார் ஆகிய பெயர்களைச் சேர்த்தார். ஆரணி, முனிசீப் நீதிமன்றத்தில் அ.ம. எண் 671/1948ஆம் எண் வழக்கை தாக்கல் செய்து அதன் மூலம் வட்டாட்சியரின் ஆணையை ரத்து செய்ய ஏனைய வகுப்பினர் மேற்கொண்ட முயற்சி, மேற்சொன்ன வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணத் தாலும், வேலூர், மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சி. எம். ஏ. எண் 48/ 1953-ல் மேல்முறையீட்டில், அந்த ஆணை உறுதி செய்யப்பட்டதாலும் (19—9—1952 ஆம் நாளிட்ட அ.ம. எண். 671/1948-ன் தீர்ப்பு நகல்களும், 27—3—1954-ஆம் நாளிட்ட சி.எம்.ஏ. 48/1953 ன் தீர்ப்பு நகல்களும், சான்றாவணம் A-5 விசாரணை நடவடிக்கைகளில் முறையே சான்றாவணம் P-5 ஆகவும் P-6 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டன), தோல்வி யுற்றது. அதன் காரணமாக, செங்குந்தர்கள் மறுப்பு தெரிவித்து தடுத்ததையும், கிராம அதிகாரிகள் கூறிய ஆலோசனையையும் புறக்கணித்துவிட்டு, 17—12—1954-ஆம் நாளன்று, வன்னியர்களும், யாதவர்களும், பாவுத் தோப்பிற்குள் நுழைந்து, மரங்களை நட குழிகளைத் தோண்டி அதன் மூலம் கலவர சூழ்நிலையைத் திடீரென உருவாக்கினர். அத்தகைய சூழ்நிலைகளில், செங்குந்தர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகளாக பத்துபேர், பாவுத் தோப்பில் தங்களுக்குள்ள உடைமை உரிமை மற்றும் அனுபோக உரிமையில் ஏனைய சமு தாயத்தைச் சேர்ந்த 11 பேர் தலையிட்டு, செங்குந்தர்களுக்குத் தொல்லை கொடுப்பதைத் தடுக்குமாறு கோரி, குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 145 ஆம் பிரிவின் கீழ் பல்வகை வழக்கு எண் 1/1955-ல் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்தனர். மேற்படி வழக்கில் இறுதியாகத் தீர்ப்பளிக்கும்போது, செங்குந்தர்கள் கோரியவாறு 145 (6) ஆம் பிரிவின் கீழ் ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது உண்மையாகும். ஆரணி மாவட்ட முன்சீப் நீதிமன் றத்தில் ஓ. எஸ். 79/1956 ஆம் எண் வழக்கைத் தாக்கல் செய்ததன் மூலம் சான்றாவணம் A-5-ல் உள்ள ஆணையைச் செல்திறனற்றதாக்க மேற்படி ஏனைய சமுதாயத்தினரின் முயற்சி, கோரப்பட்ட நிவாரணம் வழங்குவதற்கு சிவில் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லாததால், 19—12—1958 ஆம் நாளிட்ட A-360 ஆம் எண் தீர்ப்பு சான்றாவணத்தின்படி மேற்படி வழக்கு தள்ளுபடியானதால் தோல்வியுற்றது. இதனை எதிர்த்து, வேலூர், மாவட்ட நீதி மன்றத்தில் A.S. 522/1959-ஆம் எண் வழக்கில் மேல்முறையீடு செய்யப் பட்ட போதிலும், 5—8—1961-ஆம் நாளிட்ட A-361-ஆம் எண் தீர்ப்பு சான்றாவணத் தின்படி, இந்த வழக்கு, அசல் வழக்கைத் தள்ளுபடி செய்தபடி ரத்து செய்த பின்னர், புதிதாகத் தீர்ப்பளிப்பதற்காக விசாரணை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இதனை எ. எ. ஓ. 272/1961-ல் 6—12—1963 ஆம் நாளிட்ட A-362 ஆம் எண் சான்றாவண ஆணையின்படி உயர்நீதி மன்றமும் உறுதி செய்தது. ஆயினும், முதற்கண் தாக்கல் செய்யப்பட்ட 79/1956-ஆம் எண் அசல் வழக்கு விசாரணை நாளன்று மனுதாரர்களும், அவர் களுடைய வழக்குரைஞரும் வராத காரணத்தால் வழக்கைத் தொடர்ந்து நடத்தாததால் 9—3—1964 ஆம் நாளிட்ட A-363 ஆம் எண் தீர்ப்பு சான்றாவணத்தின்படி இறுதியாகத்

தள்ளுபடி செய்யப்பட்டது. இது தவிர, ஆரணி மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் 369/1917 ஆம் எண் மூல வழக்கில் 30—8—1918ஆம் நாளிட்ட தீர்ப்பின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்று மேற்படி சட்ட நடவடிக்கைகளில் D-1 சான்றாவணமாகத் தாக்கல் செய்யப் பட்டது என்று A-5 ஆம் எண் சான்றாவணம் குறிப்பிடுகிறது; தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ள ஸ்ரீதிரௌபதி அம்மன் கோயில் நிருவாகங்களை அக்கிராமத்தில் வாழும் அனைத்து சமுதாயத்தினரும், நிருவகிக்கத் தகுதியுடையவர்கள் என்று (மேற்படி கோயில் நி. அ. எண் 331/1-ல் உள்ள பாவுத்தோப்பின் நலினில் அமைந்துள்ளது. அதற்குத் தனியாக நி.அ.பு. எண் 332 ஒதுக்கப்பட்டுள்ளது) அந்தச் சான்றாவணத்தில் கூறப்பட்டுள்ளது. இந்தக் கோயிலின் நிருவாக உரிமை தங்களுக்கு மட்டுமே உரியது என்று செங்குந்தர்கள் கோரியதை இந்த முடிவு நிராகரித்துவிட்டது. இவ்வாறாக, பாவுத்தோப்பு உடைமை உரிமை மற்றும் அனுபோக உரிமை தொடர்பாக செங்குந்தர்களுக்கும் ஏனைய சமுதாயத்தினருக்கும் இடையே 1917ஆம் ஆண்டிலிருந்தே வழக்குகள் இருந்து வந்தன என்பது தெளிவாகும். ஆயினும், கிராமத்திலுள்ள கோயில்களின் நிருவாகத்தையும், பாவுத்தோப்பு உட்பட அதிலுள்ள சொத்துக்களின் அனுபோக உரிமையையும் பிரிக்க முடியாத உரிமைகளாக ஒருங்கிணைக்க எதிரிகளால் (Adversaries) பல்வேறு சட்ட நடவடிக்கைகளில் எப்போதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது என்பதை நான் அறிகிறேன். தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்து தெரிய வரும் பின்னர் மேற்கொள்ளப் பட்ட நடமுறைகள் குறித்து இப்பின்னணியிலிதான் விவாதித்து, கருதிப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

7. ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் ஏ. எஸ். 522/1959 ஆம் எண் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் (சான்றாவணம் A-361) தெரிவிக்கப்பட்டிருந்த சில கருத்துக்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, பொன்னூர் கிராமத்திலுள்ள செங்குந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்த ஆறு பேர், சென்னை, இந்து சமய-அறக்கட்டளைத் துறை துணை ஆணையாளரிடம் ஒ. எ. 37/1975 ஆம் எண் வழக்கைத் தாக்கல் செய்து, அதில் பொன்னூர் அருள்மிகு திருக்காமேஸ்வரர் மற்றும் செளந்தர்ய வரதராஜ பெருமாள் கோயில்களின் நிருவாகத்தைப் பொன்னூர் கிராமத்தில் நிரந்தரமாக வசிக்கும் செங்குந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர்களிடையே இருந்து, தெரிந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் அடங்கிய அறங்காவலர்களை நியமனம் செய்வதற்குரிய விதித்துறை யுடன், திட்டமொன்றை வகுக்கக் கோரி, மனு ஒன்றை 1959 ஆம் ஆண்டு 22 ஆம் சட்டத்தின் 64(1) பிரிவின்கீழ் தாக்கல் செய்தனர். துணை ஆணையாளர் முன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை விரிவாகப் பரிசீலித்து, அதன் அடிப்படையில், துணை ஆணையாளர் 4—9—1976 ஆம் நாளிட்ட, ஆணையில் (சா. ஆ. A-351) அம்மனுவைத் தள்ளுபடி செய்தார்.

மேற்சொன்ன தனது முடிவிற்கு ஆதரவாக, துணை ஆணையாளர், பின்வருவன வற்றைக் குறிப்பிட்டுள்ளார் :—

(i) துணை ஆணையாளர் முன் செங்குந்தர்கள்—மனுதாரர்களால் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், அக்கிராமத்திலுள்ள அனைத்து கோயில்களும் அனைத்து வகுப்பினருக்கும் சொந்தமானவை என்பதையும், செங்குந்தர்களுக்கு மட்டுமே அவை சொந்தமானவையல்ல என்பதையும் ஒப்புக் கொண்டனர் ;

(ii) துணை ஆணையாளர் முன் சா. ஆ. B-2 ஆக தாக்கல் செய்யப்பட்ட 1914 ஆம் ஆண்டின் அவணம் (இது, சி. சி. 170/1916 ஆம் எண்ணில் முந்தைய நீதி மன்ற நடைமுறைகளில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது), கிராமத்திலுள்ள அம்மன் கோயிலை அனைத்து வகுப்பினரும் கூட்டாகச் சேர்ந்து நிருவகிப்பது குறித்து, கிராமத்தி லுள்ள அனைத்து வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் குறிப்பதாகும்;

(iii) இங்கு குறிப்பிடப்படும் கோயிலை (அருள்மிகு செளந்தர்ய வரதராஜ பெருமாள், அருள்மிகு திருக்காமேஸ்வரர்) நிருவகிப்பதற்கு அனைத்து வகுப்பினரும் உரிமையுடையோராவர் என்பதே, சான்றாவணம் B-3 ஆக துணை ஆணையாளர் முன் தாக்கல் செய்யப்பட்ட ஒ. எஸ். 369/1917 ஆம் எண் தீர்ப்பு குறிப்பிடுகிறது.

துணை ஆணையாளர் முன் மனுதாரர்கள் (செங்குந்தர்கள்) கோரிய உரிமை, கோயிலைப் பற்றி மட்டுமே ஆகும் என்றும், அவர் முன் அ.த.சா. 7 ஆக செங்குந்தர்களால் விசாரிக்கப்பட்ட முக்கிய சாட்சி, தோப்பைப் பற்றி மட்டுமே தன்னுடைய உரிமையைக் கோரினார் என்றும், துணை ஆணையாளர் மேலும் தெரிவித்திருந்தார். துணை ஆணை யாளர், அவருடைய தீர்ப்பு ஆணையில் (சான்றாவணம் A-351-ல் பதிவு செய்துள்ளவற்றை) மிகவும் உறுதியாகக் கூறியுள்ளார். அவ்வாணை பின்வருமாறு :—

" இத்தனை ஆண்டுகளாக செங்குந்தர் வகுப்பினருக்கும், ஏனைய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே தகராறுகள் இருந்து வந்த போதிலும், " திருக்கோயிலும், திருக்கோயிலுக்குச் சொந்தமான தோப்பு உட்பட, திருக்கோயிலின் சொத்துக்கள் அனைத்தும் செங்குந்தர் வகுப்பினர் மட்டும் என்ற தனிப்பட்ட முறையில் இல்லாமல், பொதுவாக எல்லா வகுப்பினராலும் நிருவகிக்கப்பட்டு வந்துள்ளன என்ற ஒவ்வொரு நிலையிலும் உறுதி செய்யப் பட்டுள்ளது ". (மேற்சொன்ன சொற்களின்கீழ் நான் அடிக்கோடிட்டுள்ளேன்) அருள்மிகு

சௌந்தர்ய வரதராஜப் பெருமாள் திருக்கோயில், திருக்காமேஸ்வரர் திருக்கோயில் என்ற பெயர்களில், கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பாவுத்தோப்பு உட்பட, அக் கிராமத்திலுள்ள திருக்கோயில்கள், அவற்றின் சொத்துக்கள் ஆகியவற்றின் நிருவாக உரிமை தொடர்பாக (சா.ஆ. A-351-ல்) ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிறப்பிக்கப்பட்ட தங்களது உரிமைக் கோரிக்கைக்கு எதிரான இந்த ஆணைக்கெதிராக, செங்குந்தர்கள் மேல்முறையீடு எதும் தாக்கல் செய்ததாகத் தெரியவில்லை.

8. இது போதாதென்று, இந்து சமய-அறநிலையத் துறை உதவி ஆணையாளர் மூலம், திரு. யாதவ தேவராஜீலு பிள்ளை என்பவரை, அருள்மிகு திருக்காமேஸ்வரர், சௌந்தர்ய வரதராஜப் பெருமாள் திருக்கோயில்களின் அறங்காவலர்களுள் ஒருவராக நியமிக்க, செங்குந்தர்கள் எடுத்த முயற்சியும் தோல்வியடைந்தது. மேலும், இது தொடர்பாக, இந்து சமய-அறநிலையத் துறை தணை ஆணையாளர் முன்பு, செங்குந்தர்கள் தாக்கல் செய்திருந்த 15/1980 ஆம் எண் மறு விசாரணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணமாக, 25—2—1982 ஆம் நாளிட்ட ஆணையின் (சா. ஆ. A-352) மூலம் ரத்து செய்யப்பட்டது. இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து, இந்து சமய-அறநிலையத் துறை ஆணையாளர் முன்பு, செங்குந்தர்கள் தாக்கல் செய்திருந்த 22/1982 ஆம் எண் மறு விசாரணை மனுவை விசாரணை செய்து, 5—9—1985 ஆம் நாளிட்ட ஆணையின் (சா.ஆ. A-353) மூலம், இந்து சமய-அறநிலையத் துறை ஆணையாளர் மேற்சொன்ன தள்ளு படியை உறுதி செய்தார். மேற்சொன்ன இவையனைத்தும் செங்குந்தர் வகுப்பினருக்குப் பாதகமாகவே அமைந்துள்ளன. 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வாக்கில், பொருத்தமான, சட்டப்படிக்கான அமைப்பு எடுத்துள்ள சட்ட நடவடிக்கைகள், செங்குந்தர் வகுப்பினருக்குப் பாதகமாகவே அமைந்துவிட்டதால், கிராமத்திலுள்ள எல்லா கோயில்களின், குறிப்பாக, அருள்மிகு சௌந்தர்ய வரதராஜப் பெருமாள் திருக்கோயில், திருக்காமேஸ்வர திருக்கோயில் ஆகியவற்றின் அறங்காவலர் உரிமையை, நிருவாக உரிமையை, செங்குந்தர் வகுப்பினருக்கு மட்டுமே தர வேண்டும் என்ற அவர்களுடைய உரிமைக் கோரிக்கையை அவர்களுடைய நலன் கருதி அவர்கள் விட்டுவிட்டதாகத் தெரிகிறது. பின்னர், செங்குந்தர்கள், பாவுத்தோப்பின் உடைமை உரிமை, அனுபோக உரிமை ஆகிய உரிமைகள் தொடர்பாக மட்டும் தங்கள் உரிமைக் கோரிக்கைகளை நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தனர்.

9. பாவுத்தோப்பில், நெசவுக்கு முற்பட்ட நெசவு தொடர்பான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த செங்குந்தர்களை ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கும் பெயர் குறிப்பிடப்பட்ட ஏழு ஆதிதிராவிடர்கள் 25—7—1989 ஆம் நாளன்று, தொந்தரவு செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டியும், செங்குந்தர்களின் நெசவுத் தொழில் அது தொடர்பான வேலைகள் ஆகிய வற்றைப் பொறுத்தமட்டில், அவர்கள் பாவுத்தோப்பை அமைதியான முறையில் அவர்களுடைய உடைமை உரிமையில், அனுபோக உரிமையில் வைத்திருப்பதில் ஆதி திராவிடர்கள் தலையிடு வதைத் தடுக்கும் வகையில், அவர்களுக்கு நிரந்தர தடை ஆணை பிறப்பிக்குமாறும் கோரி, ஆரணி மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில், பொன்னூர் நெசவாளர்கள் (செங்குந்தர் வகுப்பினர்) தங்களுடைய செயலாளர் திரு. கே. பி. குப்புசாமி மூலம் ஓ. எஸ். 591/1989 ஆம் எண்ணில் (சா. ஆ. A-345 வழக்கின் சான்றளிக்கப்பட்ட நகல்) வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தனர். பொன்னூர் கிராமத்தில் வசிக்கின்ற செங்குந்தர் வகுப்பினர், பழங்கால ஆவணங்களில் தெரிய வருகின்றவாறு, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக 331/1 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தில் அமைந்துள்ள சுமார் 1·62 எக்டேர் பரப்பை, தங்களுடைய நெசவுத் தொழில் தொடர்பாக, நெசவுக்கு முந்தைய வேலைகளைச் செய்வதற்காக உடைமை உரிமையாக அனுபவித்து பெற்று வந்துள்ளனர் என்றும், இது தொடர்பாக அந்த கிராமத்திலிருந்து எவரும் தடை செய்ய வில்லை என்றும், இத்தகைய கோரிக்கைக்கு ஆதாரமாக A-345 ஆம் எண்ணுள்ள சான்றா வணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையீட்டில் உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறு உடைமை உரிமையாகப் பெற்ற, அனுபவித்து வருவதற்கு ஆதாரமாக எண்ணுகின்ற வகையில் A-345 ஆம் எண்ணுள்ள சான்றாவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முறையீட்டின் 5 ஆவது பத்தியின் இறுதியில் பின்வருமாறு திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது :—

''முறையீடு செய்த வகுப்பினர், வழக்கிலுள்ள சொத்திற்கு, வழக்கிலுள்ள சொத்து ஒப்படைக்கப்பட்ட கோயில்களான பொன்னூரிலுள்ள அருள்மிகு சௌந்தர்ய வரதராஜ பெருமாள் கோயில், அருள்மிகு திருக்காமேஸ்வரர் கோயில் ஆகியவற்றின் பெயர்களில் வரிகளும் செலுத்தி வந்துள்ளனர்'' (என்னால் அடிக்கோடிடப்பட்டுள்ளது). மேற்சொன்ன வழக்கில், எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எழுத்து மூலமான வாக்குமூலத்தின் நகல் கிடைக்கவில்லை. ஆரணி, மாண்புமிகு மாவட்ட முன்சீப், மேற்சொன்ன வழக்கில் அளித்த 27—3—1991 ஆம் நாளிட்ட A-3 ஆம் எண்ணுள்ள சான்றாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்பில் அடங்கியுள்ள வற்றைக் கொண்டு, எதிர்மனுதாரர்கள் எழுப்பியுள்ள வாதத்தை உறுதிப்படுத்தவும், வாதத்தின் தன்மையை விளக்கவும், அந்த நகல் அவசியமாகும். செங்குந்தர் சங்கத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று கூறப்படுவதுபோல் அக்கிராமத்தில் செங்குந்தர் சங்கமோ செயலாளரோ இல்லை என்பது ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கின்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த எதிர்மனுதாரர்களின் கூற்று ஆகும். மேலும், வழக்கிலுள்ள சொத்து, கிராமத்திலுள்ள அருள்மிகு சௌந்தர்ய வரதராஜப் பெருமாள் கோயில், அருள்மிகு திருக் காமேஸ்வரர் கோயில் ஆகியவற்றுக்குச் சொந்தமானது என்பதும், செங்குந்தர் வகுப்பினர் அச்சுறுத்தியும், கட்டாயப்படுத்தியும் வழக்கிலுள்ள சொத்து அமைந்திருக்கும் இடத்தில் நெசவுக்கு முந்தைய வேலைகளைச் செய்து வந்துள்ளனர் என்பதும், அதுவும்கூட, அது தொடர்பாக இயல்பான அல்லது வழங்கப்பட்ட உரிமை ஏதுமின்றி காலை 5 அல்லது 6 மணிக்கும் காலை 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில், மேற்சொன்ன வேலைகளைச் செய்து

வந்துள்ளனர் என்பதும், அந்தக் கிராமத்திலுள்ள ஏனைய வகுப்பினர் விழாக்களை நடத்துவது, கூட்டங்களைக் கூட்டுவது உள்ளிட்ட தங்களுடைய வகுப்பினரின் பயனுக்காக வழக்கிலுள்ள சொத்தினைப் பயன்படுத்தாமல் தடுக்க செங்குந்தர் வகுப்பினர் சட்ட விரோதமான வழிகளைக் கையாண்டு வந்துள்ளனர் என்பதும், எதிர் மனுதாரர்களாகிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் கூற்றாகும். மாண்புமிகு மாவட்ட முன்சீப் விரிவாக விசாரணை செய்த பின்னர், அவரிடம் விசாரணைக்கு வந்த முறையீடு செய்தவர்களின் கோரிக்கை சரியானது என்று முடிவு செய்து, எதிர் மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தரத் தடையாணையைப் பிறப்பித்து, A-3 ஆம் எண்ணுள்ள சான்றாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 27—3—1991 ஆம் நாளிட்ட தீர்ப்பை அளித்தார். பதிவு செய்யப்பட்ட கீழ்க்காணும் குறிப்பிடத்தக்க முடிவையும், மாண்புமிகு மாவட்ட முன்சீப் பிறப்பித்த தீர்ப்பின் வாசகக் கருத்தையும் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்.

'' உரிமை கோயிலுக்கு இருந்தாலும்கூட, வாதி சமூகத்தினரே தொடர்ந்து பாவுத்தோப்பு தொடர்பாக இந்த தாவா இடத்தினைப் பயன்படுத்தி வந்திருக்கிற சூழ்நிலையில் ..... இறுதியாக தாவா சொத்தில் வாதி சமூகத்தினரின் நெசவுத் தொழில் செய்து வருவதை எதிர்க்கவோ அல்லது அவர்களுடைய ஆட்களோ உறவினர்களோ எவ்விதத்திலும் தடை செய்யக்கூடாது என எதிர்வாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை செலவுத் தொகையுடன் பிறப்பிக்கப்படுகிறது '' (என்னால் அடிக்கோடிடப்பட்டுள்ளது). மேற்கூறிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையால் பாதிக்கப்பட்ட நிலையில், பிரதிவாதிகள், ஆணி துணை நீதிமன்றத்தில் A. S. 30/1991 ஆம் எண் மேல்முறையீட்டில் மேல் முறையீட்டைத் தாக்கல் செய்தனர். எனினும், விசாரணை நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்து இந்த மேல் முறையீட்டை ஆணி துணை நீதிமன்றம் 14—9—1992 அன்று தள்ளுபடி செய்தது. இத்தீர்ப்பு சார். ஆ. 44 ஆம் இடம் பெற்றுள்ளது. இதன் விளைவாக, விசாரணை நீதிமன்றம் அளித்த நிரந்தரத் தடையாணை உறுதி செய்யப்பட்டது. இத்தீர்ப்புக்கெதிராக (சார். ஆ. A-4) உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அது பதிவு செய்யப்படாமல் (எண் கொடுக்கப்படாமல்) உள்ளது என்று இந்த விசாரணையின்போது வாய்மொழியாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்சொன்ன கோரிக்கையை வெளிப்படுத்தும் அதிகாரப் பூர்வமான ஆவணம் எதுவும் அளிக்கப்படவில்லை எனும் உண்மையில் எவ்வித மாற்றமும் இல்லை. இது இவ்வாறிருக்க, 8—11—1992 ஆம் நாளைய சம்பவத்திற்கு முன் நடந்த தொடர்புடைய எனைய தகவல்களை நான் எடுத்துரைக்க முற்படுகிறேன்.

10. காலரியிலுள்ள ஆதி திராவிடர்கள் அம்பேத்கார் மன்றத்தின் செயலாளர் திரு. எம். கோபால் (சாட்சி எண் 1) அதன் தலைவர் என், கோபால் (சாட்சி எண் 10) இக் கிராமத்திலுள்ள செங்குந்தர்களுக்காகவும் அவர்கள் சார்பிலும் விசாரணை செய்யப்பட்ட ஒரே சாட்சியாகிய திரு. லோகநாதன் (சா. எண் 20) பொன்னூர் கிராமத்தின்மீது அதிகார வரம்புடைய வந்தவாசி காவல் நிலையத்தின் அப்போதைய இன்ஸ்பெக்டர் திரு. தியாக ராஜன் (சாட்சி எண் 43), சப்-இன்ஸ்பெக்டர், விஜயகுமார் (சாட்சி எண் 47) ஆகியோர் அளித்த சாட்சியத்திலிருந்து பின்வரும் தகவல்கள் பொதுவாகத் தெரிய வருகின்றன. அருள்மிகு சௌந்தர்ய வரதராஜப் பெருமாள் திருக்கோயில், திருக்காலேஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றுக்குச் சொந்தமான தருமத் தோப்பில், 26—5—1992 அன்று காலங்காலமாக நடந்துவரும் இந்துத் திருவிழாவை நடத்துவதற்கும் அத்துடன் சேர்த்து அன்னதானம் செய்வதற்கும் அன்றிரவு நாடகம் நடத்துவதற்கும் அனுமதி அளிக்குமாறு காலனி மக்களின் தலைவர்கள் சிலர் அக்கோயில் அறங்காவலரிடம் (தக்கார்) 23—4—1992 அன்று எழுத்து மூலமாகக் கேட்டுக் கொண்டனர். அறங்காவலர், தன்னுடைய 24—4—1992 ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் (சா.ஆ. A-347) அனுமதி அளித்தபோதிலும், ஒருவேளை, அக்கிராமத்திலுள்ள செங்குந்தர்கள் ஆட்சேபணை தெரிவித்தாலோ என்னவோ, உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதாகக் கூறப்படுகிற வழக்கைக் குறிப்பிட்டு அதேநாள் மாலை, எற்கெனவே அவர் அளித்திருந்த அனுமதியைக் கடிதத்தின் மூலம் (சா. ஆ. A-354) ரத்து செய்தார். பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆறுபேருக்கு எதிரானதும் நீண்ட நாட்களுக்கு முன்னர் பிறப்பிக்கப் பட்டுள்ளதும் உரிமையியல் நடைமுறை விதிக் கோவையின் 8 ஆம் விதியைச் சேர்ந்த 1 ஆம் எண் ஆணையின் (Order 1, Rule 8 of the C. P. C.) விதித்துறைகளைப் பயன்படுத்தி, காலனி மக்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கும் தகுதியில் மேற்சொன்னவாறு பெயர் குறிப்பிட்ட ஆறுபேர்களிலிருந்து வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது; அந்த வழக்கு, இந்த வழக்கிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. செங்குந்தர்கள் பொதுவாக காலை 5 மணி முதல் 8-00 மணிக்குள் மேற்கொள்ளும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தாவண்ணம் அவர்களைத் தடை செய்வதாகவுள்ள மேற்சொன்ன A-3, A-4, தீர்ப்புகளையும், தீர்ப்பாணையையும், இந்து-சமய அறநிலையத் துறை துணை ஆணையரால் 37/1975 ஆம் எண் மூல மனுவில் முடிவு செய்து பிறப்பிக்கப்பட்ட கோயில்களும், தோப்பு உட்பட கோயில்களுக்கு உள்ள சொத்தும் பொதுவாக அனைத்து வகுப்பினரின் திருவாகத்தில் இருந்ததே ஒழிய முற்றிலும் செங்குந்தர் வகுப்பினரின் தனி திருவாகத்தில் இருக்கவில்லை என்ற ஆணையையும் (A-351, நாள் : 4—9—1976) அவற்றின் வரம்பெல்லை, பயன்பாடு ஆகியவற்றுக்கு உரியவாறு அறங்காவலர் கருதிப் பார்த்திருப்பாராயின், அவர் எற்கெனவே அளித்திருந்த அனுமதியை, தோப்பில் செங்குந்தர் மேற்கொள்ளும் நெசவுக்கு முந்தைய பணிக்கு எந்த வகையிலும் அது இடையூறாக இருக்காது என்பதால், ரத்து செய்திருக்க மாட்டார். 26—5—1992 அன்று என்ன நடந்தது என்பது குறித்து எந்தச் சாட்சியமும் தெரிவிக்கவில்லை என்று நான் அறிந்ததால், அறங்காவலரின் இத்தகைய முரண்பாடான செயலின் விளைவு குறித்து விவரிக்க வேண்டிய தேவையில்லை.

11. மீண்டும், 1992 அக்டோபர் மூன்றாம் வாரத்தில், பொன்னூர் புத்த தம்ம சங்கத்தின் கிளை அலுவலகத்தின் ஆதரவில் தரும தோப்புத் திடலில் 25—10—1992 அன்று மாலை 6-00 மணிக்கு கூட்டம் நடத்த இருப்பதாகவும், அக்கூட்டத்திற்கு அதன் மத்திய அமைப்பின் தலைவர் திரு. எம். சுந்தரராசனார் தலைமை வகிப்பார் என்றும், பொன்னூர் காலனிவாசிகள் சிலரும் அக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுவர் என்றும் அறிவித்து, அச்சிட்ட நோட்டிஸ் ஒன்று (சா.ஆ. A–342) பொன்னூர் அம்பேத்கார் மன்றத்தில் கொடுக்கப்பட்டு மற்றவர்களிடம் காட்டப்பட்டது. அக்கூட்டத்தை நடத்த அனுமதி பெறுவதற்காக எழுத்து மூலமான வேண்டுகோளுடன் (சா. ஆ. A–343) காலனி மக்கள் பிரதிநிதிகள், 25—10—1992 அன்று காலை வந்தவாசி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. விஜயகுமாரை (சா.எண் 47) அணுகினர். கோயில் அறங்காவலர் செய்தது போன்றே; காவல்துறை உதவி ஆய்வாளர் முதற்கண் அனுமதி வழங்கினார்; பின்னர், செங்குந்தர்கள் மறுப்பு (சா.ஆ. A–344) தெரிவித்ததன் பேரில் அன்று மாலை கிராமத்திற்குச் சென்று மேலோட்டமாக விசாரணை செய்து விட்டு அவர் ஆவணங்கள் எவற்றையும், அதாவது நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது கிராமக் கணக்குகள் எவற்றையும் பார்க்கவும் பரிசீலிக்கவும் இல்லை என்று அவரே ஒப்புக் கொண் டுள்ளார். கூட்டம் நடத்துவதற்காக அவர் முதலில் வழங்கிய அனுமதியைத் திரும்பப் பெற்றார். அவ்வாறிருந்தும், கூட்டம் நடத்துவதற்கான அனுமதி ரத்து செய்யப்பட்டதைப் புறக்கணித்து, காலனி மக்கள், பாட்டைப் புறம்போக்கு 334/1A ஆம் எண் நில அளவையின் களப்பகுதியில் கொடிக் கம்பம் ஒன்றையும், மேடை ஒன்றையும் அமைத்து, திட்டமிட்டவாறு, கூட்டத்தை நடத்த முற்பட்டனர். ஏதாவது தொல்லை நேரக்கூடும் என்று எதிர் நோக்கி, காவல் துறை உதவி ஆய்வாளர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. சுந்தரம் (சாட்சி எண் 52) அவர்களைத் (அப்போது அவர் செய்யாறில் துறைக் கூட்டம் ஒன்றில் இருந்தார்) தொடர்பு கொண்டார்; காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் உடனடியாக அக் கிராமத்திற்கு விரைந்து, காலனி மக்களிடம் எடுத்துக்கூறி, அக்கூட்டத்தைப் பாதியிலேயே நிறுத்தி விடுமாறு செய்தார். உயர் அதிகாரிகள் இது பற்றி கவனிப்பர் என்றும், அவர்களுக்கு நீதி வழங்குவர் என்றும், அவர்களுக்கு உறுதிமொழி அளித்ததன் பேரில், காலனி மக்கள், ஏற்கெனவே அமைத்த மேடை, அதில் பொருத்தப்பட்ட ஏனைய மின்சார சாதனங்கள், கொடிக் கம்பம் ஆகியவற்றை அங்கேயே விட்டுவிட்டு அந்த இடத்திலிருந்து கலைந்து சென்றனர். அடுத்த நாள் அதிகாலை, காவல் துறைக் கண்காணிப்பாளரும் வருவாய்த்துறை அதிகாரி களும் கிராமத்திற்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர்; பின்னர் அவர்கள் மேடையைப் பிரித்து அதில் பொருத்தப்பட்ட மின்சாதனங்களைக் கழற்றி அவற்றைக் காலனி மக்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டனர். மேற்சொன்ன பொருட்களுக்குச் சேதம் ஏற்பட்டதாக காலனி மக்கள் கூறிய குற்றச்சாட்டுகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவோ அவை குறித்துத் தொடர் நடவடிக்கை எடுக்கவோ இல்லை. செங்குந்தர்களும் காலனி மக்களும், அதன் பின்னர் நடைபெறவிருந்த அமைதிக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஒப்புக் கொண்டனர். இரண்டு பிரிவினருக்கும் இடையே மேலும் மோதல் எதுவும் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்து, அதற்கெதிராக எச்சரிக்கை நடவடிக்கையாகவும் பாதுகாப்பு நடவடிக்கையாகவும், அக்கிராமத்தின் முக்கிய இடங்களிலும் மோதல் நடைபெற வாய்ப்புள்ள இடங்களிலும் சில காவலர் குழுக்களை நிறுத்தி வைப்பதற்கு (ஒவ்வொரு காவல் குழுவிலும் தலைமைக் காவலர் ஒருவர், இரண்டு அல்லது மூன்று காவலர்கள் இடம் பெறுவது வழக்கம்) காவல் துறை உதவி ஆய்வாளர் (சாட்சி எண் 47) ஏற்பாடு செய்தார்.

12. உத்தேசிக்கப்பட்டவாறு, பொன்னூர் கிராமத்தின் வருவாய் அதிகார வரம்பைக் கொண்டிருந்த அப்போதிருந்த செய்யாறு மாவட்ட உதவி ஆட்சியர் (பொறுப்பு), 3—11—1992 அன்று வந்தவாசியில் அமைதிக் கூட்டம் ஒன்றை நடத்தினார்; அக்கூட்டத்தில், பொன்னூர் கிராமத்தின் செங்குந்தர்கள் மட்டும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டனர். பந்தோபஸ்து அளிக்கும் நோக்குடன், செய்யாறு காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. சுந்தரம் (சாட்சி எண் 52) வந்தவாசி காவல் நிலையத்தின் காவல் துறை ஆய்வாளர் (சாட்சி எண் 43) காவல் துறை உதவி ஆய்வாளர் (சாட்சி எண் 47) ஆகியோர் வந்திருந்த மேற்சொன்ன கூட்டத்தில், செங்குந்தர்கள் அவர்களுடைய உரிமைக் கோரிக்கையை அதாவது பாவுத் தோப்பின் உடைமை உரிமையும், அனுபோக உரிமையும் அவர்களுக்கு மட்டுமே உரியது என்பது குறித்து 1989 ஆம் ஆண்டு 591 ஆம் எண் அசல் மனு வழக்கிலும், 1991 ஆம் ஆண்டு 30 ஆம் எண் மேல்முறையீட்டு மனு வழக்கிலும் (ஏற்கெனவே குறிப்பிடப்பட்டன) சிவில் நீதிமன்றங்கள் உறுதி செய்துள்ளவாறான அவர்களுடைய உரிமைக் கோரிக்கையையும், மேற் சொன்ன உடைமை—அனுபோக உரிமையில், காலனி மக்கள் எந்தவொரு முறையிலும் தலையிடுவது குறித்து அவர்கள் (செங்குந்தர்கள்) தெரிவித்து வந்துள்ள மறுப்பையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார். அடுத்த நாள், அதாவது 4—11—1992 அன்று அத்தகைய கூட்டம் ஒன்று நடைபெற்றது; அதில் காலனி மக்களின் பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொண்டனர். இதற்கு முன்னர் நெடுங்காலமாக, ஓராண்டில் மூன்று அல்லது நான்கு முறை இரவு நேரங்களில் பாவுத் தோப்பில் வழிவழியாக நடைபெற்றுவரும் திருவிழாக்களையும், கூட்டங்களையும் அவர்கள் நடத்தியுள்ளனர் என்றும், பொதுவாக, காலை நேரங்களில் மட்டுமே, அதாவது, காலை 5-00 மணி அல்லது காலை 6-00 மணி முதல் காலை 8-00 மணி வரையிலான நேரங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிற செங்குந்தர்களின் நெசவுக் முந்தைய பணிகளில், மேற்சொன்ன அவர்களுடைய திருவிழாக்களும், கூட்டங்களும் எந்த முறையிலும் குறுக்கீடாக அமைந்ததில்லை என்றும் அக்கூட்டத்தில் அவர்கள் உறுதியாகக் கூறினர். இவ்வாறு, இருதரப்பாரும் ஒன்றுக்கொன்று முரணாக அமையும் விதத்தில் விடுத்த உரிமைக் கோரிக்கைகளை முடிவு செய்வதற்கான ஒரு முயற்சியாக, 7—11—1992 அன்று மேலும் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது; அக்கூட்டத்தில் செங்குந்தர்கள் மற்றும் காலனி மக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். துரதிருஷ்டவசமாக, அம்முயற்சி தோல்வியுற்றது: ஏனெனில், செங்குந்தர்களும், காலனி மக்களும் அவரவர் மேற்கொண்டிருந்த நிலையில்

நின்று தத்தம் கருத்தையே வலியுறுத்தினர். குறிப்பாக, காலனி மக்கள் ஒராண்டில் ஒரு சில நாட்களேனும் இரவு நேரங்களில் அவர்களுடைய திருவிழாக்களையும் கூட்டங்களையும் நடத்துவதற்கு அனுமதிக்குமாறு அதிகாரி விடுத்த வேண்டுகோளை செங்குந்தர்களின் பிரதிநிதிகள் ஏற்க மறுத்தனர்; மாறாக, பாவுத் தோப்பில், திருவிழா நடத்தவும் கூட்டம் கூடவும் காலனி மக்களை அனுமதித்தால், அவர்கள் மலஜலம் கழித்து திடலைப் பாழாக்கி விடுவர் என்றும், அதன் காரணமாக, நெசவுக்கு முந்தைய பணிகளில் பயன்படுத்தப்படுகிற பாவு நூல் எலிகளால் எளிதில் கடிபடுவதற்கு ஏதுவாகும் என்றும், செங்குந்தர்களின் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டினர். உண்மையைக்கூறின், செங்குந்தர்களின் பிரதிநிதிகள் அவர்கள் நீதிமன்றங்களில் நீண்ட காலமாகப் போராடிப் பெற்ற உரிமைகளை விட்டுக் கொடுக்க இயலாது என்று தெரிவித்துவிட்டு சட்டென்று கூட்டத்திலிருந்து வெளியேறினர் என்றும், இவை குறித்து மாவட்ட ஆட்சியர் முன்பு வைப்பதாகவும், 10—11—1992-க்குள் அவர் மேற்சொன்ன தகராறுக்குத் தீர்வு காண அவருடைய ஆலோசனையை வழங்குவார் என்றும் காலனி மக்களுக்கு உறுதி அளிக்கப்பட்டது. செங்குந்தர்களின் இணங்கிப் போகாத நிலையும் கூட்டத்திலிருந்து அவர்கள் வெளிநடப்புச் செய்ததும் காலனி மக்களின் மனதைப் பெரிதும் புண்படுத்தியது என்று தெரிய வருகிறது; பின்னர் அவர்கள் சகித்துக் கொள்ள முடியாத ஏமாற்றத்துடன் கூட்ட இடத்தை விட்டு வெளியேறி தங்கள் கிராமத்திற்குச் சென்றனர். அதன் பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள் பொன்னூர் கிராமத்தில் நடைபெற்றன.

13. அமைதிக் கூட்டங்களின்போது செங்குந்தர்கள் எடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பழிவாங்கும் நோக்குடன் பொன்னூர் கிராமத்தின் தொடக்கத்தில் அமைந்துள்ள ஆதி திராவிடர்களின் குடியிருப்புக்கு அருகில் 7—11—1992 அன்று மாலை நடைபெற்ற சில சம்பவங்களை ஆதி திராவிடர்கள் அவர்களுக்கு எதிராக உள்ள சில குற்ற வழக்குகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அவர்கள் அவற்றை மறுத்தபோதிலும் காவல் துறையினர் அதாவது திரு. பிரான்சிஸ் காவல் துறை உதவி ஆய்வாளர், பெரண மல்லூர் (சாட்சி எண் 27); திரு. நைனாதுரை காவல் துறை உதவி ஆய்வாளர், தெள்ளாறு, (சாட்சி எண் 31); திரு. துரைசாமி காவல்துறை காவலர் 648 (சாட்சி எண் 40) காவல் துறை ஆய்வாளர் திரு. தியாகராஜன் (சாட்சி எண் 43); காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. விஜயகுமார் (சாட்சி எண் 47) இவர்கள் அனைவரும் அச்சமயத்தில் வந்தவாசி காவல் நிலையத்தில் பணியாற்றியவர்கள். செய்யாறு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. சுந்தரம் (சாட்சி எண் 52) ஆகியோர் அளித்த வாக்குமூலங்களும் வைக்கப்பட்ட பதிவுக்களும் பின்வரும் தகவல்களைத் தெரிவிக்கின்றன.

வந்தவாசியில் நடைபெற்ற அமைதிக் கூட்டம் அரைகுறையாக முடிவடைந்த பிறகு அவர்கள் மாலையில் கிராமத்திற்குத் திரும்பி வந்தபோது, கிராமத்துக்குள் நுழையுமிடத்திலும் பொன்னூருக்குச் செல்லும் பிரதான இணக்காட்டு சாலையில் அமைந்துள்ள அம்பேத்கார் மன்றக் கட்டிடத்திற்கு அருகிலும் ஆதி திராவிடர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடி இருந்ததாகவும், வந்தவாசியிலிருந்து அக்கிராமத்திற்கு வரும் பேருந்துகளை மறித்ததாகவும் அந்தப் பேருந்துகளில் வந்தவர்களிடையே முதலியார் இனத்தைச் சேர்ந்தவர்களைத் தாக்குவதற்காக, அதிலும் குறிப்பாக அமைதிக் கூட்டத்தில் முதலியார் நலனுக்காக வாதாடிய (அவர் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்) வழக்கிநிஞரான திரு. செல்லபெருமாளைத் தாக்குவதற்காக அவர்கள் தேடியதாகவும் கூறப்பட்டது. அச்சமயத்தில் திரு. செல்லபெருமாளுக்குப் பதிலாக, அவருடைய தம்பி மாணிக்கவாசகம் அதற்குப் பேருந்துகளில் ஒன்றில் கிராமத்திற்குத் திரும்பி வர நேர்ந்தது; கூடியிருந்த ஆதி திராவிடர்கள் கும்பல் அவரைத் தாக்கியதன் விளைவாக அவருக்கு உடலில் காயங்கள் ஏற்பட்டன. வன்னியர் இனத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் தாக்கல் செய்த வாக்குமூலமான, சான்றுரைவாண் A-289-ல் இச்சம்பவமும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. செய்யாற்றில் நடைபெற்ற இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடனும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தெரிவித்தவாறும், காவல் துறை ஆய்வாளர் தியாகராசன் (சாட்சி எண் 43) தன்னுடன் காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. இராமன் (சாட்சி எண் 34), தெள்ளாறு காவல் துறை உதவி ஆய்வாளர் நைனாதுரை (சாட்சி எண் 31) வடவணக்கன்பாடி காவல் துறை உதவி ஆய்வாளர் கோவிந்தசாமி (இவர் விசாரணை செய்யப்படவில்லை) ஆகியோர் உடன்வர டிரக் ஒன்றில் பொன்னேரி கிராமத்திற்கு விரைந்து சென்றார். அவர்கள் அப்பேத்கார் மன்றத்தை நெருங்கியபோது, போராட்டம் நடத்திக் கொண்டிருந்த அதி திராவிடர்கள் அவர்கள் டிரக்கை நிறுத்தி அதனைச் சூழ்ந்து கொண்டனர்; அவர்கள் காவல் துறையினரை இழிவாகப் பேசி கம்புகளையும், கம்பிகளையும் வைத்து அங்கும் இங்கும் காவலர்களைத் தள்ளினர். சாலை விளக்குகளும் தொலைபேசி இணைப்புகளும் பயன்படுத்தப்பட இயலாமல் துண்டிக்கப் பட்டிருந்தன. அதே வேளையில், இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டு, ஏற்கெனவே அங்குள்ள கிராம ஊராட்சி அலுவலகத்தில் முகாமிட்டிருந்த காவல் துறை உதவி ஆய்வாளர் விஜயகுமார் (சாட்சி எண் 47) வட்டாட்சியர், ஏனையோர் அந்த இடத்திற்கு விரைந்தனர்; போராடிக் கொண்டிருந்த கும்பலுடன் காவல் துறையினரை விட்டுவிடுமாறு வாதாடி வெற்றி பெற்றனர்; அதன் பின்னர் 43 ஆம் எண் சாட்சியும், ஏனையவர்களும் கிராம ஊராட்சி அலுவலகத்தை அடைந்தனர்.

14. மீண்டும், மாலை சுமார் 6-30 மணிக்கு, காவல்துறை ஆய்வாளர் (சாட்சி எண் 43) தெரிவித்தவாறு திரு. பிரான்சிசும் (சாட்சி எண் 27), காவலர் துரைசாமியும் (சாட்சி எண் 40) முன்னவர் மோட்டார் சைக்கிளை ஓட்ட, பின்னவர் பின்புற இருக்கையில் அமர்ந்திருக்க அம்பேத்கார் மன்றத்திற்கு அருகிலுள்ள பிரச்சினைக்குரிய பகுதியை அடைந்தனர். உடனே அங்கு கிளர்ச்சி செய்து கொண்டிருந்த ஆதி திராவிடர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்; அப்படிச் சூழ்ந்து கொண்ட ஆதி திராவிடர்கள் காவலர்களைத் தாக்கி காவலர்களின் சீருடைகளைக்

கிழித்ததுடன், உடலிலும் காயங்கள் ஏற்படுத்தினர். அவர்கள் இருவரையும் விடுவித்தப்பின்னர் அவர்கள் தடுத்து நிறுத்திய காவல் துறை உதவி ஆய்வாளர் அவர்கள் தேடிக் கொண்டிருக்கும் வந்தவாசியைச் சேர்ந்த காவல் துறை உதவி ஆய்வாளர் விஜயகுமார் அல்ல என்றும், அவர் வேறு ஒருவர் என்றும் தெரிந்தவுடன் அக்கும்பல் அவர்கள் இருவரையும் விட்டுவிட்டனர். கிளர்ச்சி செய்து கொண்டிருந்த கும்பல் கட்டளையிட்டவாறு, அவர்கள் அந்த மோட்டார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு கிராமத்திற்கு நடந்து சென்றனர். இச் சம்பவத்தைப் பற்றி திரு. பிரான்சிஸ் (சாட்சி எண் 27), துரைசாமி (சாட்சி எண் 40) ஆகியோர் விரிவாகக் கூறியுள்ளனர். இதனை 731/1992 ஆம் எண் குற்றவியல் வழக்கின் முதல் தகவல் அறிக்கையும் (சான்றாவணம் A-320) இந்த முதல் தகவல் அறிக்கை, பின்னர் திரு. பிரான்சிஸ் (சாட்சி எண் 27) காவல் துறை உதவி ஆய்வாளரிடம் (சாட்சி எண் 47) கொடுத்த முதல் தகவல் அடங்கிய அறிக்கையாகும். வந்தவாசி அரசு மருத்துவமனையில் அவர் தனது காயத்திற்குச் சிகிச்சை பெற்ற பின்னர் அவருக்கு கொடுக்கப்பட்ட புறநோயாளி சிகிச்சைச் சீட்டும் (சான்றாவணம் A-128) ஒத்துக் கூறி உறுதி செய்வனவாக உள்ளன. வந்தவாசி, அரசு மருத்துவமனை, சிவில் உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவரான டாக்டர் இராமலிங்கம் (சாட்சி எண் 22) வழங்கிய மருத்துவ சான்றிதழின் (சான்றாவணம் A-129) அடிப்படையில் 8—11—1992 ஆம் நாள் பிற்பகலிலிருந்து திரு. பிரான்சிஸ் (சாட்சி எண் 27) மருத்துவ விடுப்பில் சென்றதாகவும் தெரிவித்துள்ளார்; முதலியார் வகுப்பைச் சேர்ந்த திரு. காண்டீபன் என்பவர் இரவு சுமார் 8.00 மணிக்கு ஊராட்சி அலுவலகத்திற்கு இரத்தக் காயங்களுடன் வந்ததாகவும் தன்னை, ஆதி திராவிடர்கள் தாக்கியதாக அவர் தம்மிடம் வாய் மொழியாகத் தெரிவித்தார் என்றும் காவல் துறை ஆய்வாளர் (சாட்சி எண் 43) கூறியுள்ளார். சிகிச்சைக்காக வந்தவாசி அரசு மருத்துவமனைக்குச் செல்லுமாறும், காவல் துறை உதவி ஆய்வாளரிடம் அச் சம்பவத்தைப் பற்றிப் புகார் ஒன்று எழுதிக் கொடுக்குமாறும் சாட்சி எண் 43 அவருக்குக் கட்டளை பிறப்பித்தார். வன்னியரான திரு. அரங்கநாதன் தாக்கல் செய்த உறுதிமொழிப்பத்திரத்திலும் (சான்றாவணம் A-291) காண்டீபன் தாக்கப்பட்ட சம்பவம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள் தூண்டுதலின்பேரில் வள்முறைச் சம்பவங்கள் நடந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், மேலும் விரும்பத் தகாத சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கவும், நிலைமையைக் கண்காணிக்கவும் 25 காவலர்கள், 5 தலைமைக் காவலர்கள், 4 உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் அடங்கிய காவலர் குழுவுடன் காவல் துறை ஆய்வாளர் (சாட்சி எண் 43) அன்று இரவு அக்கிராமத்திலேயே தங்கியிருந்தார். ஆய்வாளர் (சாட்சி எண் 43) அவர்களின் கூற்றுப்படி, செங்குந்தர்கள் மீது ஆதி திராவிடர்கள் இதற்கு முன் நடத்திய தாக்குதல்கள் பொன்னூர் கிராம செங்குந்தர்கள், சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் செங்குந்தர்களின் ஆதரவுடன் எதிர்த்து தாக்குதல் நடத்தத் தூண்டக்கூடும் என்று அவர் (ஆய்வாளர்) அஞ்சி சுற்றியுள்ள கிராமங்களில் அவர் சோந்து சுற்றி வந்தார். அவ்வாறு அவர் சோந்து சுற்றி வந்ததால், மேற்கொண்டும் அசம்பாவிதங்கள் நிகழாமல் தடுக்கப்பட்டது ; 7—11—1992 ஆம் நாள் இரவு முழுவதும் பொன்னூர் கிராமத்தில் முழுமையாக அமைதி நிலவியது. பெரும்பாலும் 7—11—1992 ஆம் நாள் இரவு பந்தோபஸ்து பணியில் இருந்த அனைத்து காவல் துறை பணியாளர்களும் செங்குந்தர்களின் ஒரே சாட்சியான (சாட்சி எண் 20) திரு. லோகநாதன் என்பவரும் அன்று இரவு அக்கிராமத்தில் அமைதி நிலவியது என்ற மேற்சொன்ன தகவலைத் தங்கள் சாட்சியங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

15. 7—11—1992 அன்று நிலவிய அமைதியை நிரந்தர அமைதி ஏற்பட்டுவிட்டதாகக் கருதி மறுநாள் காலை மேற்கொண்டும் துணைக்குக் காவற்படையைக் கோரி பெறாமல் காவல் துறை ஆய்வாளர் (சாட்சி எண் 43) இருந்துவிட்டார். ''இந்த அமைதி புயலுக்கு முன் காணப்பட்ட அமைதியே'' என்பதை பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் மெய்ப்பித்தன. 7—11—1992 ஆம் நாள் மாலையிலிருந்து நீறுபூத்த நெருப்பாக இருந்த ஆதி திராவிடர்களின் உணர்வுகளை யாரும் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை. அந்தக் காலனியில் உள்ள ஆதி திராவிடர்கள் சமூக ரீதியில் தாங்கள் சாதி இந்துக்களுக்குச் சமமாக நடத்தப்பட வேண்டுமென்ற அவர்களின் ஆவல் கூடேறும் வகையில் கிராமக் கோயிலுக்குச் சொந்தமான பாவுத் தோப்பில், அல்லது அரசுக்குச் சொந்தமான பாட்டைப் புறம்போக்கில் தெருக்கூத்து, பரம்பரை விழாக்கள், கூட்டங்கள் முதலியவற்றை நடத்த வேண்டுமென்ற அவர்களின் நோக்கம் நிறைவேறவில்லையே என்பது தொடர்பாக, அவர்களுக்குள் கணிசமான அளவிற்கு மனக்குறை ஏற்பட்டிருந்தது. அந்தக் கிராம செங்குந்தர்களிடையே நிலவிய உயர் சாதி உணர்வும், ஆதி திராவிடர்கள் தொடர்பாக அவர்கள் கொண்டிருந்த இயல்பான வெறுப்பு புணர்வும், அவமதிப்பு உணர்வும் பாவுத் தோப்பில் சில நாட்களுக்கேனும் கூட்டங்களையும் விழாக்களையும் நடத்த ஆதி திராவிடர்களுக்கு இருந்த சட்டப்படியான உரிமையை அவர்களுக்கு வழங்க மறுக்க அவர்களைத் தூண்டுவதாக அமைந்தன என்று ஆதி திராவிடர்களின் வழக்குரைஞர் திரு. ரவி தெரிவித்துள்ளார். பாவுத் தோப்பு தொடர்பாக, ஒரு பக்கம் செங்குந்தர்களுக்கும் மற்றொரு பக்கம் அக்கிராமத்தில் வாழும் வன்னியர்கள், யாதவர்கள் போன்ற சாதி இந்துக்களுக்குமிடையே கடந்த காலத்தில் இருந்து வந்த பல்வேறு வழக்குகளிலிருந்து பெறப்பட்ட அனைத்துத் தகவல்களையும் கவனமாக பரிசீலித்ததில், பொன்னூர் கிராமத்தில் செங்குந்தர்களுக்கும், ஆதி திராவிடர்களுக்குமிடையே சாதி வேறுபாட்டு உணர்வோ வெறுப்போ பகைமையுணர்வோ காரணமாக இருந்தன என்று கூறுவதற்கு யாதொரு ஆதாரமும் இல்லை. உண்மையான நிலை என்னவெனில், பாவுத் தோப்பை அனுபவிக்க வேண்டுமென தற்போது கோருபவர்கள், இரண்டு பிரிவுகளைச் சார்ந்தவர்கள் அவர். அவர்கள் ஒவ்வொருவரும் வேறு வேறு வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். உரிமையியல் தகராறுகளுள் ஒன்றில், வன் முறை உருவாகும் வகையில் மேற்கொள்ளும் சட்ட விரோத நடவடிக்கைகளின் விளைவுகளைத் தவிர்க்க வேண்டி, இதில் அக்கறை கொண்ட சிலர், பொதுமக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற வேண்டுமென்ற நோக்கத்தில், வகுப்புவாத பிரிவினை மோதல் என்ற காரணத்தைக்

கூறி, இத்தகைய துரதிருஷ்டமான குழ்நிலை ஒரு கருவியாக அமைந்துவிட்டது. மேலே விவரித்துக் கூறப்பட்ட தகவல்கள் 8—11—1992 ஆம் நாளன்று காலை நடைபெற்றதாகக் கூறப்பட்ட இரு வகுப்பினர்களுக்கிடையேயான மோதல் ஏற்படுவதில் சென்று முடிந்த குழ்நிலைகளையும், காரணங்களையும் அவை நிகழ்ந்த காலக்கிரமப்படி, வரிசையாக விளக்கிக் கூறுகின்றன. ''இரு வகுப்பினர்களுக்கிடையேயான மோதல்'' என்பதைக் குறிப்பிடும் போது நடைபெற்றதாகக் ''கூறப்பட்ட'' என்ற சொற்களை நான் வலிந்து பயன்படுத்தி யுள்ளேன். எனினில், வழக்கு விசாரணையின்போது, இருவேறு முரண்பட்ட கூற்றுகள் குறித்துப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. ஒன்று பாவுத் தோப்பில் '' இருவகுப்பினர்களுக் கிடையே மோதல்'' நடைபெற்றது என்பது பற்றியது; மற்றொன்று 8—11—1992 ஆம் நாளன்று காலை காலனிக்குள், நிராயுதபாணிகளான ஆதி திராவிடர்களை, காவல் துறை யினரும், செங்குந்தர்களும், எவ்விதக்காரணமுமின்றி தாக்கினர் என்பது பற்றியது.

பகுதிகள் II, III, IV.

16. பார்வையில் உள்ள இந்த மூன்று பகுதிகள், 8—11—1992 ஆம் நாளன்று காலை காவல் துறையினர் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பது தொடர்பானதாகும். இதில், அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவசியமானதுதானா என்பது குறித்தும், ஆமெனில், அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறைந்த அளவினதாக, மிகையாக இல்லாமல் இருந்ததா அல்லது செங்குந்தர்களின் தூண்டுலின் பேரில் அவர்கள் (காவல் துறையினர்) ஆதி திராவிடர்களைத் திட்டமிட்ட முறையில் தாக்கி, அவர்களின் (ஆதி திராவிடர்கள்) சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தினர் என்பதை மெய்ப்பிக்க ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்பது குறித்தும், காவல் துறையினர் தேவையற்ற நிலையில் மிகையாக நடந்து கொண்டனர் என்று கூறத்தக்க வகையில் ஏதேனும் நடைபெற்றுள்ளதா என்பது குறித்தும், முடிவு செய்ய வேண்டியுள்ளது. (i) பகுதியில் உள்ள பிரச்சினை, செங்குந்தர்கள், ஆதி திராவிடர்களுக்கிடையே நடைபெற்ற வகுப்பு மோதல், சண்டையிட்டுக் கொண்டிருந்த வகுப்பினர்களைக் கலைத்து போகச் செய்ய காவல் துறையினர் மேற்கொண்ட பலப்பிரயோகம் ஆகியவை தொடர்பானவையாக இருக்கையில், (ii) பகுதி, அன்று காலை ஆதி திராவிடர்கள் அவர்களுடைய காலனியில் அமைதியான முறையில் அவர்களுடைய அன்றாடப் பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தபோதிலும் கூட, காவல் துறையினர், செங்குந்தர்களின் தூண்டுதலின் பேரில், ஆதி திராவிடர்களைத் திட்டமிட்ட முறையில் தாக்கி, அவர்களின் சொத்துக்குச் சேதத்தை ஏற்படுத்தினர் என்ற ஆதி திராவிடர்களின் கூற்று தொடர்பானதாகும். பகுதி (iv)-ல் எடுக்கக் கூடிய முடிவானது (ii), (iii) பகுதிகள் குறித்து எடுக்கப்படும் முடிவுகளின் ஆடிப்படையிலும், அவற்றின் விளை வாகவும் அமையக்கூடியதாக இருக்கும். எனவே, பொன்னூர் கிராமத்தில் 8—11—1992 ஆம் நாளன்று காலையில் உண்மையில் என்ன நிகழ்ந்தது என்பதைப் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டியுள்ளது.

17. தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டது போல, 8—11—1992 ஆம் நாளன்று, காலையில் நடந்த சம்பவம் பற்றி 19 சாட்சிகளை ஆதி திராவிடர்கள் விசாரித்தனர். அவர்கள் அனைவரும் ஒரே குரலில் பின்வருமாறு சாட்சியளித்தனர். ஆதி திராவிடர் காலனியில் அவரவர்தம் வீடு களிலும் பிற இடங்களிலும் தங்களது வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தனர். காலனி அமைதியாக இருந்தது. அப்போது, காவல் துறை அய்வாளர் தியாகராஜன் (சாட்சி எண் 43), உதவி ஆய்வாளர் விஜயகுமார் (சாட்சி எண் 47) ஆகியோர் தலைமையில் பெரும் எண்ணிக்கையிலான காவலர்களும், செல்வம் (த/பெ. மண்ணு முதலியார்) பொன்னூர் ஊராட்சி முன்னாள் தலைவர் தலைமையில் செங்குந்த முதலியார்கள் சிலர் தடி, கம்புகள் போன்ற ஆயுதங்களுடன் 10 அல்லது 15 பேர் கொண்ட பல குழுக்களாக காலனிக்குள் வேகமாக வந்து செங்குந்தர்கள் கட்டிக்காட்டிய பல வீடுகளுக்குள் புகுந்து, அங்குள்ளவர்களை ''அரிசனங்கள்'' என்று சாதியைக் குறிப்பிட்டுப் பழிதூற்றும் வகையில் இழிவான சொற் களால் குறிப்பிட்டும், பாவுத் தோப்பில் உரிமை கொண்டாடுவது குற்றம் எனக் கூறியும் ஆண்-பெண் என்று பார்க்காமல், வயது, உடல் நிலை, ஏலாமை ஆகிய பாகுபாட்டையும் கூடக் கருதாமல், ஆயுதங்களைக் கொண்டு கண்மூடித்தனமாகத் தாறுமாறாகத் தாக்கினர். வீட்டுச் சாமான்களையும், தானியங்களையும், மின்சாரப் பொருள்கள் முதலியவை போன்ற சொத்துக்களையும் சேதப்படுத்தினர். கால்நடைகளை அவிழ்த்து ஓட்டிவிட்டனர் ; அவர்கள் வைத்திருந்த பணத்தையும் நகைகளையும் எடுத்துச் சென்றனர். காவல் துறையினர் மீதான குற்றச்சாட்டில், கிராமப் பெண்களைத் தொந்தரவு செய்தது, மானபங்கப்படுத்தியது ஆகிய செயல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. காவல் துறையினர் சாராயத்தை நன்றாகக் குடித்து குடி போதையில் இருந்ததாகவும், சாட்சிகளில் சிலர் தெரிவித்தனர். சுருக்கக்கூறின், காவல் துறை ஆய்வாளர் தியாகராஜன் (சாட்சி எண் 43) தலைமையிலான காவல் துறைப் பணியாளர்களும், செல்வம் என்பவரின் தலைமையிலான செங்குந்தர்களும், வன்முறையைப் பயன்படுத்தி, கொள்ளையடித்தது, அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடும் தீங்கு விளையும் வகையில் மிகப் பெரும் அளவில் கொடிய குற்றங்களைப் புரிந்தது, குறும்பு செய்தது, பெண்களை மான பங்கம்படுத்தும் வகையில் அவர்களைத் தாக்கியது ஆகிய குற்றச்சாட்டுகள் அவர்கள்மீது கூறப்பட்டுள்ளன. காவல் துறையினர் கட்டுப்பாடற்ற தறிக்கெட்டு. ஆதி திராவிடர்களைக் கொடுமைப்படுத்தி, காயமுற்ற ஆண்கள் பெண்கள் உட்பட 73 பேருக்கும் மேற்பட்டவர்களை

காவல் துறைக் காவலில் வைக்க முற்பட்டனர். பின்னர், அவர்களை வந்தவாசி காவல் நிலையத் திற்கு அனுப்பி வைத்தனர். அங்கேயும் கூட, காயமுற்றவர்களைக் காயங்களின் கடுமைத் தன்மைப் பற்றி கவலைப்படாமல், மேலோட்டமாக சிகிச்சைக்காக வந்தவாசி அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பும் முன்னர் அடித்து, கண்படி திட்டினர் என்று இந்தச் சாட்சிகள் மேலும் தெரிவித்தனர். கிராமப் பெண்களைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லும் முன்னர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போதும், பிறகு திரும்ப அழைத்து வந்த போதும் அவர்களைக் கண்படி திட்டி அடித்தனர் என்றும், பின்னர் ஊர் முக்கியஸ்தர்கள் சிலர் தலையிட்டின் பேரில், அவர்களை விடுதலை செய்து அன்று இரவு கிராமத்திற்குத் திரும்பக் கொண்டு வந்து விட்டனர் என்றும் அந்தச் சாட்சிகளில் சிலர் தெரிவித்தனர். பொன்னூர் காலனியைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் சிலர் காலனியில் குடியிருப்பவர்கள், வெளியிலிருந்து வந்த அவர்களுடைய ஆதரவாளர்கள் ஆகியோர் தாக்கல் செய்த A-131 முதல் A-253 வரையிலுள்ளவை மற்றும் A-286 ஆகிய சான்றாவணங்களான உறுதி மொழிப் பத்திரங்களில் கூறப்பட்டுள்ளவை, மேலே விவரிக்கப்பட்டுள்ள அதே கருத்தைப் பெரும் பாலும் ஒத்துள்ளன என்பதை ஈண்டு நான் குறிப்பிடுவது அவசியம் ஆகும். விசாரணையின் போது, விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் சிலரும், உறுதி மொழிப் பத்திரங்களில் சாட்சியம் தெரிவித்திருந்த சிலரும் முக்கியமாகப் பொன்னூர் காலனி ஆதி திராவிடர்கள் விழாக்களும், கூட்டங்களும் நடத்துவதற்குப் பாவூத் தோப்பின் அனுபோக உரிமையைப் பெற்றுத் தரக் கோரியும், அவர்களில் சிலர், அட்டுழியங்களில் ஈடுபட்ட காவல்துறையினர் மற்றும் செங்குந் தர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் இருக்கையில், அவர்களில் பலர் உடலாலும் உள்ளத்தாலும் பொருளாலும் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்காக பொருளாக இழப்பீடு வழங்கக் கோருவதுடன் நிறுத்திக் கொண்டனர். சம்பவம் நடந்த இடம், குற்றலை ஆகியவை எவ்வாறிருந்தபோதிலும், அவர்கள் உடலில் காயம் ஏற்படுத்தியது யாராக இருப்பினும், காலனியைச் சேர்ந்தவர்களில் 20 பெண்கள் உட்பட, 73 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு உடலில் காயங்கள் ஏற்பட்டிருப்பது, கிடைக்கப்பெற்ற பதிவேட்டிலிருந்து தெரிய வருகிறது. உறுதி மொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்து அதன் வாயிலாக சாட்சியம் அளித்திருந்தவர்களில் பலரும் கூட தாங்கள் காயமுற்றதாகத் தெரிவித்தனர். ஆனால், அவர்கள் உடலிலிருந்த காயங்களின் தன்மை பற்றியும், அவர்களுக்கு அளிக்கப்பெற்ற சிகிச்சைப் பற்றியும் மெய்ப் பிக்கும் வகையில் ஆவணங்கள் எதையும் அளிக்கவில்லை.

18. காவல் துறை அய்வாளர் தியாகராஜனும் (சாட்சி எண் 13), 8-11-1992 அன்று அதிகாலை சுமார் 5-00 அல்லது 5-30 மணியிலிருந்து அவருடன் இருந்த காவல் துறை யினரும் அளித்த வாக்குமூலத்தின்படி செங்குந்தர்கள் சிலர் நெசவுக்கு முந்தைய பணிகளைப் (பாவு போடுதல்) தொடங்குவதற்காக பாவுத் தோப்புக்கு வந்ததாகவும், முந்தைய நாள் மாலை யில் நடந்த சம்பவங்களைக் கருத்தில் கொண்டும், அசம்பாவிதம் ஏதேனும் நிகழ்ந்தால் அதனைத் தவிர்க்கவும், காவல் துறை அய்வாளர் (சாட்சி எண் 43) அன்று காலை பாவு போடாதிருக்கு மாறு மேற்படி செங்குந்தர்களை ஒப்புக் கொள்ளச் செய்ய முயன்றார். ஆயினும், மேற்படி செங்குந்தர்கள் ஏற்கெனவே பாவு போடுவதற்கு, நூல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த தாகவும், அன்று காலையில் பணியைத் தொடங்கவில்லையானால், அவை சேதம் அடைந்து விடும் என்றும் கூறி, அய்வாளரின் அறிவுரையை ஏற்க மறுத்து விட்டனர். இப்பணிக்காக இன்னும் செங்குந்தர்கள் பலர் பாவுத் தோப்பிற்கு வந்துகொண்டிருந்த நிலையில், சிறுகும்பலாக ஆதி திராவிடர் சிலரும், அவர்களுடைய காலனியிலிருந்து வந்து, அத்தோப்பில் செங்குந்தர் களின் நடவடிக்கைகளைக் கண்டனர். அவர்கள் தங்கள் காலனிக்குத் திரும்பிச் சென்றனர். பிறகு அவர்கள் கம்புகளுடனும், சங்கிலியுடனும் எனைய ஆயுதங்களுடனும், பெருமளவில் ஆண்களும் பெண்களும் வயதானவர்களும் இளைஞர்களும் காலனியையும் தோப்பையும் இணைக்கும் இளங்காட்டுச் சாலை வழியாகவும் பல கிளைச் சந்துகள் வழியாகவும் மீண்டும் வந்தனர். இதற்கிடையே ஏற்கெனவே காலனியிலிருந்து ஒரு சில ஆதி திராவிடர்கள் வந்து செங்குந்தர்கள் பாவு போடுவதைப் பார்த்துவிட்டுத் தங்கள் காலனிக்கு வேகமாகத் திரும்பிச் சென்றதைப் பார்த்து பிரச்சினை ஏதேனும் எழக்கூடும் என்று அஞ்சிய காவல் துறை அய்வாளர் (சாட்சி எண் 43), '' ஒயர்லஸ் '' சாதனம் செயல்படாததாலும், அக்கிராமத்திலிருந்த ஒரே தொலைபேசியையும், முந்தைய நாள் மாலையே பயன்படுத்த முடியாதபடி செய்து விட்டதாலும் வந்தவாசியிலுள்ள அவருடைய மேலதிகாரியுடன் தொடர்பு கொள்ள எவ்வித வழியும் இல்லாததால், அய்வாளர் அவருடைய ஓட்டுநர் மோகனை (சாட்சி எண் 45) மேலும் அதிக அளவிலான காவலர்களை அழைத்து வருவதற்காக வந்தவாசிக்கு அனுப்பியதுடன், அக்கிராமத்தில் வெவ்வேறு இடங்களில் காவல் பணிக்கு முன்னரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல்துறைப் பணியாளர்களை அவர் வைத்திருந்த ஊது குழலை ஊதி பாவுத் தோப்பில் தற்காலிகக் காவல்படையாக நிறுத்தும் பொருட்டு வரவழைத்தார். தோப்பைப் பயன்படுத்து வதிலிருந்து, ஆதி திராவிடர்களைத் தடுத்ததுபோல், செங்குந்தர்களையும் தோப்பைப் பயன் படுத்துவதிலிருந்து தடுக்க வேண்டும் என்று குரலெழுப்பிக்கொண்டு, பெருமளவில் ஆதி திரா விடர்கள் கையில் ஆயுதங்களுடன் தோப்பை அணுகியபோது, தோப்பிற்குள் நுழைய வேண்டாம் என்றும் அவர்களுடைய கோ க்கைள் பரிசீலிக்கப்படும் என்றும் இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதால் விரைவில் அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்றும் அய்வாளர் (சாட்சி எண் 43) அவர்களைக் கேட்டுக் கொண்டார். இந்த வேண்டு கோளைப் புறக்கணித்துவிட்டு ஆதி திராவிடர்கள் தொடர்ந்து தோப்பை நோக்கி முன்னேறினர். அதற்குள்ளாக ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் அடங்கிய பெருமளவிலான செங்குந்தர் களும் தோப்பிற்குள் வந்து சேர்ந்து ஒன்று கூடினர். அய்வாளரும் (சாட்சி எண் 43) வேறி டங்களில் காவல் பணியிலிருந்து அங்கு வந்திருந்த எனைய காவலர்களும் ஆதி திராவிடர்கள் மற்றும் செங்குந்தர்கள் ஒருவருக்கொருவர் நேரடியாக மோதிக்கொண்டு விடாமல் லத்திகளால் அவர்களைத் தள்ளியும் சிறிது பலாத்காரத்தைப் பயன்படுத்தியும் அவர்களைத் தடுக்க

முயன்றனர்; அந்த நிலையில், சில ஆதி திராவிடர்கள் காவல் துறையினரை மீறிக்கொண்டு தோப்பிற்குச் சென்று அதுவரையில் போடப்பட்டிருந்த '' பாவை '' தேதப்படுத்தி, பாவு போடப் பயன்படுத்தப்பட்ட கடப்பாறை, கம்புகள், ஏனைய பொருட்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, காவல் துறையினரையும் செங்குந்தர்களையும் அவற்றைக் கொண்டும் கற்களைக் கொண்டும் தாக்கினர். செங்குந்தர்கள் அவர்களுடைய பங்கிற்கு ஆதி திராவிடர்களை கற்கள், கம்புகள் முதலியவற்றால் தாக்கிப் பதிலடி கொடுத்தனர். இரு தரப்பினரும் ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டதில், பத்து காவல் துறையினர் (விபத்துப் பதிவேட்டில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு சான்றாவணம் A-15 லிருந்து A-23 வரை மற்றும் சான்றாவணம் A-126 சாட்சிகள் எண்கள் 36, 37, 43, 45, 46, 48, 51 மேலும் விசாரிக்கப்படாத வேறு சிலரும்) கல்லடி பட்டுக் காயமடைந்தனர். தொடர்ந்து நடைபெற்ற கட்டுப்படுத்த முடியாத மோதலில் ஆதி திராவிடர், (ஆதி திராவிடர்கள் தரப்பில் சாட்சி எண்கள் 1 முதல் 9, 12, 13, 16, 19 மேலும் விசாரிக்கப்படாத பலரும், விபத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களும் (சான்றாவணம் A-25,A-27, A-28, A-32, A-33, A-36 முதல் A-40, A-42 முதல் A-51, A-57 முதல் A-59, A-61, A-63 முதல் A-73, A-75 முதல் A-77, A-80 முதல் A-83, A-85 முதல் A-89, A-97 முதல் A-101, A-103, A-104. A-106 முதல் A-118, A-120 முதல் A-122, A-124, A-125, A-302, A-306, A-309, A-310, A-311, A-314, A-130, A-305, A-307, A-312, A-318) செங்குந்தர். (செங்குந்தர்கள் தரப்பில் எவரும் விசாரணை செய்யப்படவில்லை ; ஆனால் விபத்துப் பதிவேட்டில் சான்றாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர். சா.ஆ. A-52 முதல் A-56, A-60 முதல் A-62, A-74, A-78, A-91, A-95, A-96, A-34, A-93, A-94, A-92, A-41, A-35, A-84, A-304, A-123) ஆகிய இரு தரப்பிலும் சுமார் 104 பேர் காயமடைந்தனர் என்று அய்வாளர் (சாட்சி எண். 43) மேலும் தெரிவித்துள்ளார். மோதலைத் தொடர்ந்து, இரு தரப்பினரையும் தனித்தனியாகப் பிரித்து விடுமாறு மட்டுமே அய்வாளர் அவருடைய காவலர்களுக்கு ஆணையிட்டிருந்த போதிலும், அவருடைய காவலர்களில் சிலர் ஒரளவு தடியடி செய்திருக்கக்கூடும் என்றும், அதனால் இரு தரப்பின ருக்கும் சிறு காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பிருக்கிறது என்பதையும் மறுக்க இயலாது என்று அய்வாளர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். தானும் வேறு சிலரும் உண்மையில் மோதிக் கொள்ளும் இரு கும்பலைக் கலைக்க குறைந்த அளவில் தடியடி செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது என்று காவலர் குணசேரன (சாட்சி எண். 37) தெரிவித்துள்ளார்.

19. இவ்வாறு மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், வந்தவாசியிலிருந்து வேன் களில் ஆயுதம் தாங்கிய காவல் படையுடன் (எச்சரிக்கையுணர்வுடன் இக்காவல் படை முன்னதாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது) சம்பந்தப்பட்ட இடத்திற்குக் காவலர்படை துணைக் கண்காணிப்பாளர் திரு. சுந்தரம் (சாட்சி எண். 52) வந்தார். காவலர்கள் பெருமளவில் வந்ததும், மோதலில் ஈடுபட்டிருந்த ஆதி திராவிடர்களும் செங்குந்தர்களும் பதற்றத்தில், ஒருவர் மீது ஒருவர் முட்டி மோதித் தடுமாறிக் கொண்டு அந்த இடத்திலிருந்து தலை தெறிக்க வேறு வேறு திசை நோக்கி ஓடத் தொடங்கினர். காவல் துறை துணைக் கண்காணிப்பாளரும் அய்வாளரும், ஏனைய காவல் துறையினரும் அவர்களை மீறிய இரு தரப்பினர்களையும் சேர்ந்தவர்களைச் (ஆண்கள், பெண்கள்) சுற்றி வளைத்துப் பிடித்தனர். மோதலில் காய மடைந்தவர்களையும், சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தவர்களையும், காவல் துறை வேனில் ஏற்றி, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காகவும், காயமுற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காகவும் வந்தவாசிக்கு அவர்களை அழைத்துச் சென்றனர். மேலும் இப்பணியில் ஈடுபட்டிருந்த அய்வாளரும் (சாட்சி எண். 43) வேறு சில காவல்துறைப் பணியாளர்களும் அதாவது தென்னாறு உதவி அய்வாளர் நைனாதுரையும் (சாட்சி எண். 31), தேசூர் உதவி அய்வாளர் முனிராமனும், (சாட்சி எண். 34), தலைமைக் காவலர் பிச்சாண்டியும் (சாட்சி எண். 36), காவலர் எண். 455. குணசேகரனும், (சாட்சி எண். 37), தலைமைக் காவலர் கிருஷ்ணமூர்த்தியும் (சாட்சி எண். 44), ஆணி உதவி அய்வாளர் மோகன்ராஜரும் (சாட்சி எண். 46), உதவி அய்வாளர் விஜயகுமாரும் (சாட்சி எண். 47), தலைமைக் காவலர் இராமராஜரும் (சாட்சி எண். 48), தலைமைக் காவலர் நடராஜனும் (சாட்சி எண். 50), காவலர் முருகனும் (சாட்சி எண். 51) மேற்சொன்ன சம்பவங்கள் குறித்து வரிசை முறைப்படி சாட்சியமளித்துள்ளனர். காவல் துறை கண்காணிப்பாளர் திரு. சுந்தரம் (சா. எண். 52) ஆயுதம் தாங்கிய சேமக் காவலர்களுடன் தோப்புக்கு வந்த பின்னர், தோப்பில் நடந்தவற்றை அவர் குறிப்பிட்டுள்ளார். செங்குந்தர் களுக்காகவும் அவர்களின் சார்பிலும் விசாரணை செய்யப்பட்ட ஒரே சாட்சியான திரு. லோக நாதனின் கூற்று (சா. எண். 20) மேற்சொன்ன கூற்றை ஒத்திருப்பதாகவுள்ளது. செங்குந்தர்கள் சார்பில் செல்வம் (இவர் விசாரிக்கப்படவில்லை) என்பவரையும், ஆதி திராவிடர்கள் சார்பில் கோபால் (சா. எண். 1) என்பவரையும் குறிப்பிட்டு, இச்சம்பவம் தொடர்பாக, உதவி அய்வாளர் விஜயகுமார் அவர்களாலேயே (சா. எண். 47) பதிவு செய்யப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் அடிப்படையில் (சா. ஆ. A-317, A-318, A-319) பதிவு செய்யப்பட்டுள்ள 733/1992, 734/1992, 735/1992ஆம் எண்களுள்ள குற்ற வழக்குகள் பற்றி, காவல் துறை அய்வாளரும் (சா. எண். 43), காவல் துறை உதவி அய்வாளரும் (சா. எண். 47) குறிப்பிட்டுள்ளனர்.

20. வந்தவாசி, அரசு மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் பஷீர் அகமது (சா. எண். 21), டாக்டர் இராமலிங்கம் சா. எண். 22), டாக்டர் குமார் (சா. எண் 23), டாக்டர் முகமது ரப்பீக் (சா. எண். 24), டாக்டர் சுந்தரவதனம் (சா. எண். 25) ஆகிய உதவி மருத்து வர்கள் அனைவரும், சம்பவத்தில் காயமுற்ற நபர்களுக்குத் தங்களால் அளிக்கப்பட்டுள்ள சிகிச்சைபற்றி சான்றளித்துள்ளனர். சிகிச்சைப் பெற்றவர்களில், ஆதித் திராவிடர்களும், செங்குந்த முதலியார்களும், காவல் துறையினரும் அடங்குவர். A-15 முதல் A-41 வரை யிலான சான்றாவணங்கள் சா. எண். 21 ஆலும், A-42 முதல் A-56 வரையிலான சான்றாவணங்கள் சா. எண். 22 ஆலும், A-57 முதல் A-71 வரையிலான சான்றா

வணங்கள் சா. எண் 23 ஆலும், A-72 முதல் A-99 வரையிலான சான்றாவணங்கள் சா. எண் 24 ஆலும், A-101 முதல் A-126 வரையிலான சான்றாவணங்கள் சா. எண். 25 ஆலும் குறிப்பிடப்பட்டுள்ள விபத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வேலூர், அரசினர் பென்ட்லன்ட் மருத்துவமனையைச் சேர்ந்த உதவி மருத்துவர் டாக்டர் அருணன் (சா.எண். 28), கதிரியக்க மருத்துவர் டாக்டர் சீனிவாசன் (சா. எண். 30), உதவி மருத்துவர் டாக்டர். உதேஷ் கணபதி (சா. எண் 33), முடநீக்கியல் மருத்துவப் பேராசிரியர் டாக்டர் மனோகர் (சா. எண் 42) ஆகியோர், வந்தவாசி, அரசினர் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்ட காயமுற்ற நபர்களுக்குத் தாங்கள் மேற்கொண்டும் அளித்துள்ள சிகிச்சை பற்றித் தெரிவித்துள்ளனர். டாக்டர் மனோகர் (சா. எண் 42), தன்னால் சிகிச்சை அளிக்கப்பட்ட காயமுற்ற நபர்கள் பற்றி A-300 முதல் A-314 வரையிலான சான்றாவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்துப் பதிவேட்டிலுள்ள பதிவுகளைப் பதிவு செய்துள்ளார். வந்தவாசி, அரசினர் மருத்துவமனையில் X-கதிர் படம் எடுக்கும் கருவி இல்லாததால், அங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த காயமுற்ற அன்னக்கிளி (சா. எண் 8) என்பவரின் வலது முன்கையை, செங்கல்பட்டு, அவசர சிகிச்சை மருத்துவ அலுவலர் டாக்டர் அஷ்ரஃப் (சா. எண். 32) X-கதிர் படம் எடுத்துள்ளார். இவ்வாறு தான் எடுத்துள்ள X-கதிர் படத்திற்கும் சான்றளித்துள்ளார். விபத்துப் பதிவேட்டின் பகுதி நகலையும் (சா.ஆ. A-299) அவர் பதிவு செய்துள்ளார். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரையின் பேரில், திருவண்ணாமலை தனி வட்டாட்சியர், 14—11—1992 அன்று மாலை சுமார் 6-15 மணியளவில், காயமுற்ற அன்னக்கிளி (சா. எண் 8) என்பவரைப் பரிசோதனைக் காகத் தன்னிடம் அனுப்பியிருந்தார் என்றும் ; விபத்துப் பதிவேட்டின் பகுதி நகலையும் (சா.ஆ. A-127) அவர் வழங்கினார் என்றும் ; திருவண்ணாமலை அரசினர் மருத்துவ மனையைச் சேர்ந்த உதவி மருத்துவர் டாக்டர். மோகனசுந்தரம் (சா.எண். 26) தெரிவித் துள்ளார். காயமுற்றவர்களை, காவல் நிலையத்திலிருந்து, வந்தவாசி அரசினர் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றபோது, அவர்களுக்குப் பாதுகாவலாகச் சென்றது அல்லது கைது செய்யப்பட்டவர்களைக் காவலில் வைப்பதற்காக அணைகளைப் பெறுவதற்குச் செய்யாறு மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்றபோது அவர்களுக்குப் பாதுகாவலாகச் சென்றது அல்லது காயமுற்றவர்கள் உட்பட காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை வேலூர் மத்தியச் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றபோது, அவர்களுக்குப் பாதுகாவலாகச் சென்றது, அங்கிருந்து வேலூர், அரசினர் பென்ட்லன்ட் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றது அல்லது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்து புலன் விசாரணை நடக்கும்போது உரிய ஆவணங் களைத் தயாரித்தது ஆகிய தங்களுக்கு அளிக்கப்பட்ட பணிகளைச் செவ்வனே செய்ததன் மூலம், வந்தவாசி காவல் நிலையத்தில் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளைச் செய்து முடித்ததாக, காவலர்களுக்காகவும் அவர்களின் சார்பிலும் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி களான காவல்துறை உதவி ஆய்வாளர்கள் சீனிவாசன் (சா. எண். 35), கோவர்தன் (சா. எண் 49), ஆகியோரும், 289ஆம் எண் காவலரான மணவாளன் (சா. எண் 38), 565-ஆம் எண் காவலரான முருகேசன் (சா. எண் 39) 648-ஆம் எண். காவலரான துரைசாமி (சா. எண் 40), அக்ஸல்யப்பன் (சா.எண் 41), ஓட்டுநர்-காவலர் மோகன் (சா. எண் 45) ஆகியோரும் தெரிவித்துள்ளனர். ஆய்வு வரம்புகள் குறித்த முடிவுகளைப் பதிவு செய்ய, இவர்கள் மிகவும் தொடர்புடைய சாட்சிகளாக இல்லாத போதிலும், ஆதிராவிடர்களின் சார்பில் விசாரிக்கப்பட்ட சில சாட்சிகள், தங்களை அடித்ததாகக் கூறி, அவர்களுடைய பெயர்களையும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்களையும் குறிப்பிட்டு, இந்தச் சாட்சிகளை உட்படுத்தியிருப்பதால், ஆதிராவிடர்களுக்குச் சாட்சியமளிக்க ஓர் வாய்ப்பளிக்கும் வகையில் இந்த விசாரணையில் அவர்களைச் சாட்சிகளாக விசாரணை செய்யுந்தான் தெரிந்தெடுத்த தாக காவலர்களின் சார்பில் அஜரான வழக்குரைஞர் திரு. என். சேஷாத்திரி அவர்கள் தெரி வித்துள்ளார். வன்முறையில் ஈடுபட்டார்கள் என்பது குறித்து இவர்களிடம் கேள்வி எதும் கேட்கப்படவில்லை என்பது உண்மையாகும். சம்பவம் நடந்த சமயத்தில், இடத்தில், தாங்கள் இல்லை என்று இவர்களில் பெரும்பாலோனோர் கூறியுள்ளனர். செய்யாறு, முன்னாள் நீதித்துறை மாஜிஸ்டிரேட் திரு. மகாராசன் (சா. எண் 53) அவர்கள், பொன்னூரில் 8—11—1992 அன்று காலை நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக, கைது செய்யப்பட்டு தன் முன் அஜர்படுத்தப்பட்டவர்களை நீதிமன்றக் காவலில் வைத்தார். இவ்வாறு காவலில் வைக்க ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர், தன்னிடம் அஜர்படுத்தப்பட்டவர்களிடம், காவல்துறையினர் உங்களை மோசமாக நடத்தினரா அல்லது அடித்தித் துன்புறுத்தினரா என்று விசாரித்தபோது எவரும் இது பற்றி ஏதும் குறிப்பிடவில்லை என்று செய்யாறு, முன்னாள் நீதித்துறை மாஜிஸ்டிரேட் திரு. மகாராசன் சாட்சியமளித்துள்ளார்.

21. பொன்னூர் கிராமத்தில், 8—11—1992 ஆம் நாளன்று காலையில் நடைபெற்ற சம்பவம் குறித்து, காவல்துறையினர் கூறியது உண்மையாகும் என்பதும், எப்படிப் பார்த் தாலும் அது பெரும்பாலும் நிகழக்கூடியதாகவும், ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது என்பதும் கீழ்க்காணும் முக்கியமான தகவல்கள் மூலமும், சூழ்நிலைகள் மூலமும் நன்கு நிலை நாட்டப்பட்டுள்ளது :—

பொன்னூர் காலனியைச் சேர்ந்த ஆதிராவிடர்கள் ஓராண்டில் மூன்று அல்லது நான்கு முறை தாங்கள் வழக்கமாக நடத்தும் விழாவையும், தெருக்கூத்தையும் நடத்த பொதுக் கோயில்களுக்குச் சொந்தமான 331/1ஆம் நில அளவை எண்ணுடைய பாவுத் தோப்பைப் பயன்படுத்த அல்லது அரசுக்குச் சொந்தமான 334/1ஏ ஆம் நில அளவை எண்ணுடைய பாட்டைப் புறம்போக்கையாவது பயன்படுத்த அவர்கள் செய்த முயற்சி, O. S. 591/1989 ஆம் எண்ணில் பிறப்பிக்கப்பட்ட நிரந்தரமான தடையாணை மூலமாக சிவில் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டதை (A.S. 30/1991 ஆம் எண்ணுள்ள மேல் முறையீட்டில் அது உறுதி செய்யப்பட்டது) பலரும் அறிந்திருந்தது போன்று, காவல்துறையினரும்,

வருவாய்த்துறை அதிகாரிகளும் தலையிட்டு, அவர்கள் தடுக்கப்பட்டதாலும், பெரிதும் போற்றத்தக்க அவர்கள் சமூகத் தலைவர் திரு. சுந்தரராசனார் 25—10—1992 ஆம் நாளன்று உரையாற்றிய கூட்டம், இடையில் நிறுத்தப்பட்டதாலும், பொன்னூர் காலனியைச்சேர்ந்த ஆதிதிராவிடர்கள் தோல்வியால் விரக்தியடைந்து 7—11—1992 அன்று மாலை கிளர்ந்தெழுந்தனர் என்று நான் முடிவு செய்வதற்கு விரிவான காரணங்களை விளக்கிக் கூறத் தேவையில்லை. மேலும் அதனைத் தொடர்ந்து, 1992 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3, 4, 7 ஆம் நாட்களில் நடைபெற்ற அமைதிக் கூட்டங்களில் கூட அதிகாரிகள் நயந்து கேட்டுக் கொண்ட போதிலும், அத்தக் கிராமத்தைச் சேர்ந்த செங்குந்தர் சமுதாயத்தினர், தோப்பில் நெசவுக்கு முந்தைய அவர்களுடைய வேலையில் எவ்வித வசதியின்மையையும் ஏற்படுத்தாத, ஆதிதிராவிடர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு இடவசதி அளிக்க இணங்க மறுத்த தால், வருவாய்த்துறை அதிகாரிகளும், காவல்துறை அதிகாரிகளும், ஆதிதிராவிடர்களுக்கு எவ்விதமான நிவாரணத்தையும் அளிக்கத் தவறி விட்டனர்.

22. பாவுத்தோப்பு தொடர்பான முந்தைய பல்வேறு வழக்குகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களைக் கவனமாக ஆய்வு செய்து பரிசீலித்த பின்னர், காலை 5-00 அல்லது 6-00 மணி முதல் 8-00 மணி வரையிலான கால அளவில் நெசவுக்கு முந்தைய வேலைகளைச் செய்யும் நோக்கத்திற்காக '' அனுபோக உரிமைக்குத் '' (இந்தச் சொற்றொடரானது, மேற்சொன்ன தோப்பை வெளிப்படையாக அல்லது குறிப்பாக வழங்கப்பட்ட '' உரிமைத் துடன் '' பயன்படுத்தி வந்ததாக, செங்குந்தர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் தன்மையை விவரிக்கத் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது) தடை செய்யாத முறையில், எந்தச் சாதி அல்லது சமூகத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும், அந்தக் கிராமத்தின் எனைய சமூகத்தினரும், கோயிலுக்குச் சொந்தமான 331/1ஆம் நில அளவை எண்ணுள்ள பாட்டைப்புறம்போக்கையும் பயன் படுத்துவோரைத் தடை செய்து, மறுப்புத் தெரிவிக்க செங்குந்தர்களுக்கு மறுக்க முடியாத அடிப்படை ஏதுமில்லை என்று நான் கருதுகிறேன். பெரும்பாலும் காலை நேரங்களில் தான் பாவு போடும் பணி மேற்கொள்ளப்படுகிறது என்றும், காலை நேரங்களில் பாவு போடாமல் '' விட்டு விடப்பட்டால் '' அல்லது பாவுபோட இயலாமல் போகும்போது மட்டுமே, மாலை நேரத்தில் பாவு போடும் பணி மேற்கொள்ளப்படுகிறது என்றும், அது கூட மாலையில் 3-00 மணிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு, இருள் வரும் முன்னர் பணி முடிக்கப்படும் என்றும், திரு. லோகநாதன் (சாட்சி எண் 20) தெரிவித்துள்ளார். எந்தவொரு நாளிலும் பாவு போடும் பணிகள் முடிவடைந்த பின்னர் கிராம மக்கள் அனைவரும் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவராயினும் சரி, அதன் வழியாகச் சென்று வருவதற்கும், கால்நடைகளைக் கட்டி வைப்பதற்கும், ஓரமாகக் குப்பைகளைக் கொட்டுவதற்கும் இந்தத் தோப்பைப் பயன்படுத்துகின்றனர் என்றும், காய் காய்க்கின்ற அறுபதுக்கு மேற்பட்ட புளிய மரங்களி லிருந்து கிடைக்கும் வருவாய், கோயிலுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்றும் 20 ஆம் எண் சாட்சி மேற்கொண்டும் தெரிவித்துள்ளார். பொதுமக்கள் பாவுத் தோப்பை அவ்வாறு பயன் படுத்துவது, முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் பிறபித்த ஆணையிலும் (சான்றாவணம் A-5) O. A. 37/1975 ஆம் எண்ணில் இந்து சமய அறக்கட்டளைள் துறை, துணை ஆணையாளர் பிறப்பித்த ஆணையிலும் (சான்றாவணம் A-351) குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்றுக் கொள்ளப்பட்டவையும், மறுக்க முடியாதவையுமான தகவல்களைக் கருதிப் பார்த்தால், அம்பேத்கார் மன்றத்தின் தலைவர் திரு. என். கோபால் (சாட்சி எண் 10) ஒப்புக்கொண்டவாறு ஆதிதிராவிடர்கள் திருவிழாக்கள் நடத்துவது, கூட்டங்கள் நடத்துவது இரவு 10-00 மணியிலிருந்து அதிகாலை 4.00 மணி வரையில் கூத்து நடத்துவது அதுவும், ஓராண்டில் மூன்று சந்தர்ப்பங்களில் மட்டும், அதாவது, சித்திரை, ஆடி, தை ஆகிய மூன்று தமிழ் மாதங்களில் முதல் நாட்களில் கூத்து நடத்துவது ஆகியவை செங்குந்தர்களின் அனுபோக உரிமையில் அல்லது சரியாகச் சொல்லப்போனால், செங்குந்தர்கள் நெசவுக்கு முந்தைய பணிகளுக்காகத் தோப்பைப் பயன்படுத்துவதில் எந்த வகையிலும் தலையிடவில்லை. பாவுத்தோப்பில் 25—10—1992 ஆம் நாளன்று கூட்டம் நடத்த அதுவும் மேற்சொன்ன கூட்டத்தை 334/1A ஆம் நில அளவை எண்ணுள்ள பாட்டைப்புறம்போக்கிற்குள் நடத்துவது என்ற அளவுக்கு ஆதிதிராவிடர்கள் தங்களுடைய கோரிக்கையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அதற்கு உதவி புரியுமாறு வருவாய்த்துறை அதிகாரிகளையும், காவல்துறை அதிகாரிகளையும் கோரியபோது இந்த அதிகாரிகள், முந்தைய வழக்குகளின் முடிவையும், சிக்கல்களையும் மேலே குறிப்பிட்ட முறையில் உரியவாறு மதிப்பீடு செய்யத் தவறியது மிகவும் துரதிஷ்டவசமானதாகும். இந்தச் சந்தர்ப்பத்தில், மேற்சொன்ன அதிகாரிகள் ஆதிதிராவிடர்களின் கோரிக்கைக்கு ஆதரவளித்திருந்தால், செங்குந்தர்கள் விவேகத்தோடு நடந்து கொண் டிருப்பர். பின்னர் அவர்கள், அடுத்த நாள் காலையில் நெசவுக்கு முந்தைய பணிகளை மேற்கொள்ளப் பொருத்தமாக இருக்கும் வகையில் தோப்பினை தாய்மையாகவும் ஒழுங்கான நிலையிலும் விட்டுச் செல்லுமாறு ஆதிதிராவிடர்களுக்கு ஆலோசனை கூறி, அறிவுறுத்துமாறு அதிகாரிகளிடம் வேண்டுகோள் மட்டுமே விடுத்திருப்பர். கோயிலுக்குச் சொந்தமான தோப்புப் பகுதியில் கூட்டங்களைக் கூட்டுவதற்கும், விழாக்களை நடத்துவதற்கும், ஆதிதிராவிடர்களுக்கு அனுமதியளிக்கின்ற உரிமையும் அதிகாரமும் பெற்றுள்ள கோயிலைச் சேர்ந்த பொருத்தமான நபருக்கு எதிராக ஆணை, துணை நீதிமன்றத்தில் அவர்கள் (செங்குந்தர்கள்) தாக்கல் செய்த O. S. 30/1993 ஆம் எண் வழக்கில் இடைக்காலத் தடையாணை (சான்றாவணம் A-12) ஒன்றைப் பெற்றதன் மூலம், ஆதிதிராவிடர்களின் உரிமைக் கோரிக்கையைத் தடுப்பதற்கும் மறுப்பதற்கும் செங்குந்தர்கள் தவிர்க்க இயலாத மேலும் ஓர் ஆயுதமாக இந்தத் தடையாணையைப் பெற்றுள்ளதால் பாவுத்தோப்பைப் பொறுத்தவரை, சிறிது காலம் கழித்து, ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த நிலைமை இப்போதே நெருக்கடியைத் தோற்றுவித்து விட்டது

என்னும் உண்மை நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. உண்மையில் முன்னர் குறிப்பிட்டுள்ள வாறு கோயில்களைச் சேர்ந்த பொருத்தமான நபர், முந்தைய வழக்குகளை முறையாக மதிப் பீடு செய்த பின்னர் A-347 ஆம் எண்ணுள்ள சான்றாவணத்தின்படி அனுமதியளித்தார். ஆனால், பின்னர், செங்குந்த வகுப்பினரின் வற்புறுத்தலுக்குப் பணிந்து, A-364 ஆம் எண் சான்றாவணத்தின்படி, அனுமதியைத் திரும்பப் பெற்றார். விசாரணை செய்யப்பட்டு வரும் சம்பவம் நடைபெற்ற பின்னர் (11—2—1993-ஆம் நாளிட்ட A-11 ஆம் எண் சான் றாவணத்தில்) வக்கீல் நோட்டீஸ் மூலம் அவர் மீண்டும் எடுத்த சரியான நடவடிக்கையை O. S. 30/1993 ஆம் எண்ணில் வழக்கைத் தாக்கல் செய்ததன் மூலமும், அதில், தடை யாணையைப் பெற்றதன் மூலமும் செங்குந்தர்கள் முறியடித்து விட்டனர். ''அண்ணா திடல்'' என்றழைக்கப்படுகின்ற திறந்தவெளியை மட்டுமே அந்தக் கிராமத்தில் வசிக்கின்ற ஆதி திராவிடர்கள் மற்றும் ஏனைய வகுப்பினர் தங்களுடைய கூட்டங்களைக் கூட்டுவதற்கும், விழாக்களை நடத்துவதற்கும் பயன்படுத்தினர் என்பதை லோகநாதன் (சாட்சி எண் 20) என் பவரின் சாட்சியத்தின் மூலமும், அவர்களுடைய (செங்குந்தர்கள்) சாட்சியில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப் பத்திரங்கள் சிலவற்றில் அடங்கியுள்ளவற்றின் மூலமும் நிரூபிக்க செங்குந் தர்கள் தற்போது முயற்சியை மேற்கொண்டுள்ளனர். என்னுடைய கருத்துப்படி, அதனை ஒப்புக் கொள்ள இயலாது. எனெனில், சிறிய பரப்பளவில் அமைந்துள்ள மேற்சொன்ன திடல், நான் நேரடியாகச் சென்ற உள்ளூர் ஆய்வின்போது கண்ணுற்று, அது பற்றிய ஆய்வறிக்கையில் (இணைப்பு-II) குறிப்பிட்டுள்ளவாறு பேருந்து நிலையமாக இருந்தது. அதனைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் செங்குந்தர்கள் வீடுகள் இருந்தன. மேலும், செங் குந்தர்கள் தங்களுடைய வீடுகள் அமைந்துள்ள இடத்தில் சாலை ஓரத்தில் பாவு போடுவதுடன், பாவு போடுவதற்காக அந்தக் கிராமத்தில் தென் பகுதியில் சுமார் 3 ஏக்கர் நிலத்தைத் தற்போது வாங்கியுள்ளனர் என்பது சாட்சி எண் 20 அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் அரசிடம் உள்ளதும் 334/1e ஆம் எண்ணுள்ள நி. அ. புலத்தில் அமைந்துள்ளதுமான பாட்டைபுறம்போக்கு நிலத்தில் கணிசமான பகுதியைப் பயன் படுத்த அவர்கள் வற்புறுத்துவதில் சிறிது கூட நியாயமில்லை. ஆதிதிராவிடர்கள் அடைந்த ஏமாற்றத்தின் அளவையும், 8—11—1992-க்கு முந்தைய நாள்வரு அவர்களுக்கு ஏற்பட்ட மனக் குறையின் தன்மையையும் மதிப்பிட மட்டுமே பாவு தோப்பு தொடர்பாகத் தொடரப்பட்ட முந்தைய வழக்குகள், அவற்றால் எற்பட்ட சிக்கலான விளைவுகள், ஏனைய சூழ்நிலைகள் ஆகியவை குறித்து நான் விளக்க முற்பட்டுள்ளேன்.

23. 7—11—1992 ஆம் நாளன்று மாலை அவர்கள் மேற்கொண்ட வன்முறைச் செயல்களின் (முந்தைய பத்தியில் குறிப்பிடப்பட்ட அவணங்களின் அடிப்படையில் முதற்கண் நிருபிக்கப்பட்டவை) விளைவாக மாணிக்கப்பாசகம (விசாரணை செய்யப்படவில்லை), காவல் துறை உதவி ஆய்வாளர் பிரான்சிஸ் (சாட்சி எண். 27), காவலர் துரைசாமி (சாட்சி எண் 40), காண்டீபன் (விசாரணை செய்யப்படவில்லை), காவல் துணை ஆய்வாளர் (சாட்சி எண் 43) மற்றும் காவலர்கள் ஆகியோருக்குச் சிறு காயம் ஏற்பட்டதையும் அதனால் வருவாய் மற்றும் காவல்துறை அதிகாரிகள் அனுகூலமான பதில் நடவடிக்கை மேற்கொள்ளாததையும், செங்குந்தர்கள் அமைதியாக 8—11—1992 ஆம் நாள் காலையில் காவல்துறை ஆய்வாளர் தியாகராஜன் (சாட்சி எண் 43), காவல்துறை உதவி ஆய்வாளர் விஜயகுமார் (சாட்சி எண் 47) மற்றும் காவலர்கள் ஆகியோரின் பாதுகாப்புடன் அவர்கள் முன்னிலையில் நெசவுக்கு முந்தைய பணிகளைப் பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்ணுற்ற அவர்கள் (ஆதி திராவிடர் கள்) குறிப்பாக அவர்களுடைய தலைவர்கள் தோப்பில் காவலர்களைப் பார்த்ததன் பேரில் ஆதிதிராவிடர்களால் தவறாகக் கருதப்பட்டது உண்மையில் காவல்துறை ஆய்வாளரின் கூற்றுப்படி நெசவுக்கு முந்தைய வேலையை அன்று காலை செய்ய வேண்டாமென்று செங்குந் தர்களை அவர் கேட்டுக்கொள்ளவே அங்கு வந்திருந்தார். அது பயனளிக்காமல் போனது என்பதாகும்.) பழிவாங்கும் உணர்ச்சியுடன் கோபமும், ஆத்திரமும் கொண்டு, சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு பாவுத் தோப்பில் செங்குந்தர்கள் நெசவுக்கு முந்தைய வேலையில் ஈடுபடுவதைத் தடுக்கவும், முடிந்தால், அவர்கள் அந்த வேலையைத் தொடர்ந்து செய்வதை நிறுத்தவும் முடிவு செய்தனர். ஆதிதிராவிடர்கள் இத்தகைய மனநிலையைக் கொண்டிருந்ததால், 8—11—1992-ஆம் நாளன்று காலை செங்குந்தர்கள் பாவுத் தோப்பில் நெசவுக்கு முந்தைய வேலைகளை செய்யத் தொடங்கியபோது கோபமும் ஆத்திரமும் கொண்ட ஆதிதிராவிடர்கள் பெருந்திரளாகக் கூடி, கம்புகள், கற்கள், சங்கிலிகள் முதலிய ஆயுதங் களைக் கொண்டு, செங்குந்தர்களை வகை தொகையின்றி தாக்கினர் என்றும், அதற்குள் செங்குந்தர்களும், திரளாகக் கூடிவிட்டனர் என்றும், காவலர்களும் அங்கு வந்து (நிலைமையைச் சமாளிக்க, போதுமானவர்களாக இல்லை) அவர்களைத் தடுக்க முயன்றனர் என்றும், அவர்கள் செங்குந்தர்களைப் பாதுகாப்பதற்காக வந்துள்ளனர் என்று ஆதி திரா விடர்கள் தவறாகக் கருதினர் என்றும், நான் கூறுவதற்கு அடிப்படையாக அனைத்து காரணங் களும் உள்ளன. இத்தகைய தாக்குதலின் காரணமாக செங்குந்தர்கள் தங்கள் தற்காப்புக்காக அல்லது தாக்குகின்ற ஆதிதிராவிடர்களை அடக்குவதற்காக கற்கள், கம்புகள் முதலியவற்றால் எதிர்த்துத் தாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இடையில் காவலர்கள் நிற்க எதிரெதிரே இரு கோஷ்டியினரும் திரண்டு வந்து தாக்குதலில் ஈடுபட்ட இச்சம்பவத்தால் சுமார் 110 பேருக்குக் (இச்சம்பவத்தைத் தொடர்ந்து உடனே அவர்களுக்குச் சிகிச்சை அளித்த ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவர்களால் பதிவு செய்யப்பட்ட A-15 முதல் A-99 வரையில் மற்றும் A-101 முதல் A-126 வரையிலான சான்றாவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வீபத்துப் பதிவேட்டின் பதிவுகளிலிருந்து தெரிய வருகிறவாறு) காயம் ஏற்பட்டது என்பதும், அதில் பெரும்பாலானோருக்கு ஊமைக் காயங்களும், சிராய்ப்புக் காயங்களும் ஏற்பட்டுள்ளன என்பதும் (சாதாரணமாக இங்கு III-ஆம் இணைப்பில் கூறப்பட்டுள்ளவாறு கற்களாலும், கம்புகளாலும் அடிக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்களாகும்), இவர்களில் ஆண்களும் பெண் களும் (73 ஆதிதிராவிடர்கள், 33 செங்குந்தர்கள்) தாக்குதலில் ஈடுபட்ட இவ்விரு

கோஷ்டியினரும் இடையில் அகப்பட்டுக் கொண்ட பத்துக் காவலர்களும் அடங்குவர் என்பதும், நான் ஆழ்ந்து பரிசீலித்துத் தெளிந்த முடிவாகும். ஆதி திராவிடர்களின் கூற்றுப்படி, பெரும்பாலும் அவர்களின் வீடுகளுக்குள்ளும், காலனிக்குள்ளும் நிராயுதபாணியாக இருந்த ஆதி திராவிடர்களைச் செங்குந்தர்களும் காவலர்களும் பயங்கர ஆயுதங்களால், வகை தொகை இன்றி ஒருதலைப் பட்சமாக 8—11—1992 ஆம் நாள் காலையில் தாக்கியிருந்தால், செங்குந்தர் வகுப்பைச் சேர்ந்த பெருவாரியான ஆண்களுக்கும், பெண்களுக்கும் பத்து காவலர்களுக்கும் காயம் ஏற்படுத்தியதை மறுத்துக் கூற இயலாத இச் சம்பவம் நடைபெற்றிருக்காது என்று நான் ஐயமறத் தெரிவிக்கிறேன். இந்தக் கோஷ்டிச் சண்டை பாவுத் தோப்பில் மட்டுமே நடைபெற்றிருக்கக் கூடும் என்பது உண்மையே என்பதை காவல் துறை ஆய்வாளரால் இச்சம்பவம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட பல குற்ற வழக்குகள் குறித்து (A-323 ஆம் சான்றாவணத்தின் கீழ் வரும் மஹஜரில் மற்றும் A-324 ஆம் எண் சான்றாவணத்தின் கீழ்) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் குறித்து புலனாய்வு செய்தபோது தோப்பிலிருந்து அவரால் கைப்பற்றப்பட்ட கற்கள், கம்புகள், கடப்பாறைகள் ஆகியவை நிரூபிக்கின்றன. கைப்பற்றப்பட்ட ஏனைய பொருட்களும், செங்குந்தர்கள் ஆதிதிராவிடர்கள் ஆகியோரின் இருப்பிடங்கள் உட்பட கிராமத்தின் பிற பகுதிகளிலிருந்து கைப்பற்றப்பட்டவையும் A-325 முதல் A-341 வரையிலான சான்றாவணங்களின் கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவையுமான இதே போன்ற ஆயுதங்களும், பொருட்களும் காவல் துறை கண்காணிப் பாளரின் 12—11—1992 ஆம் நாளிட்ட A-356ஆம் எண் சான்றாவணத்தில் காணப்பெறும் விரிவான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு கோஷ்டியினருக்குமிடையே ஒரே நேரத்தில் நடந்த தாக்குதல், எதிர்த் தாக்குதல் ஆகியவற்றிற்குத் தொடர்புடையவையாகும். இது தொடர்பாக, உண்மையைக் கண்டறியும் குழுவின் A-14ஆம் எண் சான்றாவணத்தில் கொடுக்கப் பட்டுள்ள அறிக்கையின் விவரங்களைக் குறிப்பிடுவது புனலுள்ளதாக இருக்கும். இதில் (தயவு செய்து I மற்றும் IVஆம் கூற்றுக்களின் 13, 14ஆம் பக்கங்களைக் காண்க) மண்ணு முதலியார், ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்த சில ஆதிதிராவிடர்களுக்குப் பணமும் சாராயமும் கொடுத்து, அவர்களைக் கூலிக்கு அடியாட்களாக ஏற்பாடு செய்து, 8—11—1992 அன்று காலையில் ஏற்பட்ட சம்பவத்தின்போது, அவர்களைக் கொண்டு ஆதிதிராவிடர்களைத் தாக்க வைத்திருப்பதற்குச் சாத்தியம் உள்ளது பற்றி திரு. கோபால் அவர்களுக்குச் சொன்னது பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை உறியவாறு பொருள் கொண்டால், அப்போது காலனியில் தங்கியிருந்த சிலர் மீது தாக்குதல் நடத்தி, அவர்களுடைய உடைமைகளுக்குச் சேதம் ஏற்படுத்தியதற்கு இது காரணமாக அமைந்துள்ளது என்று அறியலாம்.

24. அன்று காலையில் பாவுத் தோப்பில் இரு கோஷ்டியினருக்குமிடையில் நடந்த தாக்குதல் பற்றிய வாதக் குறிப்புக்களும், தாக்குதல் பற்றிய தவலும் தங்களுக்குத் தெரியாது என்று கூற ஆதிதிராவிடர்களால் விசாரிக்கப்பட்ட பெரும்பாலான சாட்சிகளால் (சாட்சி 1 முதல் 19 வரையில்) எல்லாவித கவனமும் மேற்கொள்ளப்படபோதிலும், அன்னக்கிளி உட்பட (சாட்சி எண் 8) சிலர், தோப்பில் நடந்த இந்தக் கோஷ்டிச் சண்டை பற்றித் தெரியும் என்று கூறினர். மல்லிகா என்பவர் (19 ஆம் என் சாட்சி) அவரை, அவரின் வீட்டிற்குள் காவலர்கள் தாக்கிக் கொண்டிருந்தபோது, தோப்பில் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தது என்று அவர், ஐயத்திற்கிடமில்லாத வகையில் ஒப்புக்கொண்டுள்ளார். 1 முதல் 19ஆம் எண் வரையிலான பெரும்பாலான சாட்சிகள் காவல் துறையினர் பெயர்களை அல்லது அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள எண்களைக் குறிப்பிட்டு காவல் துறையினர் இவ்வழக்கில் சம்பந்தப் படுத்த எடுத்துக் கொண்ட முயற்சி தோல்வி அடையும். இதற்குக் காரணம், அக்கிராமத்தில் பெரும்பாலும் குடிசைத் தொழிலாக நடைபெற்று வந்த எண்ணெய்ந்த மதுவிலக்குக் குற்றங்களைப் புலனாய்வு செய்வது தொடர்பாக, அடிக்கடி அக்கிராமத்திற்கு வருகை புரிந்திருந்ததன் மூலம், அக்கிராமத்தில் காவல் துறை உதவி ஆய்வாளர் (சாட்சி எண் 17) நன்கு தெரிந்தவராகிருந்தார் என்பதும், வெளிப்படையாகச் சண்டை மூண்ட 25—10—1992ஆம் நாளிலிருந்து காவல் துறை ஆய்வாளரும் (சாட்சி எண் 18) பெரும்பாலான காவலர்களும் அக்கிராமத்தில் கிட்டத்தட்ட நிரந்தரமாக பாதுகாப்புப் பணியை மேற்கொண்டிருந்தனர் என்பதும் ஆகும். மேலும், காவலர்களின் அடையாளம் பற்றி தங்களுக்குத் தெரியும் என்று தெரிவித்த கூற்றை நிரூபிக்க சில சாட்சிகள் கூறிய மிகவும் உண்மையல்லாத கற்பனையான காரணங்கள் உண்மையல்லாதவை, ஏற்றுக் கொள்ள இயலாதவை என்று தள்ளப்படவேண்டியவையாயுள்ளன. சில சாட்சிகள் நெஞ்சத்தை நெகிழ்த்து, அவர்களின் வீடுகளில் வைத்திருந்த பல ஆயிரம் ரூபாய்கள், நகைகள், ஆகியவற்றைக் காவலர்கள் இச்சம்பவத்தின் போது எடுத்துச் சென்று விட்டனர் என்ற கூற்றும் தள்ளுபடி செய்வதற்குரியதே ஆகும். எனெனில், அவர்கள் வைத்திருந்ததாகச் தெரிவித்த அத்தகைய பெருந்தொகை, நகை ஆகியவற்றை, அவர்கள் வேளாண் கூலிகளாக இருந்து கொண்டு, அந்த வருமானத்தில் அவற்றை வாங்கியிருக்க முடியும் என்பது ஏற்கத்தக்கதல்ல. மேலும், பொன்னூர் காலனியில் நன்கு படித்தவர்களில் பலர் உள்ளனர் என்பதும் அவர்களில் சிலர் அரசின் உயர் அதிகாரிகளாகவும் தனியார் நிறுவனங்களிலும் பதவி வகிக்கின்றனர் என்பதும் கிடைக்கப் பெற்ற சான்றுகளிலிருந்து தெரிகிறது. இருப்பினும், முதுகலைப் பட்ட தாரியான (1ஆம் எண் சாட்சி) திரு. கோபாலைத் தவிர படித்த வேறு எவரும் இந்த விசாரணையின் போது இச்சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்கவில்லை அல்லது தங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் மீது காவல் துறையினரும், செங்குந்தர்களும் கொடூரமாக மிருகத்தனமாகத் தாக்கினர் என்று கூறப்பட்டதை நிரூபிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது உண்மையாகும். அவர்கள் இந்த விசாரணை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல், பொன்னூர் காலனி ஆதி திராவிடமக்களின் கோரிக்கை பொருட்டு போராட அரசியல் கட்சியிடம் பிரச்சினையை விட்டு விட்டது என்பது எனது கருத்துப்படி, 8—11—1992 அன்று காலையில் 1ஆம் எண் சாட்சியம் அவரின் ஆதரவாளர்களும் ஆதரிக்க முடியாத, நியாயமற்ற முறையில் செயல்பட்டனர் என்பதற்கு உறுதியான, ஆதாரமாக உள்ளது.

25. நேரம், இடம், தாக்குதலின் தன்மை, அதன் காரணமாக ஏற்பட்ட காயங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை, ஒருபுறம் ஆதிநாராவிடர்களுக்காகவும் அவர்கள் சார்பிலும் நடந்த விசாரணையின் போது விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் வாய்மொழி சாட்சியம் அல்லது தாக்கல் செய்யப்பட்ட உறுதி மொழிப் பத்திரங்கள் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள வற்றிற்கும் அவர்கள் தொடர்பாக விபத்து விவரப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, அந்தந்த மருத்துவர்களால் நிரூபிக்கப்பட்ட பொருத்தமான விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ளவற்றிற்கும் இடையே அப்பட்டமான, ஒத்துப் போக முடியாத முரண்பாடுகள் இருப்பது இணைப்பு 111-ல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அன்னக்கிளியின் (சாட்சி எண் 8) வழக்கை எடுத்துக் கொண்டால், அவர், அன்று காலை சுமார் 7 மணிக்கு அவருடைய வீட்டின் பின்புறத்தில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்ததாகவும், அப்போது பத்து காவலர்கள் அவருடைய வீட்டிற்குள் வேகமாக நுழைந்து அவரை அடித்ததாகவும் இந்த கமிஷன் முன்பாகத் தெரிவித்தார். ஒருவாறாக அவர் அவர்களுடைய பிடியிலிருந்து தப்பி வீட்டை விட்டு ஓடி, அக்கம்பக்கத்தில் இருந்த ஒரு வீட்டிற்குள் நுழைந்தார். அங்கு ஏற் கெனவே இரு குழந்தைகள் இருக்கவே, உட்புறமிருந்து அந்த வீட்டைப் பூட்டினார். எனினும், எட்டு காவலர்கள் முன் வாயிற் கதவை உடைத்துத் திறந்து வீட்டிற்குள் நுழைந்து அந்த இரு குழந்தைகளையும் அடித்து வெளியில் விரட்டினர். அங்கு வந்த எட்டு காவலர்களில் ஐவர் வெளியில் சென்றனர். எஞ்சிய மூவர் வீட்டினுள் இருந்தனர். வெளியில் இருந்த ஒரு காவலர், வீட்டினுள்ளே வேறு எவரும் இல்லை எனக் கூறி, அந்த மூவரையும் அழைத்தார். மற்றும் ஒரு காவலர் வீட்டிற்குள் நுழைந்து, பாணில் எவரேனும் இருக்கிறாரா என்று பார்க்கும்படி எஞ்சிய மூன்று காவலர்களிடம் கூறினார். அன்னக்கிளி பாணில் ஒளிந்து கொண்டிருந்ததைப் பார்த்து கொண்டையைப் பிடித்து அவர்கள் இழுத்தனர். தன்னை அவர் களுடைய சகோதரியாகப் பாவித்து, விட்டுவிடுமாறு கெஞ்சியும் அவர்கள் அனைவரும் தடி யால் தாறுமாறாக அடித்து, பூட்சுகளால் அன்னக்கிளியின் மார்பகத்தில் உதைத்து, அம்மன் கோயில் அருகே அழைத்து சென்று அங்கு நிறுத்தப்பட்டிருந்த வேனில் அடைத்தனர். அந்த வேனில் பெண்கள் உட்பட இருபது பேர் ஏற்கெனவே இருந்தனர். அன்னக்கிளியை வேனில் அடைக்கும்போது கூட காவல் துறை ஆய்வாளர் தியாகராஜன் (சாட்சி எண் 43) தகாத வார்த்தைகளால் திட்டி அன்னக்கிளியின் ஜாக்கெட்டைக் கிழித்தார். அன்னக்கிளி உடம்பில் ஏற்பட்டிருந்த காயங்களில் இரத்தம் வரவே மயங்கி விழுந்து சுய நினைவு இழந்தார். அப்போது மாதவிடாய் தொடங்கிவிடவே, இரத்தப் போக்கு மேலும் அதிகமானது. அவ ருடைய முகத்தில் தண்ணீர் தெளித்த பின்னர், அவரைத் தூக்கி வேனில் போட்டனர். அந்த வேன் வந்தவாசி காவல் நிலையத்தை அடைய, அன்னக்கிளியும் ஏனையோரும் வேனை விட்டு இறங்கும்போது, அவர்கள் அனைவரையும் தனித்தனியாக அடித்தனர்; அதிலும் குறிப் பாக அன்னக்கிளியை மார்பு, கை, கால், தலை ஆகிய பகுதிகளில் அடித்து, ''முதலியார்களுக்கு என்றிருந்த கிணற்றில் அன்னக்கிளி தண்ணீர் எடுத்திருக்கக் கூடாது'' எனக் கூறி இழிந்த சொற்களால் திட்டினர். குடிக்கத் தண்ணீர் கேட்டபோது, காவலர் ஒருவர், மற்றொரு காவலரிடம் அன்னக்கிளியின் வாயில் சிறு நீர் கழிக்குமாறு கூறினார். மருத்துவமனையில் மருத்துவர்கள் சிகிச்சை அளித்ததுடன், அன்னக்கிளியின் இரத்தம் கசிந்து கொண்டிருந்த இடக் கை காயத்திற்குத் தையல் போடப்பட்டது. அதே வேளில காவல் நிலையத்திற்குத் திரும்பி வந்த போது, காவல் துறை ஆய்வாளர் தியாகராஜனும் (சாட்சி எண் 43) உதவி ஆய்வாளர் விஜயகுமாரும் (சாட்சி எண் 47) மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட புறநோயாளி சீட்டை அன்னக்கிளியிடமிருந்து பிடுங்கி கிழித்தனர். மாியாதைக்குாிய சிலரின் தலை யீட்டால், அன்னக்கிளியும் ஏனைய பெண்களும் விடுதலை செய்யப்பட்டு, வேளில் கிராமத் திற்குத் திருப்பி அழைத்துச் செல்லப்பட்டு, நள்ளிரவில் அங்கு இறக்கிவிடப்பட்டனர். அடுத்த நாள், அன்னக்கிளி வந்தவாசி அரசினர் மருத்துவமனைக்குச் சென்று உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததால், தன்னை அக நோயாளியாக சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டார். ஆனால், அன்னக்கிளியின் வேண்டுகோளை மருத்துவர் ஏற்கவில்லை. அதன் பின்னர் அன்னக்கிளியின் சகோதரர் அவரைச் செங்கல்படு அரசினர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர் அக நோயாளியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அன்னக்கிளி யிடம் பணம் இல்லாததால், அங்கு இரண்டு நாட்கள் மட்டுமே தங்கியிருந்தார்; அங்கிருந்து சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டு ''அப்போல்லோ'' மருத்துவமனையில் அக நோயாளி யாகச் சேர்க்கப்பட்டார். தொடர்ந்து இரத்தம் கசிய வலி, வேதனையுடன் 5 நாட்களுக்குப் பின்னர் அவர் கிராமத்திற்கு வந்ததும் மாவட்ட ஆட்சியர் அன்னக்கிளியைப் பார்த்தார். அவருடைய கட்டளைப்படி, திருவண்ணாமலை அரசினர் மருத்துவமனைக்கு அன்னக்கிளி அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு அகநோயாளியாக ஒரு வாரம் தங்கியிருந்தார்; அதன் பின்னர் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். இதற்கு மாறாக, 8—11—1992 அன்று நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து பிற்பகல் 1-25 மணிக்கு அன்னக்கிளி (சாட்சி எண் 8) என்கிற இந்தச் சாட்சியைப் பரிசோதித்த டாக்டர் முகமது ரஃபி (சாட்சி எண் 24) வீடியத் விவரப் பதிவேட்டில் (சான்றாவணம் A 90) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் : '' பொன்னூர் கிராமத்தில் 8—11—1992 அன்று காலை சுமார் 6-30 மணிக்கு இரு வகுப்பினருக்கிடையே நடந்த மோதலில், கற்கள், கம்பு, கத்தி, கடப்பாறை ஆகியவற்றால் தாக்கியதால் காயங்கள் ஏற்பட்ட தாகக் கூறப்பட்டது. அன்னக்கிளியின் வலது முன்கையில் கன்றிய காயம் காணப்பட்டது; எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது; மேலும், அவருடைய இடது காலில் கன்றிய காயம் காணப்பட்டது. பெரிய மருத்துவமனையில் மேற்கொண்டும் சிகிச்சை பெற வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.'' செங்கல்பட்டு, அரசினர் மருத்துவமனை அவசர சிகிச்சை மருத்துவ அதிகாரி டாக்டர் அஷ்ராஃப் (சாட்சி எண் 32) 11—11—1992 அன்று காலை சுமார் 8-45 மணிக்கு, வந்தவாசி அரசினர் மருத்துவமனையிலிருந்து அனுப்பப் பட்ட மேற்கூறிய அன்னக்கிளியை (சாட்சி எண் 8) பரிசோதனை செய்ததாகவும், அவளுடைய வலது முன்கையின் மையப் பகுதியில் 7×6 செ.மீ. அளவிற்குக் கன்றிய காயம் ஏற்பட்டிருந்ததையும், இடது முழங்கையில் 7×6 செ.மீ. அளவிற்குக் கன்றிய காயம் ஏற்பட்டிருந்ததையும்

பார்த்ததாகவும் தெரிவித்துள்ளார். தன்னுடைய பெண் உறுப்பிலிருந்து இரத்தம் வருவதாக அவர் தெரிவித்ததால், அவர் மகளிர் நோயியல் மருத்துவரிடம் செல்லுமாறு கூறினார். அவருடைய வலது முன்கையையும், இடுப்பெலும்பையும் எக்ஸ்-ரே படம் எடுத்துப் பார்த்ததில் அவற்றில் எலும்பு முறிவு ஏதும் இல்லாமல் இயல்பாகவே இருந்தது தெரிய வந்தது. மேற் சொன்ன காயங்கள் சாதாரண காயங்கள் என்று அவர் கருத்துத் தெரிவித்தார். அந்த மருத்துவமனையில் வைத்து வரப்படும் விபத்துப் பதிவேட்டில் உள்ள பதிவின் பகுதி நகல்தான் சா. ஆ. A-299 ஆகும். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் பணி புரியும் உதவி மருத்துவர் டாக்டர் மோகனசுந்தரம் (சாட்சி எண் 26), 14—11—1992 அன்று மாலை சுமார் 6-15 மணிக்குத் தனி வட்டாட்சியர் அனுப்பிய குறிப்பின் பேரில், மேற்சொன்ன அன்னக்கிளியை (சாட்சி எண் 8) அவர் பரிசோதித்ததாகத் தெரிவித்தார். அவருடைய காயங்கள் பற்றி அவர் தெரிவித்ததாகச் சொல்லப்பட்ட பல புகார்களைப் பற்றி தெரிவித்த பின்னர், மருத்துவ ரீதியாக பரிசோதித்து பார்த்ததில் அவர் இயல்பாகவே இருக்கிறார் என்று தெரிவித்தார். அன்னக்கிளியின் நோய்பற்றி மேலும் கண்டறிவதற்காக அவர் அக நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்றும் சாட்சியம் கூறினார். ஆனால், அவர் மருத்துவ மனையை விட்டு யாருக்கும் தெரிவிக்காமல் வெளியேறிவிட்டார். அதனால் இறுதியான கருத்தைத் தெரிவிக்க இயலவில்லை. சா.ஆ. A-127 என்பது, அந்த மருத்துவமனையில் வைத்து வரப்படும் விபத்து பதிவேட்டுப் பதிவைக் குறிக்கிறது. பொன்னூர் கிராமத்தில் 8—11—1992 அன்று காலை 9-00 மணிக்கு இரண்டு வகுப்பினரிடையே மோதல் ஏற்பட்டபோது, காவலர்கள் தடியடி நடத்திய சமயத்தில் தான் தாக்கப்பட்டதாக மருத்துவரிடம் அவர் கூறியதாக சா.ஆ. A-127 குறிப்பிடுவது கவனத்தில் கொள்வதற்குரிய முக்கியமான தாகும். பொன்னூர் கிராமத்தில் மோஷ்டி மோதல் ஏற்பட்டபோது அவருக்குக் காயங்கள் ஏற்பட்டதாக முதன்முதலில் அவர் மருத்துவர்களிடம் தெரிவித்ததும், உரிய விபத்து பதிவேட்டில் அவர்களால் அது பதிவு செய்யப்பட்டதும் அவரது இடது முன்கையிலும் இடது காலிலும் காணப்பட்ட இரண்டு காயங்களும் மிகவும் சாதாரணமானவையே என்பதில் உள்ள உண்மையும், காலையில் அவருடைய வீட்டிற்குள்ளும், பக்கத்திலும் காவல் நிலையத்திலும் அவர் தாக்கப் பட்டார் என்று தற்போது அவர் கூறிய சாட்சியத்தைப் பொய்யாக்கிவிட்டன. இது காவல் துறையினர் முன்பு தெரிவித்த கூற்றையே உறுதிப்படுத்துகிறது. அவர் தற்போது தெரிவித் துள்ள சாட்சியம் பின்னர் நினைத்து கூறியதாகும் என்றும், அவருடைய கற்பனைக் கூற்று என்றும், அதில் பொதிந்துள்ள முரண்பாட்டைக் கருத்திற்கொண்டும் இந்த காலை ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக ஆதிதிராவிடர்கள் தற்போது கொடுத்த கூற்றுக்கு ஆதரவாக இருப்பதாகத் தோன்றுகிறது என்றும் முடிவு செய்ய வேண்டியுள்ளது. விபத்துப் பதிவேடுகள் பலவற்றில் உள்ள பதிவுகள், காயமுற்றவர்கள், அன்று காலையில் ''பாவு தோய்வில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் காயமடைந்ததாக மருத்துவரிடம் தெரிவித்ததாக குறிப்பிடுகின்றன. விசாரிக்கப்பட்ட எவையை சாட்சியங்களிலும், தாக்கல் செய்யப்பட்ட உறுதி மொழிப் பத்திரங்களில் கூறப்பட்டுள்ளவற்றிலும் இதேபோன்ற குறைபாடுகள் உள்ளன என்றும், எனவே, III-வது இணைப்பில் உள்ளவற்றின் மூலம் நிரூபிக்கப்பட்டவாறு ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் நான் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

26. 8—11—1992 அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சே. தீனபந்து, ஐ.ஏ.எஸ்., அவர்களும் காவல் துறை கண்காணிப் பாளர் திரு. ஆர். சேகர், ஐ.பி.எஸ்., அவர்களும் அதே நாள் அக்கிராமத்திற்குச் சென்று, மக்களை விசாரித்து, அங்கு இதுபோன்ற பிரச்சினை மீண்டும் ஏற்படாமல் தடுக்க எற்பாடுகளை செய்தார்கள் என்பதற்கான சாட்சியங்கள் உள்ளன. அதே நாளன்று காவல் துறை கண் காணிப்பாளர் டெல்லஸ் செய்தி (சா. ஆ. A-355) ஒன்றை, காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநருக்கும் (சட்டம்-ஒழுங்கு), சென்னை-4, மாநில சிறப்புப் பிரிவுக்கும் (குற்றப் புலனாய்வுத்துறை) அனுப்பியுள்ளார். அதில் அன்று காலை நடைபெற்ற சம்பவம் பற்றி பின்வருமாறு விவரிக்கப் பட்டுள்ளது:—

''8—11—1992 அன்று காலை 6.15 மணிக்குச் சுமார் 1,000 ஆதிதிராவிடர்கள் சட்டவிரோதமாகக் கூடி, பாவு போடப்பட்டுள்ள ஜாதி இந்துக்கள் வசிக்கும் இடத்திற்குள் செல்லத் தொடங்கினர். காவலர்கள், ஆதிதிராவிடர்களைத் தடுத்தனர். ஆனால், இதற்குச் செவி சாய்க்காமல் தொடர்ந்து முன்னேறினர். காவல்துறையினரைவிட அதிக எண்ணிக்கை யில் கும்பலாக வந்த அவர்கள் காவலர்களைப் பயங்கர ஆயுதங்களால் தாக்கினர். இச் சம்பவத்தில் வந்தவாசி காவல் தறை ஆய்வாளர் தியாகராஜன், இரண்டு உதவி ஆய்வாளர்கள், 2 தலைமைக் காவலர்கள், 6 காவலர்கள் (ஒட்டுநர் காவலர் உட்பட) காயமடைந்தனர். அக நோயாளியாகச் சேர்க்கப்பட்ட காவலர் 585—இராஜபாண்டியன் தவிர மற்றவர்களுக்குச் சிறு காயங்களே ஏற்பட்டன. ஆதிதிராவிடர்களும் முதலியார்களும் ஒருவரோடு ஒருவர் மோதலில் ஈடுபட்டனர். ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். 26 பெண்கள் உட்பட 73 ஆதிதிராவிடர்களும், 6 பெண்கள் உட்பட 33 முதலியார்களும் காயமுற்றனர். அவர் களைக் காவலர்கள் கைது செய்தனர். இது தொடர்பாக வந்தவாசி காவல் நிலையத்தில் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வந்தவாசி, காவல் துறை உதவி ஆய்வாளர் புகாரின் பேரில், வந்தவாசி காவல்நிலையத்தில், இ.பி.கோ. 147, 148, 341, 325, 323, 332, 333, 307 ஆம் பிரிவுகளின்கீழும், இ.பி.கோ. 506 (ii) 34 பிரிவுகளின்கீழும் 733/92 ஆம் குற்ற எண்ணில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. செல்வம் முதலியார் கொடுத்த புகாரின் பேரில், வந்தவாசி காவல் நிலையத்தில், இ.பி.கோ. 147, 148, 341, 325, 323, 307 ஆகிய பிரிவுகளின்கீழும், 506 (ii), 34 ஆகிய பிரிவுகளின்கீழும் 734/92 ஆம்

குற்ற எண்ணில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. கோபால் என்ற ஒருவர் (ஆதிதிராவிடர்) கொடுத்த புகாரின் பேரில், வந்தவாசி காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட (காயமுற்றவர்) 106 பேர்களும் சிகிச்சைக்காக அனுப்பப் பட்டுள்ளனர். எவரும் கடுமையான காயமுறவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் பொன்னூர் கிராமத்தில் முகாமிட்டுள்ளார். மாமூல் நிலைமை ஏற்பட்டுள்ளது ''.

பாவுத் தோப்பில், செங்குந்தர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்ட தற்கான காரணங்களை ஆராய்ந்தும் 8–11–1992 அன்று காலை நடந்த சம்பவம் பற்றிய விரிவான விவரங்களை அளித்தும், முன்னர் அனுப்பிய டெலக்ஸ் செய்தியின் (சா.ஆ. A-355) அடிப்படையிலேயே 12–11–1992 ஆம் நாளிட்ட அறிக்கை ஒன்றை (சா.ஆ. A-356) காவல் துறை கண்காணிப்பாளர், சென்னை-4, காவல்துறை டைரக்டர்-ஜெனரலுக்கு அனுப்பினார். அதே நாளன்று (12–11–1992) மாவட்ட ஆட்சியரும், பொன்னூர் கிராமத்தில் 25–10–1992 ஆம் நாள் முதல் 8–11–1992 ஆம் நாள் சம்பவத்தை அடுத்து அக்கிராமத்தை அவர் சென்று பார்வையிட்டது வரையில் நடைபெற்ற சம்பவங்களை விவரித்து அறிக்கை ஒன்றை (சா.ஆ. A-357) பொதுத் (சட்டம்-ஒழுங்கு) துறை, அரசுச் செயலாளருக்கு அனுப்பினார். 8–11–1992 ஆம் நாள் காலை நடந்த சம்பவங்கள் தொடர்பாக, மேற்சொன்ன அறிக்கையிலிருந்து பின் வருவனவற்றை எடுத்துக் கூறுவது அவசியமாகும் :—

'' 8–11–1992 அன்று காலை 5.30 மணிக்குச் செங்குந்தர் மாநாடு பாவு போட வந்தபோது ஆதிதிராவிடர் மக்கள் சுமார் 150 பேர் அங்கு வந்து, செங்குந்த மாநாட்டை பாவு போட விடாமல் தடுக்க முயன்று கைகலப்பில் ஈடுபட்டு கல்வீச்சில் ஈடுபட்டனர். காவலுக்காக ஏற்கெனவே இந்தக் கிராமத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல் துறையினர் இரு கோஷ்டியினரையும் தடுக்க முயன்றபோது காவல் துறையினர்மீது ஆதிதிராவிடர்கள் கற்களை வீசித் தாக்கினர். நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர காவல்துறையினர் தடியடி நடத்தினர்.

வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து குற்ற எண். 733, 734, 735/92-ல் இந்திய தண்டனை விதிகள் 147, 148, 324, 325, 323, 341, 333, 307, 506, 506/2 வந்தவாசி காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. ஆதிதிராவிடர்கள் 43 நபர்களையும் செங்குந்த மாநாடு 22 நபர்களையும் கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலவரத்தினால் காவல் அய்வாளர், வந்தவாசி, உதவி அய்வாளர்கள் 2 பேர், 2 தலைமை காவலர்கள், 6 காவலர்கள் மற்றும் டிரைவர் உட்பட்பட்ட 26 பெண்கள் உள்ளிட்ட 73 ஆதிதிராவிட சமூகத்தினரும் 6 பெண்கள் உள்ளிட்ட 33 செங்குந்தர் சமூகத்தினரும் (ஒருவரையொருவர் எதிர்த்து தாக்கிக் கொண்டதனால்) காயமுற்றனர். பலத்த காயமுற்றோர் எவரும் இல்லை. உடலுறுப்பு சேதம் (அ) இழப்பு/உயிர் சேதம் ஏதுமில்லை. காயமேற்பட்டவர்களுக்கு வந்தவாசி அரசு மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. சம்பவ இடத்தை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருடன் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு சட்டம்-ஒழுங்கு பராமரிக்க அறிவுரைகள் வழங்கப்பட்டது. பொன்னூர் மற்றும் சுற்றுப்புற கிராமத்தில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

8–11–1992 அன்று வந்தவாசியில் முகாமிட்டிருந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பௌத்த தம்ம சங்கத்தினர் நேரில் மகஜர் கொடுத்தனர். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சமரச பேச்சு நடத்தவும் அமைதிக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் ஊர்வலத்தில் வந்த பிரமுகர்கள் தெரிவித்தனர். தற்போது கிராமத்தில் சகஜநிலை திரும்பி உள்ளது. மேலும், நிலைமைகள் உன்னிப்பாக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு சமாதானக் குழுக்கூட்டம் 17–11–1992 அன்று 11.00 மணியளவில் நடைபெற உள்ளது. இது பற்றிய அறிக்கையைப் பிறகு அனுப்பிவைக்கிறேன் ''.

27. இச்சம்பவத்தின் தகவல்கள் குறித்து ஆய்வு செய்கையில், சட்டம்-ஒழுங்கு உட்பட மாவட்ட நிருவாகத்தைக் கவனிப்பவர்களும் 8–11–1992 அன்று காலை சம்பவம் நடந்த உடனேயே பொன்னூர் கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டவர்களுமான இரண்டு முதநிலை பொறுப்புள்ள அதிகாரிகள் அனுப்பிய இந்த அறிக்கைகளுக்கு (சா.ஆ. A-355, A-356, A-357) முக்கியத்துவம் கொடுத்துக் கருதிப்பார்க்க வேண்டும். மேலே எடுத்துக் கூறப்பட்ட பகுதிகள் உட்பட இந்த அறிக்கைகளின் சம்பந்தப்பட்ட தகவல்கள் குறித்து உன்னிப்பாகக் கருதிப் பார்த்து, காவல்துறையினர் தெரிவித்து ஏற்கெனவே விவரித்த சம்பவம் குறித்த கூற்றை ஏற்றுக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வரச் செய்கிறது. அந்தக் காலனியைச் சேர்ந்த ஆதிதிராவிடர்களின் நலனுக்காக பாவு தோப்பில் 25–10–1992 ஆம் நாளன்று கூடி கூட்டம் நடத்திய பௌத்த தம்ம சங்கப் பிரதிநிதிகளில் சிலர் ஊர்வலமாகச் சென்று, வந்தவாசியில் அப்போது முகாமிட்டிருந்த மாவட்ட ஆட்சியரை நேரில் கண்டு மகஜர் ஒன்றைக் (தாக்கல் செய்யப்படவில்லை) கொடுத்து, மாவட்ட ஆட்சியர் நடத்தும் சமரசப் பேச்சு வார்த்தை எதற்கும் ஒத்துழைப்புத் தருவதாக ஒப்புக் கொண்டனர் என்று மேற்கூறிய பகுதியின் கடைசி பத்தியின் முந்தைய பத்தி வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. மேற்குறிப்பிட்ட அவை இடம் பெற வில்லை. நிலைமைகள் வேறாக இருந்திருப்பின் மாவட்ட ஆட்சியர் தன்னுடைய அறிக்கை யில் (சா.ஆ. A-357) ஆதிதிராவிடர்கள் தற்போது கூறியுள்ளது போல், காவல்துறையினர் அக்கிராமத்தில் வசிக்கும் செங்குந்தர்களின் உதவியுடன் காலனியில் பெரும்பாலும் அவரவர்

வீட்டிற்குள் இருந்த ஏதுமறியாத நிராயுதபாணிகளான ஆதிதிராவிடர்கள்மீது தாக்குதலை நடத்தி அவர்களுடைய உடைமைகளுக்குப் பெரிதும் சேதம் ஏற்படுத்தியதுபற்றி குறிப்பிட்டிருப்பார். மாவட்ட ஆட்சியர், தலைமைச் செயலகம், பொதுத் (சட்டம்-ஒழுங்கு) துறை அரசு செயலாளருக்கு அடுத்து அனுப்பிய 14–11–1992 ஆம் நாளிட்ட அறிக்கையில் (சா.ஆ. A-359) சம்பவம் குறித்து முற்றிலும் மாறுபட்ட கூற்றைத் தெரிவித்துள்ளார் என்று நான் அறிந்ததால், அறிக்கைகளில் (சா.ஆ. A-355 முதல் A-357 வரை) மேற்சொன்ன குறிப்பிடத்தக்க வீடுபாடு குறித்து சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன். முறையாகக் கருதிப்பார்த்தால், இந்த அறிக்கையின் முதல் பகுதி, இரண்டு நாட்களுக்கு முன்னர், அதாவது 12–11–1992 அன்று மாவட்ட ஆட்சியர், அவரே சா.ஆ. A-357-ல் தெரிவித்துள்ள சம்பவம் பற்றிய கூற்றுக்கிணங்க உள்ளதாகத் தோன்றுகிறது. எனினும், இந்த அறிக்கையின் இரண்டாம் பகுதியும் பிந்திய பகுதியும் (5 ஆம் பக்கத்திலிருந்து தொடங்குகிறது) சம்பவம் குறித்து முழுவதும் மாறுபட்ட கூற்றை எடுத்துரைக்கிறது என்பதோடு, ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள ஆதிதிராவிடர்களின் கூற்றை ஆதரிக்கிறது. அறிக்கையின் இப் பகுதிக்கிணங்க, இந்தியக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர் 11–11–1992 அன்று மாவட்ட ஆட்சியரை நேரில் கண்டு, செங்குந்தர்களின் தூண்டுதலின் பேரில் ஏதுமறியாத ஆதிதிராவிடர்களைக் கடுமையாக அடித்து, அவர்களுடைய உடைமைகளுக்குப் பெரிதும் சேதம் ஏற்படுத்திய காவலர்களின் அட்டூழியங்கள் குறித்து அவரிடம் முறையிட்டனர். அதன் பேரில், மாவட்ட ஆட்சியர், அவருடைய மாவட்ட வருவாய் அதிகாரியைப் பொன்னூர் கிராமத்திற்குச் சென்று பார்வையிட முகமையில் அனுப்பி வைத்தார். அவர் 12ஆம் தேதி, 13ஆம் தேதி அங்கு சென்று பார்வையிட்டு வாய்மொழி விசாரணைகளை நடத்தினார்; மாவட்ட ஆட்சியருக்கு அலுவலகக் குறிப்பு ஒன்றை (சான்றாவணம் A-358) அனுப்பினார். 8–11–1992 அன்று காலை ஆதிதிராவிடர்கள், அவர்களுடைய காலனிக்குள் அவர்களுடைய வாலாயமான தொழிலை மேற்கொண்டிருந்தபோது எதும் அறியாத நிராயுதபாணியாக இருந்த ஆதிதிராவிடர்களையும் அவர்களுடைய சொத்துக்களையும் செங்குந்தர்களின் தூண்டுதலின் பேரில் கண்மூடித்தனமாக தாக்கி சேதம் ஏற்படுத்தியதில் காவல்துறையினர் மேற்கொண்ட அடக்குமுறை குறித்து அக்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அலுவலகக் குறிப்பை ஆதாரமாகக் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் 14–11–1992 அன்று அக்கிராமத்திற்கு வருகை தந்து, ஆதிதிராவிடர் காலனியைப் பார்வையிட்டார்; ஆதிதிராவிடர்கள் பலரை விசாரித்தார்; ஆதி திராவிடர்களைத் தாக்குவதற்கும், அவர்களுடைய சொத்துக்களைச் சேதப்படுத்துவதற்கும் செங்குந்தர்கள் சிலரின் தூண்டுதலின் பேரில் காவல்துறையினர் மேற்கொண்ட திட்டமிட்ட முயற்சி குறித்து மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் எஞ்சிய பகுதி, மேற்சொன்ன வருகையின்போது மாவட்ட ஆட்சியரிடம் காட்டப்பட்டவாறு அவர்களுடைய சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்தின் அளவை விளக்குகிறது. செய்யாறு சப்-கலெக்டரை மேற்சொன்ன அனைத்து சம்பவங்கள் குறித்து விசாரணை செய்யுமாறு (P.S.O. 145 விசாரணை) மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். (எனினும், இது செயல்படுத்தப்படவில்லை, ஏனெனில், இதற்கிடையே இது குறித்து இந்த விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது.) மேலும், பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர்களுக்கு அரிசி, சேலை, பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்கியதன் வாயிலாக அவர்களுக்கு உடனடி நிவாரணங்கள் சில அளிக்கப்பட்டன. இந்த அறிக்கையின் (சான்றாவணம் A-359) இரண்டாவது பகுதியில் கூறப்பட்டுள்ள தகவல்களை நுணுகிச் செய்த ஆய்வும் அரசுக் குறிப்பின் 11 பகுதியின் நோக்கமும் ஆய்வு வரம்பும், பின்னர் கூறப்பட்ட தகவல்கள் முன்னர் கூறப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்தும்.

28. முரண்பாடான இரண்டு கூற்றுக்களையும், அதாவது அறிக்கையின் முதல் பகுதியையும், அதனைக் கறைப்படுத்தி பொய்யாக்கும் இரண்டாம் பகுதியையும் இவ்வறிக்கையில் (சான்றாவணம் A-359) சேர்க்க, மாவட்ட ஆட்சித் தலைவர் கீழ்க்காணும் சூழ்நிலைகளையும் தகவல்களையும் போதிய அளவு பரிசீலனை செய்த பின்னர் இவ்வறிக்கையின் முதல் பகுதி நம்பத் தகுந்ததாகவும், உண்மையானதாகவும் இருந்ததால், அதனை மட்டும் நான் ஏற்கக் கருதுகிறேன். இந்த முதல் பகுதி, 8—11—1992 அன்று அவர் பொன்னூர் கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டு, விசாரணை செய்த பின்னர் அவரால் அனுப்பி வைக்கப்பட்ட அவருடைய முந்தைய அறிக்கையை (சான்றாவணம் A-357) ஒத்திருப்பதோடு மட்டுமல்லாது மாவட்ட ஆட்சியருடன் பொன்னூர் கிராமத்திற்குச் சென்ற பார்வையிட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரின் இரண்டு அறிக்கைகளையும் ஒத்திருக்கிறது. அரசியல் கட்சி ஒன்றின் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சித் தலைவரை 11—11—1992 அன்று சென்று பார்த்தபோது, அவர்களின் தலையீடும், அவர்கள் விரும்பிய முடிவு காணத்தக்கவாறு மாவட்ட வருவாய் அதிகாரிக்கு அளிக்கப்பட்ட தகவலும், அவரிடம் காட்டிய சேதமடைந்த பொருட்களும், அவற்றை அவர் நம்பியதும், அதன் அடிப்படையில் அவர் அலுவலகக் குறிப்பு (சான்றாவணம் A-358) எழுதியதும், அதனை மாவட்ட ஆட்சியர் நம்பியதும் ஆகிய இவையே இச்சம்பவம் குறித்த உண்மைத் தகவல்களைத் திரித்துக் கூற காரணமாயிற்று என நான் நம்புவதற்குக் காரணமுள்ளது. மக்கள் உரிமைக் கழகத்தின் உண்மை அறியும் குழுவின் 29—1—1993 ஆம் நாளிட்ட (சான்றாவணம் A-14) அறிக்கையும் இரண்டு மாதத்திற்கும் அதிகமான கால அளவுக்குப் பிந்தியது. அந்த அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவர் அளித்த உறுதிமொழிப் பத்திரமும் (சான்றாவணம் A-282) இந்த விசாரணைக் கமிஷன் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டவை. மாவட்ட ஆட்சியரது அறிக்கையின் (சான்றாவணம் A-359) பிற்பகுதி போன்றே உள்ளன, எனவே, இவற்றை நிராகரிக்க வேண்டியுள்ளது. என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட சேதமடைந்த பொருட்கள் குறித்த என்னுடைய உள்ளூர் ஆய்வு அறிக்கையில் (இணைப்பு 11) கூறப்பட்டுள்ளவை அதே மாதிரியான காரணங்களினால், தனிச் சிறப்பையும், முக்கியத்துவத்தையும் இழக்கின்றன. ஆதிதிராவிடர்களுக்கு ஏற்பட்ட

இழப்பின் அளவு, மதிப்பு குறித்து விசாரிக்கப்பட்ட சாட்சிகள் முன்னுக்குப்பின் முரணாக அளித்த வாக்கு மூலங்கள், மாவட்ட வருவாய் அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவரும், நானும் அங்கு பார்வையிடச் சென்றபோது எங்களுக்குச் சேதமடைந்த பொருட்கள் சிலவற்றைக் காட்டிய போதிலும், ஆதி திராவிடர்களின் சொத்துக்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டதை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற என்னுடைய முடிவுக்கே அரண் செய்கின்றன. இவர்களில் சிலர் இது தொடர்பாக ஏற்கனவே தாக்கல் செய்த அவர்களுடைய உறுதிமொழிப் பத்திரங்களில் அவர்கள் அளித்திருந்த கூற்றை மறுத்துக் கூறினர். இவையனைத்திற்கும் மேலாக, தொடர் புடைய எல்லா நேரங்களிலும் அதாவது 25—10—1992, 7—11—1992 அன்று மாலை சம்பவங்கள் நடைபெற்றபோதும், மூன்று நாட்கள் நடைபெற்ற அமைதிக் கூட்டங்களின்போதும் இருதரப்பினருக்கும் இடையே சுமுகமாகத் தீர்வு காண வேண்டும் என்ற அவாவின்பேரில், போதிய அளவுக்குப் பொறுமையைக் கடைப்பிடித்து அமைதி காத்த காவல்துறையினர் 8—11—1992 அன்று காலை திடீரென்று தங்களுடைய நிலையை எதிரிடையாக மாற்றிக் கொண்டு, செங்குந்தர் களின் கைக்கூலியாக செயல்பட்டு, ஆதிதிராவிடர்கள்மீது அதாவது ஆண்கள், பெண்கள், குழந்தைகளைக் கண்மூடித்தனமாக தாக்குவதில் ஈடுபட்டனர் என்பதையும் அதற்குப் பிரதிபலனாக வெளிப்படையாகத் தெரிய வராத ஆதாயத்தைப் பெற்றனர் என்பதையும் (வந்தவாசியில் ஒயின்—பிராந்திக் கடை ஒன்றைச் சொந்தமாக வைத்துள்ள மன்னு முதலியார் மதுபானத்தை அவர்களுக்கு வழங்கினார் என்று கூறப்படும் அற்பமான, கண நேரப் பயன்கள்பற்றி ஈண்டு குறிப்பிட வேண்டிய அவசியமில்லை) என்னால் நம்ப இயலவில்லை. வேறுவிதமாகக் கூறினால், சம்பவம் நடைபெற்றபோது காவல்துறையினர் அந்த இடத்தில் இருந்து, அவர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டபோதிலும், அங்கு தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனில், அச்சம்பவத்தின்போது சில உயிர் சேதம் உட்பட பெரும்சேதங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன்.

29. மாவட்ட வருவாய் அதிகாரிக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் காலதாமதமாக அளிக்கப்பட்ட முறைபிடுகளை நம்பி அதேபோன்ற முறைபிடுகளை பொன்னூர் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு நீதி கிடைக்க, இந்த விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டவுடனேயே மாநிலம் முழுவதிலுமிருந்து ஏராளமான பொதுநிறுவனங்களும், தனியார்களும் மாதில அரசுக்கு அனுப்பினர்; ஆனால், பின்னர் அவர்கள் தொடர் நடவடிக்கையிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். எனினில், இச்சம்பவத்தில் உண்மையில் என்ன நடந்ததென்று நம்பத்தகுந்த வட்டாரங்களி லிருந்து அவர்களுக்குத் தகவல் கிடைத்திருக்குமேன நான் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். அவர்களை ஜாமீனில் எடுக்க எவரும் அக்கறை காட்டவில்லை என்பதால், அவர்கள் அனைவருமே காவல் கைதிகளாக வேலூர் மத்திய சிறையில் ஒரு தங்களுக்கும் மேலாக வைக்கப்பட்டிருந்தனர்; கமிஷன் மொத்தம் 12 முறை கூடியபோதும் விசாரணை தொடங்கும் முன்னர் இருமுறை வருகை தந்த இந்தியக் குடியரசு கட்சியின் ஒரே ஒரு பிரதிநிதியைத் தவிர எந்த ஒரு தனிப்பட்ட நபரோ, அமைப்போ பரிசுக்க விசாரணையில் கலந்து கொள்ளவில்லை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். எட்டுத் திங்கள் நடைபெற்ற விசாரணையின்போது, இந்த மோதலில் பிரபலமான திரு. சோபால் (சாட்சி எண் 1), திரு. லோகநாதன் (சாட்சி எண் 20) ஆகிய எதிர்க்கட்சிக்காரர்கள் இருவர் மட்டுமே தங்களுடைய வழக்குரைஞர்களோடு கலந்து கொண்டனர்.

30. பொன்னூர் கிராமம், பாவுத் தோப்பில் 8—11—1992ஆம் நாளன்று காலையில் செங்குந்தர்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் இடையே நடைபெற்ற நேரடி கைகலப்பில் காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக இன்றியமையாததாக இருந்துள்ளது என்றும், மோதலில் ஈடுபட்ட கும்பல்களைக் கலைக்க அச்சம்பவத்தில் காவல் துறையினர் மிகக் குறைந்த அளவே பலப் பிரயோகம் செய்தனர் என்றும், காவல்துறையினர் மிகையாகப் பலப் பிரயோகம் செய்தனர் என்ற கேள்விக்கே இடமில்லை என்றும், மேற்கூறிய காரணங்களைக் கொண்டு, விசாரணை வரம்பின் I, IVஆம் பகுதிகள் தொடர்பாக என்னுடைய முடிவைக் குறிப்பிடுகிறேன். விசாரணை வரம்பின் IIIஆம் பகுதியைப் பொறுத்த மட்டில் பொன்னூர் கிராமத்தில் குடியிருக்கும் செங்குந்தர்களின் தூண்டுதலின்பேரில், காவல் துறையினர் திட்டமிட்டுச் செயல்பட்டு, ஆதிதிராவிடர்களைத் தாக்கியதுடன், அவர்களுடைய சொத்துக்களுக்கும் அதிக அளவில் சேதங்களை ஏற்படுத்தினர் என்று காவல்துறைக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்கத் தகுந்த ஆதாரம் தெரிவிக்கப்படவில்லை என்றும் நான் குறிப்பிடுகிறேன்.

ஆய்வு வரம்பின் V ஆம் பகுதி.

31. ஆதி திராவிடர்களின் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டது அல்லது ஏற்பட்டி ருக்கலாம் என்பதற்கு எதிராக மேலே 28ஆம் பத்தியில் விளக்கப்பட்டுள்ள போதிய காரணங்களால் நான் முடிவு செய்கிறேன். அப்படி ஏற்பட்டிருக்கக் கூடிய சேதமும் பிறருக்குச் சான்று காட்டு வதற்காகத் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக்கூக வாய்ப்புள்ளது என்பதை மறுக்க இயலாது என்றும் நான் முடிவு செய்கிறேன். 8—11—1992ஆம் நாளன்று நடைபெற்ற சம்பவத் தின்போது ஆதி திராவிடர்கள் சொத்திற்குப் பெரிதும் சேதம் ஏற்பட்டது என்பதற்கு, இன்னும் சொல்லப் போனால் சேதம் ஏற்பட்டது என்ற பேச்சுக்கே இடமில்லை. அதனால் ஏற்பட்டே யிராத ஒரு சேதத்திற்காக அதிகாரிகள், அதிகாரிகள் அல்லாதவர்கள், பொறுப்பாளர்கள் என்று எந்த ஒரு நபர் அல்லது நபர்களை அடையாளம் காட்டுவதற்கு வாய்ப்பு ஏதுமில்லை என்று மேற்கூறிய முடிவை அடிப்படையாகக் கொண்டு தெளியப்பட்டத் தொடர் முடிவாக ஆய்வு வரம்பின் (V) ஆம் பகுதியின்கீழ் முடிவு செய்யப்பட வேண்டும். அதற்கிணங்க, ஆய்வு வரம்பின் **V** ஆம் பகுதி குறித்த என் முடிவைப் பதிவு செய்கிறேன்.

ஆய்வு வரம்பின் VI ஆம் பகுதி.

32. ஆய்வு வரம்பின் I முதல் V வரையிலான பகுதிகள் தொடர்பான என் முடிவின் அடிப்படையில் பார்த்தால், வலுச்சண்டையிட்டவர்கள் என்று தெரியவரும். ஆதிதிராவிடர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதென்ற வினா எழவில்லை. ஆதிதிராவிடர்கள் பலருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டபோதிலும், 8—11—1992 ஆம் நாளன்று காலையில் பாவுத் தோப்பில் நடைபெற்ற மோதலின்போது அல்லது மோதலின் விளைவாக ஆதிதிராவிடர்களின் உடைமைகளுக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று நான் கண்டறிந்தேன் ; ஆதிதிராவிடர்கள், வலுச் சண்டையிட்டவர்களாக இருந்து, 7—11—1992ஆம் நாளன்று மாலையிலிருந்து வன்முறையில் ஈடுபட்டு சீருடையில் இருந்த காவல் துறையினரைக் கொஞ்சங்கூட மதிக்காமல், தொடக்கத்தில் செங்குந்தர்களின்மீது வகை தொகையின்றி தாக்குதல் நடத்தியதோடு, 8—11—1992 ஆம் நாள் காலை பாவுத் தோப்பில் நடந்த சம்பவத்தின்போது தொடர்ந்து காவலர்கள்மீது தாக்குதல் நடத்தினர். எனவே, ஆதி திராவிடர்கள் இழப்பீட்டுத் தொகை பெறுவதற்குத் தகுதியானவர்களல்லர் என்ற முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகும். இதனை ஒட்டி, நான் இந்த VI பிரிவில் எனது கருத்தைப் பதிவு செய்கிறேன்.

ஆய்வு வரம்பின் VII-ஆம் பகுதி.

33. ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் 17—12—1954 ஆம் நாளன்று பாவுத் தோப்பில் வன்னியர்களும், யாதவர்களும் நுழைந்து கைகலப்பில் ஈடுபட்ட ஒரே ஒரு சம்பவத்தைத் தவிர மற்றப்படி எதும் ஏற்படவில்லை. (இது தொடர்பாக குற்றியல் நடைமுறை சட்டக்கோவையின் 145 ஆம் பிரிவின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. இது தொடர்பான ஆணை சார. ஆ. A5-ல் கொடுக்கப்பட்டுள்ளது). பாவுத் தோப்பைப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பான தகராறு, எதிர்த்தரப்பினர்களால் உரிமையியல் நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் மூலமும், இந்து சமய-அறநிலைய ஆட்சித் துறை ஆகிய குறிப்பிட்ட சட்டப்படிக்கான ஏனைய மன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் மூலமும் செங்குந்தர்களுக்கும் ஏனைய ஜாதி இந்துக்களுக்கும் இடையே பல ஆண்டுகளாக அமைதியாக நடைபெற்று வந்தது. தற்போது கடந்த 4 ஆண்டுகளாக 25—10—1992 ஆம் நாள் வரையிலும் இம்மோதல் செங்குந்தர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்குமிடையே நடைபெற்று வந்தது. ஆய்வு வரம்பின் (1)-ஆம் பகுதி குறித்து விவாதிக்கையில், நீண்டகாலமாக நடைபெறுகின்ற சிவில் வழக்குகள் தொடர்பான பெரும்பாலும் அனைத்து விவரங்கள் குறித்து நான் தொடர்ச்சியாக விவரித்துள்ளேன். அந்த சிவில் வழக்குகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அனைத்துப் பதிவேடுகளையும் பகுப்பாய்வு செய்து விசாரணையைப் பின்வருமாறு முடித்துள்ளேன்:—

(a) பாவுத்தோப்பை அனுபோகத்தில் வைத்திருப்பது குறித்த தகராறு, இந்த விசாரணை நடைமுறையில் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டவாறு, செங்குந்தர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்குமிடையே மட்டுமே நடந்த தகராறு அன்று; ஆனால், ஒருபுறம் செங்குந்தர்களுக்கும் மறுபுறம் அக் கிராமத்தில் வாழும் ஏனையவர்களுக்கும் அதாவது, அவர்கள் இன்ன சாதியை (அல்) இன்ன மதத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற பாகுபாடின்றி ஏனையவர்களுக்குமிடையே நடந்த தகராறாகும்.

(b) செங்குந்தர்கள் பாவுத் தோப்பை அனுபோகத்தில் வைத்திருந்தது பாவு போடுவதற்காக மட்டுமே ஆகும். அவ்வாறு பாவு போடும் பணியும் பெரும்பாலும், காலை வேளையில் கதிரவனின் கடும் வெப்பம் தாக்கத் தொடங்கும் முன்னர், சுமார் மூன்று முதல் நான்கு மணி நேரங்கள் நடக்கும். அவர்கள் அந்தப் பாவுத் தோப்பை மாலை வேளையில் பயன்படுத்துவது என்பது மிகவும் அரிதாக நடப்பதாகும். அதுவும், அவர்களையும் மீறிய காரணங்களால் பாவு போடும் பணி மேற்கொள்ள இயலாத நிலை (அல்) காலை வேளையில் முடிக்க இயலாது எஞ்சி இருக்கும் பாவுபோடும் பணியின் நிலை ஆகியவற்றைப் பொறுத்ததாகும்; அதுவும் கூட மாலை 3 அல்லது 4 மணி முதல் அந்தி வேளை வரையிலேயே அந்தப் பாவுத் தோப்பை அனுபோகத்தில் வைத்திருந்தனர்.

(c) 1914 ஆம் ஆண்டு தொடங்கி தொடர்புடைய எல்லாக் காலங்களிலும் ஒப்பந்தம் செய்து கொண்டதன் பேரில் (இந்து சமய அறநிலையத் துணை ஆணையாளரின் கோப்பில் O. A. எண். 37/1975-ல் சான்றாவணம் B-2 எனத் தாக்கல் செய்யப்பட்ட ஒப்பந்தம்) மேற்கூறிய O. A. 37/1975 ஆம் எண் வழக்கில் விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரையில், அந்தக் கிராமத்தில் உள்ள கோயில்களின் நிருவாகம் (அருள்மிகு சௌந்தர்ய வரதராஜ பெருமாள் கோயில் மற்றும் அருள்மிகு திருக்காமேஸ்வரர் கோயில் உட்பட) பாவு தோப்பு உட்பட அக்கோயில்களின் சொத்துக்களை அனுபோகத்தில் கொள்வது ஆகியவை பிரிக்க முடியாத உரிமையாகக் கருதப்பட்டது.

(d) ஆரணி, துணை நீதிமன்றத்தில் அண்மையில் O. S. எண். 30/1993 ஆம் எண் வழக்குத் தாக்கல் செய்யப்படும் வரையிலும், இந்த விசாரணைக் கமிஷன் நடவடிக்கைகள் முடிவடையும் வரையிலும், நில அளவை எண் 334/1 A-ல் உள்ள பாவு தோப்பு அருள்மிகு சௌந்தர்ய வரதராஜ பெருமாள் கோயிலுக்கும் அருள்மிகு திருக்காமேஸ்வரர் கோயிலுக்கும் சொந்தமானது என்பது செங்குந்தர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு ஏற்கப்பட்டது.

(e) 1989 வரையில் நடந்த வழக்கு நடவடிக்கைகள் அனைத்திலும், அதிலும் குறிப்பாக, மேற்கூறிய O. A. 37/1975 ஆம் எண் ஆணையிலும், '' பாவு தோப்பு '', செங்குந்தர்கள் பாவு போடும் பணியை மேற்கொள்ளும் நேரங்கள் தவிர மற்றபடி, கிராமத் தவர்கள் அனைவராலும் சாதி, வகுப்பு என்கிற பேதமின்றி அனுபோகத்தில் கொள்ளப்பட்டது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

(*f*) பெயர் குறிப்பிடப்பட்ட 9 ஆதிதிராவிடர்கள் மீது (அந்தக் கிராமக் காலனி மக்களின் பிரதிநிதி என்பதிலிருந்து மாறாகப் பிரித்துக் காட்டப்பட்டவாறு) A. S. 30/1991 ஆம் எண் முறையீட்டில் உறுதி செய்தவாறு, O. S. 591/1989 ஆம் எண்ணில் பிறப்பிக்கப்பட்ட நிரந்தரத் தடை ஆணை கூட, பாவு தோப்பில் செங்குந்தர்களின் பாவு போடும் பணியில் ஆதிதிராவிடர்கள் குறுக்கிட்டது பற்றி மட்டுமே குறிப்பிட்டதே தவிர, செங்குந்தர்கள் பாவு போடும் பணியை மேற்கொள்ளாத அந்த நாளின் எஞ்சிய பகுதி (அல்லது) இரவு குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

(*g*) செங்குந்தர்கள் விதிமுறைக் கட்டுப்பாட்டிற்குரிய ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பாவுத் தோப்பை அனுபோகத்தில் வைத்து அனுபவித்து வந்ததன் அடிப்படையிலும், அந்தத் தோப்பு அருள்மிகு செளந்தர்ய வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கும் அருள்மிகு திருக் காமேஸ்வரர் திருக்கோயிலுக்கும் சொந்தமானது என்பது மறுக்க முடியாததாகும் என்பதன் அடிப்படையிலும், O. S. 591/1989 ஆம் எண்ணில் பிறப்பிக்கப்பட்ட கட்டுப்படுத்தும் தடை ஆணைக்கு முரண்படாமல் தக்கார் அவருடைய அதிகாரத்தைச் செலுத்தி ஆதிதிரா விடர்கள் உட்பட எனைய வகுப்பைச் சேர்ந்தவரும் அவர்கள் விரும்பக் கூடிய நோக்கங் களுக்காக பாவுத் தோப்பை செங்குந்தர்களின் பாவு போடும் பணிக்குத் தடங்கல் ஏற்படாத முறையில் பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும் என்று தெரிவித்து, பாவு தோப்பு தொடர் பாக செங்குந்தர்களின் உரிமை பற்றி அறிவிக்க வேண்டும் என்று கேட்டு அண்மையில் ஆணை, துணை நீதிமன்றத்தில் O. S. 30/1993 ஆம் எண் வழக்கைத் தாக்கல் செய்கின்ற நிலைக்குச் செங்குந்தர்கள் தள்ளப்பட்டுள்ளனர். O. S. 30/1993 ஆம் எண் வழக்கு முடிவுறாமல் இருந்தபோது, செங்குந்தர்கள் பாவுத் தோப்பை முற்றிலுமாக வருங்காலம் அனைத் திலும் செங்குந்தர்கள் தனிப்பட்ட முறையில் உடைமையில் கொண்டு அனுபோகத்தில் வைத் திருக்கின்ற உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கும் எதனையும் மேற்கூறிய கோயில்களின் நிர் வாகத்தைக் கவனிக்கின்ற தக்கார் மீது அவர் செய்யாதவகையில் அவரைத் தடுக்கும் பொருட்டு, அந்தத் தக்காருக்கு எதிராக செங்குந்தர்கள் பெற்ற இடைக்கால தடை ஆணை (சா. ஆ. A-12) செங்குந்தர்கள், பாவு போடும் பணிகளைப்புரிய பாவுத் தோப்பைப் பயன்படுத்து வதற்கு இடையூறு ஏற்படுத்தாமல் சிராமத்திலுள்ள எனைய வகுப்பினரும் பயன்படுத்த அவர்களுக்கு அவசியமான அனுமதியை வழங்குவதிலிருந்து கோயில்களின் நிருவாகத்தைக் கவனிக்கின்ற தகுதி வாய்ந்த தக்காரை தடுத்தநன் மூலம் அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற பல்வேறு வகுப்பினர்களிடையே அமைதி நிலவுவதற்கு உகந்த, தற்போதைய நிலைமைக்கேற்ற ஒரு தீர்ப்பை அளிப்பதென்ற நடைமுறைக்கு ஏலாததாக ஆக்கிவிட்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த அடிப்படையில் முடிவான தீர்ப்பு அளிக்க வேண்டுமானால், செங்குந்தர்களின் கோரிக்கை குறித்த O. S. 30/1993 ஆம் எண் வழக்கில் I. A. 65/ 1993 ஆம் எண் வழக்கு நடவடிக்கைகளை இறுதியாக முடித்த பின்னரே (அல்லது) அவசியம் ஏற்பட்டால் வழக்கை இறுதியாக முடித்த பின்னரே, முடிவான தீர்ப்பு அளிக்க இயலும் என்பது வெளிப்படை. அவ்வாறு இருந்தபோதிலும், O. S. எண் 30/1993-ன் முக்கிய கருப்பொருள் சான்றாவணம் A-12-ல் குறிப்பிடப்பட்டுள்ள விவர அட்டவணையில் மிகத் தெளிவாக விவரித்துள்ளபடியான 1.6 ஏக்கர் பரப்பளவு உள்ள நி.அ.பு. எண். 331/1-ல் அமைந்துள்ளவாறான பாவுத் தோப்பு மட்டுமாக இருப்பதையும், மேற்சொன்ன வழக்கில் முறையாக நி.அ.பு. எண்களைக் குறிப்பிட்டு விளக்கிக் கூறி நி.அ.பு. எண் 334/1-ல் உள்ள பாட்டை புறம்போக்கு நிலத்தின் யாதொரு பகுதியும் சேர்க்கப்படாமலுள்ளதையும் இது சர்ச்சைக்கு இடமற்ற வகையில் செங்குந்தர்களுக்குத் தெரிந்திருப்பதையும், பாட்டை புறம்போக்கு நிலத்தை உடைமை உரிமையாகக் கொண்டுள்ள மாறில அரசு O. S. எண் 30/1993-ல் உள்ள மேற்சொன்ன வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கப்படாமலிருப்பதையும், கருதிப் பார்க் கையில், மேற்சொன்ன பாட்டை புறம்போக்கு நிலத்தின் யாதொரு பகுதியையும் யாதொரு பயன்பாட்டிற்காகவும் அந்தக் கிராமத்தின் காலனியில் வசிக்கும் ஆதிதிராவிடர்கள் உட்பட யாதொரு நபருக்கும் தேவையான அனுமதி வழங்க, சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரி களுக்கு எவ்விதத் தடையும் இல்லை என்பது தெளிவாகிறது. இங்குக் குறிப்பிடக்கூடிய பாவு தோப்பு பாவு போடும் பணிக்குப் போதுமானதாக இல்லாதபோது, அவர்கள் பாவு போடும் பணிக்காக கிராமத்தின் தெற்குப் பகுதியில் சுமார் மூன்று ஏக்கர் பரப்பளவுள்ள மற்றொரு பகுதி நிலத்தை ஐயத்திற்கிடமின்றி வாங்கியுள்ளதால் செங்குந்தர்கள், இதற்குச் சட்டப்படி செல்திறனுள்ள மறுப்பு எதனையும் தெரிவிக்க முடியாது. பாட்டை புறம்போக்கு நிலத்தின் யாதொரு பகுதியில் செங்குந்தர்கள் மேற்கொள்ளும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில், அத்தகைய அனுமதியைப் பயன்படுத்துபவர்களை அத்தகைய வருவாய்த் துறை அதிகாரிகள் கட்டுப்படுத்தி வைப்பது அறிவார்ந்த செயலாகும் என்பதில் ஐயமில்லை. கட்டுப்பாடு விதிக்காமல் உரிமை வழங்குவதானது செங்குந்தர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கக்கூடும் என்பதாலும், பாட்டை புறம்போக்கு நிலத்தைப் பயன்படுத்து பவர்களுக்கிடையே தொடர்ந்து சச்சரவு ஏற்பட வழிவகுக்கும் என்பதாலும், அவ்வாறு நிகழாமல் தடுக்கவே, இதனைப் பயன்படுத்த கட்டுப்பாடு விதித்து அனுமதி வழங்குமாறு நான் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே, துணை நீதி மன்றம், O. S. எண் 30/ 1993-ன் வழக்கில் நி. அ. பு. எண் 331/1-ல் உள்ள பாவுத் தோப்பு மீதான சர்ச்சைக்குரிய உரிமைகள் குறித்து தீர்மானிக்கும் வகையில், அக்கிராமத்தில் மக்கள் மகிழ்ச்சியுடன் வசிக் கவும் வாழவும் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்க வேண்டியிருப்பதாலும், அங்கு அமைதி நிலவவும், 1992 நவம்பரில் நடைபெற்ற சம்பவங்களிலிருந்து செங்குந்தர்களும், ஆதி திராவிடர்களும் பெற்ற கசப்பான அனுபவத்தின் அடிப்படையில், அக்கிராமத்தில் வாழும் செங்குந்தர்கள், ஆதிதிராவிடர்கள், ஏனைய வகுப்பினர் அனைவரும் இனி விவேகத்துடன் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்படுகிறது; சாதாரணமாக சட்டப்படியான சிவில் உரிமை

களைப் பெற பலப்பிரயோகம் செய்தவர்களைத் தண்டிக்காமல் விடக்கூடாது என்ற போதிலும், இந்தச் சம்பவம் தொடர்பாக இருக்கக்கூடிய தனிவகையான விவரங்களையும், சூழ்நிலை களையும் கருதிப் பார்க்கையில், அக்கிராமத்தில் தற்போது நிலவும் அமைதியைப் பேணிக் காக்க, 1992 ஆம் ஆண்டு நவம்பர் 7, 8 ஆம் நாட்களில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான பல்வேறு புகார்கள் குறித்து மேற்கொண்டும் எடுக்க இருக்கும் குற்றவியல் நட வடிக்கைகளைக் கைவிட அரசு கருதிப் பார்க்க வேண்டும். அக்கிராமத்தில், அமைதியும், ஒற்றுமையும் நிலவ, போதிய காவல்துறையினர்களுடனும், தகவல் தொடர்பு வசதிகளுடனும் கூடிய ஒரு காவல் நிலையத்தை அங்கு ஏற்படுத்துவது குறித்து, உள்ளூர் மக்களிடையே நிலவும் கசப்புணர்வு, கோஷ்டி மனப்பான்மை ஆகியவற்றின் அடிப்படையில் கருதிப் பார்ப்பது உகந்ததாகும். ஆகையால், பொன்னூர் கிராமத்தில் வசிக்கும் மக்களிடையே இனிமேல் அமைதியும் ஒற்றுமையும் நிலவ, மேலே கருத்துத் தெரிவிக்கப்பட்ட நடவடிக்கைகள் போது மானவையாக இருக்கும் என்று முடிவுரை தெரிவிக்க விழைகிறேன்.

34. இந்தப் பணியை முடிக்கும் முன், வழக்குரைஞர்களும் என் பணியாளர்கள் அதாவது பிரிவு அலுவலர் திரு. பி. இராஜேந்திரன், தெரிவு நிலை உதவிப் பிரிவு அலுவலர் கே. நடராஜன், சுருக்கெழுத்து தட்டச்சர் எம். ரவிகுமார், அலுவலக உதவியாளர்கள் கே. விவேகானந்தன், எம். ஜாவித் உசைன், ஒட்டுநர் ஜெ. சத்யநாராயணன் ஆகியோர் ஆற்றிய அரும்பணியை பாராட்ட விழைகிறேன். தெரிவு நிலை உதவிப் பிரிவு அலுவலர் திரு. கே. நடராஜன் குறித்து தனிப்பட்ட வகையில் குறிப்பிட வேண்டும். அவருடைய நிருவாகம், நிதி நிருவாகம், பகிரங்க விசாரணை குறித்த நடைமுறை ஆகியவற்றை அவர் நன்கு தெரிந்திருந்து, நிறம்படப் பணியாற்றியது, இந்த கமிஷன் இப்பணிக்காலம் முழுவதும் அதன் பணியை சுமுகமாக முடிக்கப் பெரிதும் உதவியது. காட்சிக்கு வைக்கப்பட்ட கா. பொ. 2 எக்ஸ்கதிர் உட்பட இங்கு அளிக்கப்பட்ட ஆவணங்களைத் தற்போது செயலிலுள்ள விதிகளின்படி உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டுமென ஆணையாளரும் அதே வேளையில் எஞ்சியுள்ள கா. பொ. 1 அதாவது உடைந்த கைக்கடி காரத்தை அதைத் தாக்கல் செய்த சாட்சி எண் 17 முத்துவேலு என்பவரிடம் திருப்பிக் கொடுக்குமாறு ஆணையிடப்படுகிறது.

8—1—1994.

(ஒம்.) ————.
திரு. கே. இ. வரதன்,
விசாரணைக் கமிஷன்,
சென்னை-600 015.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் குறித்த பட்டியல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் குறித்த பட்டியல்.

விசாரணைக் கமிஷன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் குறித்த பட்டியல்.

தொடர் எண்.	சா. எண்.	பெயர் மற்றும் முகவரி.
(1)	(2)	(3)
1.	சா. 1	திரு. எம். கோபால், த/பெ. ஆர். மண்ணாங்கட்டி, வண்டிக்காரன் தெரு, பொன்னூர்.
2.	சா. 2	திரு. எம். லீலா விநோதன், த/பெ. மூர்த்தி, தலையாரி தெரு, பொன்னூர்.
3.	சா. 3	திரு. கே. செல்வராஜ், த/பெ. கன்னியப்பன், எஸ்.எஸ்.புரம், தேனாம்பேட்டை, சென்னை-6.
4.	சா. 4	செல்வி. கே. சகுந்தலா, த/பெ. கதிர்வேலு, பஞ்சாயத்தம்மன் கோவில் தெரு, பொன்னூர்.
5.	சா. 5	திரு. பி. ஜோசப், த/பெ. பொன்னுசாமி, பள்ளர் தெரு, பொன்னூர்.
6.	சா. 6	திரு. என். கலியபெருமாள், த/பெ. நாராயணன், தலையாரி தெரு, பொன்னூர்.
7.	சா. 7	திருமதி ஆண்டாள், க/பெ. பொன்னுசாமி (லேட்), 6/61, பஞ்சாயத்தம்மன் கோயில் தெரு, பொன்னூர்.
8.	சா. 8	செல்வி வி. அன்னக்கிளி, த/பெ. வரதராஜன், 6, பஞ்சாயத்தம்மன் கோயில் தெரு, பொன்னூர்.
9.	சா. 9	திருமதி வேண்டாவரம், க/பெ. கண்ணன், பஞ்சாயத்தம்மன் கோயில் தெரு, பொன்னூர்.
10.	சா. 10	திரு. என். கோபால், த/பெ. நாராயணன், 334, வண்டிக்காரன் தெரு, பொன்னூர்.
11.	சா. 11	திரு. வி. பாஞ்சன், த/பெ. வரதன், பஞ்சாயத்தம்மன் கோயில் தெரு, பொன்னூர்.
12.	சா. 12	எம். மணி, த/பெ. முனுசாமி, பள்ளர் தெரு, பொன்னூர்.

தொடர் எண்.	சா. எண்.	பெயர் மற்றும் முகவரி.
(1)	(2)	(3)
13.	சா. 13	திரு. எம். நடேசன், த/பெ. முருகன், பஞ்சாயத்தம்மன் கோயில் தெரு, பொன்னூர்.
14.	சா. 14	திருமதி பேபி, க/பெ. முருகேசன், வண்டிக்காரன் தெரு, பொன்னூர்.
15.	சா. 15	திரு. கே. வேலாயுதம், த/பெ. கந்தசாமி, வண்டிக்காரன் தெரு, பொன்னூர்.
16.	சா. 16	திரு. கே. ஜெயராமன், த/பெ. குப்பன், வண்டிக்காரன் தெரு, பொன்னூர்.
17.	சா. 17	திரு. பி. முத்துவேல், த/பெ. பெருமாள், வண்டிக்காரன் தெரு, பொன்னூர்.
18.	சா. 18	திருமதி சந்திரா, க/பெ. காசி, பஞ்சாயத்தம்மன் கோயில் தெரு, பொன்னூர்.
19.	சா. 19	திருமதி மல்லிகா, க/பெ. கனகராஜ், முத்தா கோயில் தெரு, பொன்னூர்.
20.	சா. 20	திரு. ஏ. லோகநாதன், த/பெ. அப்பாவு செங்குந்தர், 5/65, மேட்டுத் தெரு, பொன்னூர்.
21.	சா. 21	டாக்டர் பசீர் அகமது, த/பெ. காதர் மொகிதீன், உதவி மருத்துவர், அரசினர் மருத்துவமனை, வந்தவாசி.
22.	சா. 22	டாக்டர் இராமலிங்கம், உதவி மருத்துவர், அரசினர் மருத்துவமனை, வந்தவாசி.
23.	சா. 23	டாக்டர் எஸ். குமார், த/பெ. எல். சுப்ரமணியன், அறுவை சிகிச்சை உதவி மருத்துவர், அரசினர் மருத்துவமனை, வந்தவாசி.
24.	சா. 24	டாக்டர் முகமது ரபிக், த/பெ. ஜனாசி. முகமது முன்வீர், உதவி மருத்துவர், அரசினர் மருத்துவமனை, வந்தவாசி.

தொடர் எண்.	சா. எண்.	பெயர் மற்றும் முகவரி.
(1)	(2)	(3)
25.	சா. 25	டாக்டர் சுந்தரவனம், த/பெ. எம். நடராஜன், உதவி மருத்துவர், அரசினர் மருத்துவமனை, வந்தவாசி.
26.	சா. 26	டாக்டர் பி. மோகனசுந்தரம், த/பெ. கே. எம். பழனிசாமி முதலியார், உதவி மருத்துவர், அரசினர் மருத்துவமனை, திருவண்ணாமலை.
27.	சா. 27	திரு. எம். பிரான்சிஸ், த/பெ. ஜெ. முத்தையா, காவல்துறை உதவி ஆய்வாளர், மதுவிலக்கு செயல் பிரிவு, ஆரணி.
28.	சா. 28	டாக்டர் பி. அருணன், த/பெ. ஆர். பட்டாபி, உதவி மருத்துவர், அரசினர் பென்ட்லன்ட் மருத்துவமனை, வேலூர், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்.
29.	சா. 29	திரு. ஜி. செல்லன், த/பெ. கோவிந்தசாமி கவுண்டர், நிலை II காவலர், பேரணமல்லூர் காவல் நிலையம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.
30.	சா. 30	டாக்டர் ஸ்ரீனிவாசன், த/பெ. எம். இ. ஜெய்ராம், கதிரியக்க மருத்துவர், அரசினர் பென்ட்லன்ட் மருத்துவமனை, வேலூர்.
31.	சா. 31	திரு. நைனாதுரை, த/பெ. எம். கிருஷ்ணசாமி, காவல்துறை உதவி ஆய்வாளர், வந்தவாசி காவல் நிலையம்.
32.	சா. 32	டாக்டர் அஸ்ரப், த/பெ. குலாம் ரசூல், அவசரச் சிகிச்சை மருத்துவர், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.
33.	சா. 33	டாக்டர் உதேஷ் கணபதி, த/பெ. டாக்டர் டி. கணபதி, உதவி மருத்துவர், அரசினர் பென்ட்லன்ட் மருத்துவமனை, வேலூர்.
34.	சா. 34	திரு. முனிராமன், த/பெ. ஸ்ரீனிவாசன், காவல்துறை உதவி ஆய்வாளர், தெள்ளாறு காவல் நிலையம்.
35.	சா. 35	திரு. ஸ்ரீனிவாசன், த/பெ. எகிலரி, காவல்துறை உதவி ஆய்வாளர், மோராணம் காவல் நிலையம்.
36.	சா. 36	திரு. பிச்சாண்டி, த/பெ. பஞ்சாட்சர நாடார், தலைமைக் காவலர் 460, வந்தவாசி காவல் நிலையம்.

தொடர் எண்.	சா. எண்.	பெயர் மற்றும் முகவரி.
(1)	(2)	(3)
37.	சா. 37	திரு. ஆ. குணசேகரன், த/பெ. ஆறுமுகம், காவலர், வந்தவாசி காவல் நிலையம்.
38.	சா. 38	திரு. என். மணவாளன், த/பெ. ஏ. என். ரெங்கசாமி, காவலர் 289, கீழ்க்கொடுங்களூர் காவல் நிலையம்.
39.	சா. 39	திரு. எம். பி. முருகன், த/பெ. பி. பொன்னன், காவலர் 565, பேரணமல்லூர் காவல் நிலையம்.
40.	சா. 40	திரு. அ. துரைசாமி, த/பெ. அருணகிரி, காவலர் 648, வந்தவாசி காவல் நிலையம்.
41.	சா. 41	திரு. ம. அகஸ்தியப்பன், த/பெ. ஏ. மருதப்பன், நிலை I காவலர், பிரம்மதேசம் காவல் நிலையம்.
42.	சா. 42	டாக்டர் மனோகர், த/பெ. (லேட்) டி. இராதாகிருஷ்ணன், முடநீக்கியல் அறுவை மருத்துவர், அரசினர் பென்டல்லன்ட் மருத்துவமனை, வேலூர்.
43.	சா. 43	திரு. டி. தியாகராஜன், த/பெ. கே. எஸ். துரைசாமி, ஆய்வாளர் (குற்றவியல்), டி. எஸ். மாவட்ட நகர காவல் நிலையம்.
44.	சா. 44	திரு. ஏ. கருணாமூர்த்தி, த/பெ. கே. அர்ச்சுனன், தலைமைக் காவலர் 614, வடவநாக்கம்பாடி காவல் நிலையம்.
45.	சா. 45	திரு. மோகன், த/பெ. என். கேசவன், ஒட்டுநர், ஆயுதம் தாங்கிய காவல் பிரிவு, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.
46.	சா. 46	திரு. மோகன்ராஜ், த/பெ. ஆறுமுகம், காவல்துறை உதவி ஆய்வாளர் (குற்றப்பிரிவு), ஆரணி நகர் காவல் நிலையம்.
47.	சா. 47	திரு. எக்ஸ். விஜயகுமார், த/பெ. ஏ. சேவியர், காவல்துறை உதவி ஆய்வாளர் (குற்றப்பிரிவு)ஐ செய்யாறு.
48.	சா. 48	திரு. ஏ. சாம்ராஜ், த/பெ. ஆறுமுகம், தலைமைக் காவலர், வேட்டவலம் காவல் நிலையம்.
49.	சா. 49	திரு. பி. கோவர்தனன், த/பெ. பெருமாள்சாமி நாயுடு, காவல்துறை உதவி ஆய்வாளர், மதுவிலக்கு-செயல் பிரிவு, செய்யாறு.
50.	சா. 50	திரு. டி. நடராஜன், த/பெ. துரைசாமி, தலைமைக் காவலர், சந்தவாசல் காவல் நிலையம்.

தொடர் எண்.	சா. எண்.	பெயர் மற்றும் முகவரி.
(1)	(2)	(3)
51.	சா. 51	திரு. ஆர். முருகேசன், த/பெ. இராமசாமி, காவலர், வந்தவாசி காவல் நிலையம்.
52.	சா. 52	திரு. சி. சுந்தரம், த/பெ. சின்னமுத்து கவுண்டர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், மதுரை.
53.	சா. 53	திரு. பி. மகாராசன், த/பெ. கே. பொரையக் கவுண்டர், நீதித்துறை மாஜிஸ்டிரேட் II, செய்யாறு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



3. வைக்கப்பட்ட ஆவணங்கள் குறித்த பட்டியல்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. வைக்கப்பட்ட ஆவணங்கள் குறித்த பட்டியல்.

விசாரணைக் கமிஷன் தலைவர் திரு. கே. இ. வரதன் அவர்களிடம் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் குறித்த பட்டியல்.

தொடர் எண்.	சான்றாவணம் எண்.	சான்றாவண விவரம்.
(1)	(2)	(3)
1.	A-1	சாட்சி எண் 2 லீலா வினோதன், தாக்கல் செய்த, பி.எட். அஞ்சல் வழிக் கல்வித் தேர்வு அசல் விண்ணப்பம், 18—9—1992 ஆம் நாளிட்ட டி.டி. ஒப்புகைச் சான்று அட்டை, சென்னைப் பல்கலைக்கழகம்.
2.	A-2	சாட்சி எண் 2 லீலா வினோதன், தாக்கல் செய்த சென்னைப் பல்கலைக்கழகம் பி.எட். அஞ்சல் வழிக்கல்வி 1992 நவம்பர் தேர்வுக்கான அசல் கால அட்டவணை.
3.	A-3	வழக்குரைஞர், திரு. என். விஸ்வநாதன் (செங்குந்தர்) தாக்கல் செய்த அம்பேத்கார் மாவட்டம், ஆரணி, மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் 27—3—1991 ஆம் நாளிட்ட 591/1989 ஆம் எண் அசல் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் நகல்.
4.	A-4	வழக்குரைஞர் திரு. என். விஸ்வநாதன் தாக்கல் செய்த ஆரணி, சார்-நீதிபதிகள் நீதிமன்றத்தின் 14—9—1992 ஆம் நாளிட்ட 30/1991 ஆம் எண் மேல் முறையீட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் நகல்.
5.	A-5	வழக்குரைஞர் திரு. என். விஸ்வநாதன், திருவண்ணாமலை அலுவல் முறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்-கோட்டாட்சித் தலைவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 9—7—1955 ஆம் நாளிட்ட 1/1955 ஆம் எண் பல்வகை வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் நகல்.
6.	A-6	காவல்துறையினருக்காக ஆஜரான வழக்குரைஞர் திரு. என். சேஷாத்திரி கேட்டுக்கொண்டதன் பேரில், கமிஷன் விரும்பியவாறு, 1 ஆம் எண் சாட்சி, சாட்சிக் கூண்டில் நின்ற போது விசாரணைக் கமிஷன் நடவடிக்கைகளில் இட்ட கையொப்பம்.
7.	A-7	பொன்னூர், ஆரம்ப சுகாதார மையம், சாட்சி எண் 14, திருமதி பேபிக்கு வழங்கிய புறநோயாளிச் சீட்டு.
8.	A-8	சாட்சி எண் 17, திரு. முத்துவேல் தாக்கல் செய்த, வேலூர் வட ஆர்க்காடு அங்காடிக்குழு, திரு. முத்துவேலுக்கு வழங்கிய 6—11—1992 ஆம் நாளிட்ட தொகை பட்டியின் இரண்டாம் நகல்.
9.	A-9	திரு. பி. முத்துவேல் (சாட்சி எண் 17) ஒரு சாட்சி என்ற வகையில் அவர் விசாரணை செய்யப்பட்டபோது, அவருடைய தந்தையின் கையொப்பத்தை (பெயர்) தமிழிலும் ஆங்கிலத்திலும் கையொப்பம் இட்டுள்ளார்.
10.	A-10	திரு. ஏ. லோகநாதன் (சாட்சி எண் 20) தாக்கல் செய்த பாவுத் தோப்பின் வரைபடம்.
11.	A-11	பொன்னூர் கிராமம், செங்குந்தர்கள் சமூகத்தினர் செயலாளர் திரு. குப்புசாமிக்கு வழக்குரைஞர், திரு. என். எஸ். சந்திர மௌலீஸ்வரன் 24—11—1992 ஆம் நாளன்று பதிவுத் தபாலில் அனுப்பிய அறிவிப்பு.
12.	A-12	திரு. ஏ. லோகநாதன் (சாட்சி எண் 20) ஆரணி சார்-நீதிபதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 3—2—1993 ஆம் நாளிட்ட 30/1993 ஆம் எண் அசல் வழக்கில் அளிக்கப்பட்ட I.A. 65/1993 ஆம் எண் இடைக்காலத் தடை ஆணை.
13.	A-13	வழக்குரைஞர், திரு. ஆர். ரவி, தாக்கல் செய்த நி.அ.பு. எண் 331, 334/1-A தொடர்பான கிராம ஆவணங்களின் உண்மை நகல்.

(1)	(2)	(3)
14.	A-14	வழக்குரைஞர், செல்வி அஜீதா தாக்கல் செய்த சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியத்தின் தமிழ்நாடு பிரிவு அளித்த தகவல் அறியும் அறிக்கை. 8—11—1992 ஆம் நாளிட்ட பின்வரும் விபத்துப் பதிவேட்டுப் பதிவுகள், டாக்டர் பஷீர் அகமது (சாட்சி எண் 21) மூலம் தாக்கல் செய்யப்பட்டன.
15.	A-15	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப்பதிவு—தொடர் எண் 271651—(காவலர் 585) திரு. இராஜபாண்டி (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
16.	A-16	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271652—காவல்துறை ஆய்வாளர் திரு. டி. நியாகராஜன் (சாட்சி எண் 43) தொடர்பானது.
17.	A-17	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு தொடர் எண் 271652—திரு. பிச்சாண்டி (தலைமைக் காவலர் 460, சாட்சி எண் 36) தொடர்பானது.
18.	A-18	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271653—திரு. மோகன் (காவலர் 941, சாட்சி எண் 45) தொடர்பானது.
19.	A-19	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271654—திரு. குணசேகரன் (காவலர் 455, சாட்சி எண் 37) தொடர்பானது.
20.	A-20	வந்தவாசி அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271654—திரு. சாம்ராஜ் (தலைமைக் காவலர் 580, சாட்சி எண் 48) தொடர்பானது.
21.	A-21	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு தொடர் எண் 271655—திரு. முருகேசன் (காவலர் 620, சாட்சி எண் 51) தொடர்பானது.
22.	A-22	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271656—காவல்துறை உதவி ஆய்வாளர், திரு. மோகன்ராஜ் (சாட்சி எண் 46) தொடர்பானது.
23.	A-23	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271656—திரு. முனுசாமி (காவலர் 227, விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
24.	A-24	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271657—பல்லவன் போக்குவரத்துக் கழக நடத்துநர், செல்வராஜ் (சாட்சி எண் 3) தொடர்பானது.
25.	A-25	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271658—பொன்னூர், குப்பன் மகன் சந்திர சேகரன் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
26.	A-26	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271659—பொன்னூர், குப்பன் மகன் ஜெயராமன் (சாட்சி எண் 16) தொடர்பானது.
27.	A-27	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271660—பொன்னூர், சின்னப்பையன் மகன் ராஜ் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
28.	A-28	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271660—பொன்னூர், ராஜ் மகன் வெங்கடேசன் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
29.	A-29	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271661—பொன்னூர், பொன்னுசாமி மனைவி திருமதி ஆண்டாள் (சாட்சி எண் 7) தொடர்பானது.

(1)	(2)	(3)
30.	A-30	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271662—பொன்னூர், வெட்டியான் மனைவி திருமதி வேண்டாவரம் (சாட்சி எண் 9) தொடர்பானது.
31.	A-31	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு - தொடர் எண் 271662—பொன்னூர், கனகராஜ் மனைவி திருமதி மல்லிகா (சாட்சி எண் 19) தொடர்பானது.
32.	A-32	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271663—பொன்னூர், தங்காளன் மனைவி திருமதி இராஜம்மாள் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
33.	A-33	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271664—பொன்னூர், சாமிக்கண்ணு மனைவி திருமதி நாகம்மாள் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
34.	A-34	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271665—பொன்னூர், பாலசாமி மனைவி திருமதி குப்பாத்தி (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
35.	A-35	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271666—பொன்னூர், அப்பாசாமி மகன் திரு. சதாசிவம் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
36.	A-36	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271666—பொன்னூர், பொன்னம்பலம் மகன் திரு. சின்னதுரை (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
37.	A-37	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271667—பொன்னூர், கந்தசாமி மகன் திரு. பஞ்சாட்சரம் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
38.	A-38	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271668—பொன்னூர், பஞ்சாட்சரம் மகன் திரு. செல்வமணி (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
39.	A-39	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271668—பொன்னூர், அண்ணாமலை மகன் திரு. காசி (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
40.	A-40	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271669—பொன்னூர், நீலகண்டன் மனைவி பூனியம்மாள் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
41.	A-41	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 271670—பொன்னூர் முனுசாமி மகன் திரு. செல்வம் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
		8—11—1992 ஆம் நாளிட்ட பின்வரும் விபத்துப் பதிவேட்டுப் பதிவுகள், டாக்டர் ஐ. இராமலிங்கம் (சாட்சி எண் 22) மூலம் தாக்கல் செய்யப்பட்டன.
42.	A-42	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2935—பொன்னூர், பொன்னுசாமி மகன் திரு. ஜோசப் (சாட்சி எண் 5) தொடர்பானது.
43.	A-43	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2941—பொன்னூர், பெருமாள் மகன் திரு. தங்காளம் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
44.	A-44	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2928—பொன்னூர், மண்ணாங்கட்டி மகன் திரு. ஆறுமுகம் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.

(1)	(2)	(3)
45.	A-45	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2257—பொன்னூர், சின்னதம்பி (லேட்) மகன் திரு. வேடியப்பன் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
46.	A-46	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2956—பொன்னூர் குப்பன் மகன் திரு. துலுக்காணம் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
47.	A-47	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2340—பொன்னூர், கணேசன் மகன் திரு. துரைக்கண்ணு (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
48.	A-48	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2988—பொன்னூர், சுப்பராயன் (லேட்) மனைவி திருமதி கனகா (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
49.	A-49	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2976—பொன்னூர், மதியின் மனைவி திருமதி உஷா (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
50.	A-50	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2967—பொன்னூர் முத்துவின் மனைவி திருமதி கலா (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
51.	A-51	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2993—பொன்னூர், அண்ணாமலை மகன் திரு. மனோகரன் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
52.	A-52	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2998—பொன்னூர், அண்ணாமலை முதலியார் மகன் திரு. தனிகைமலை (விசாரணை செய்யப் படவில்லை) தொடர்பானது.
53.	A-53	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 3004—பொன்னூர், கணேசன் மகன் திரு. எகாம்பரம் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
54.	A-54	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 3007—பொன்னூர், சுப்பிரமணியம் மகன் திரு. குமரேசன் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
55.	A-55	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 3011—பொன்னூர், இரத்தினவேலு மகன் திரு. கந்தசாமி (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
56.	A-56	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 3017—பொன்னூர், தேரடி முகாம், மணியின் மனைவி திருமதி மலர்க்கொடி (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
		8—11—1992 ஆம் நாளிட்ட பின்வரும் விபத்துப் பதிவேட்டுப் பதிவுகள் டாக்டர் குமார் (சாட்சி எண் 23) மூலம் தாக்கல் செய்யப்பட்டன.
57.	A-57	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2927—பொன்னூர், முருகன் மகன் திரு. சின்னப்பையன் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர் பானது.
58.	A-58	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2947—பொன்னூர், குப்பன் மகன் திரு. மூர்த்தி (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.
59.	A-59	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு—தொடர் எண் 2961—பொன்னூர், படவேட்டன் மகன் திரு. மாணிக்கம் (விசாரணை செய்யப்படவில்லை) தொடர்பானது.

(1)	(2)	(3)
60.	A-60	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு-தொடர் எண் 2962—பொன்னூர், சின்னதம்பி மகன் திரு. ரெங்கசாமி தொடர்பானது (விசாரணை செய்யப்படவில்லை).
61.	A-61	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு-தொடர் எண் 2931—அரசம்பட்டு காலனி, கோவிந்தராஜ் மகன் திரு. துலுக்காணம் தொடர்பானது (விசாரணை செய்யப்படவில்லை).
62.	A-62	வந்தவாசி, அரசினர் மருத்துவமனையின் விபத்துப் பதிவேட்டுப் பதிவு-தொடர் எண் 2934—பொன்னூர், முருகன் மகன் திரு. ஏழுமலை தொடர்பானது (விசாரணை செய்யப்படவில்லை).
6. இணைப்பு III—விசாரணை அறிக்கையின் 23 ஆம் பத்தியில் வாக்குமூலத்தில்/உறுதிமொழிப் பத்திரத்தில் உள்ள விவரங்கள்.

தொடர் எண்.	பெயர்.	சாட்சி எண்/ சான்றாவணம் எண்.	இடமும் நேரமும்.	பயன்படுத்தப் பட்ட ஆயுதம்.	ஏற்பட்டதாகக் கூறப்படும் காயங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	கோபால், த/பெ. மண்ணாங்கட்டி	சா. எண். 1	வீடு, 8—11—1992 ஆம் நாள் காலை 7-30 மணி.	குறுந்தடி	கண்மூடித் தனமான அடி.
2	லீலா விநோதன், த/பெ. மூர்த்தி.	சா. எண். 2	வீடு, காவல்நிலையம், 8—11—1992 ஆம் நாள் காலை 7-30 மணி.	டி	இடது, வலது மேற்கைகளில் இரத்தக்கட்டு.
3	செல்வராஜ், த/பெ. கன்னியப்பன்.	சா. எண். 3	வீடு, 8—11—1992 ஆம் நாள் காலை 7-30 மணி.	டி	இடது கை.
4	சகுந்தலா, த/பெ. கதிர்வேல்.	சா. எண். 4	வீடு, 8—12—1992 ஆம் நாள் காலை 7-30 மணி.	குறுந்தடி, பூட்சுகள்.	மார்பு, வயிறு, உடம்பு முழுவதும்.
5	ஜோஸப், த/பெ. பொன்னுசாமி	சா. எண். 5	வீடு, 8—12—1992 காலை 7-00 மணி.	குறுந்தடி,	கை, கால், தொடை, முதுகு.
6	கலியபெருமாள் த/பெ. நாராயணன்.	சா. எண். 6	வீடு.	டி	இருகால்கள், கைகள், உடம்பு.
7	ஆண்டாள், க/பெ. பொன்னுசாமி.	சா. எண். 7	டி	டி	உடம்பு.
8	அன்னக்கிளி, த/பெ. வரதராஜன்.	சா. எண் 8	விவரங்கள் அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.	..	..
9	வேண்டாவரம், க/பெ. கண்ணன்.	சா. எண். 9	வீடு.	குறுந்தடி	முதுகு
10	மணி, த/பெ. முனுசாமி.	சா. எண். 12	டி	குறுந்தடி, பூட்சுகள்.	முழங்கால், தோள்பட்டை.
11	நடேசன், த/பெ. முருகன்.	சா. எண். 13	வீடு, காவல் நிலையம்.	குறுந்தடி, துப்பாக்கி.	இடது முழங் கால், வலது கால்.
12	ஜெயராமன், த/பெ. குப்பன்.	சா. எண். 16	பஞ்சாத்தம்மன் கோயில், பொன்னூர், 8—11—1992 அன்று காலை 6-00 மணி.	குறுந்தடி	..
13	மல்லிகா, க/பெ. கனகராஜ்.	சா. எண். 19	வீடு, 8—11—1992 அன்று காலை 8-00 மணி.	குறுந்தடி	இடது தொடை, உதடு, முதுகு, இடது கை.
14	அமாவாசை, த/பெ. செல்லமுத்து.	சா. ஆ. A-134	வீடு, 8—11—1992 அன்று காலை 7-00 மணி.	குறுந்தடி	..
15	ஆறுமுகம், த/பெ. மண்ணாங்கட்டி.	சா. ஆ. A-140.	வீடு, 8—11—1992 அன்று காலை 7-00 மணி.	குறுந்தடி	கை, உடல்,

குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை வடிவிலான விவர அறிக்கை.

விபத்துப் பதிவேட்டுப் பதிவில் உள்ள விவரங்கள்.

விபத்துப் பதிவேடு எண்/ஆண்டு	இடம், நேரம்.	பயன்படுத்தப்பட்ட ஆயுதம்.	காணப்பட்ட காயங்கள்.
(7)	(8)	(9)	(10)
A-105	பொன்னூர், 8—11—1992 காலை 6-30 மணி.	கல், கத்தி, குறுந்தடி, கடப்பாரை.	(i) இடது பொமினோ-ஆக்சிபல் பகுதியில் மிதிகாயம், (ii) இடது முழங்கால், வலது முதுகுப் பகுதியில் பரவலான இரத்தக்கட்டு.
A-102	பொன்னூர், 8—11—1992 காலை 6-30 மணி.	கல், கத்தி, குறுந்தடி, கடப்பாரை.	(i) வலது தொடையில் சிராய்ப்புக் காயம், (ii) இடது மேற்தை, இடது தோள்பட்டையில் பரவலான இரத்தக்கட்டு.
A-24	பொன்னூர், 8—11—1992 காலை 9-00 மணி.	குறுந்தடி	வலது முன்கை, வலது மேற்கை, வலது தோள், இடது முன்கை, வலது மணிக்கட்டு மேற்பகுதி, இடது இன்ஃப்ராஸ்பினேட்டஸ், வலது தொடை, வலது புற இடுப்பு ஆகிய பகுதிகளில் இரத்தக்கட்டு, இடது மேற்கையில் சிராய்ப்பு.
A-109	பொன்னூர், 8—11—1992 காலை 6-30 மணி.	கல், கத்தி, கடப்பாரை, கம்பு.	வலது முன்கை, வலது மணிக்கட்டு, இடதுபக்க முதுகு ஆகியவற்றில் பரவலான இரத்தக்கட்டு.
A-42	வீடு, 8—11—1992 காலை 6-30 மணி.	மரக்கட்டை	வலது முன்தொடை, வலது கையில் இரத்தக்கட்டு.
A-85	காலனி, 8—11—1992 காலை 6-30 மணி.	குறுந்தடி, கம்பு.	வலது முன்கை, இடது கையில் இரத்தக்கட்டு, காலில் ஒரு வெட்டு.
A-29	காலனி, 8—11—1992 காலை 7-00 மணி.	குறுந்தடி.	வலது முன்கை, இடது தொடை, முதுகில் இடது இன்ஃப்ராஸ்பினேட்டஸ் பகுதி ஆகியவற்றில் இரத்தக்கட்டு.
..	..	..	..
A-30	பொன்னூர், 8—11—1992 காலை 8-00 மணி.	குறுந்தடி	இடது தொடை, இடுப்பு விலாப்பகுதியில் இரத்தக்கட்டு.
A-80	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 6-30 மணி.	குறுந்தடி, கல், கத்தி, கடப்பாரை.	இடது கை, இடது முழங்காலில் இரத்தக்கட்டு.
A-75	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 6-30 மணி.	கல், கம்பு, கத்தி.	வலது தொடையில் இரத்தக்கட்டு, இடது விரலில் காயம்.
A-26	பொன்னூர், 8—11—1993 அன்று காலை 7-30 மணி.	கம்பு.	இரண்டு முழங்கால் பின்புறம், இடுப்பு பின்புறம், முதுகில் வலது பக்க இன்ஃப்ராஸ்பினேட்டஸ் பகுதி, மார்பு, இடுப்பு ஆகியவற்றில் இரத்தக்கட்டு. வலது முன் கையில் மிதி காயம்.
A-31	காலனி, பொன்னூர், 8—11—1992, அன்று காலை 8-00 மணி.	குறுந்தடி	இடது முழங்கை, வலதுபக்க பிட்டம் ஆகிய வற்றில் இரத்தக்கட்டு.
A-72	காலனி, பொன்னூர், 8—11—1992 அன்று காலை 6-30 மணி.	குறுந்தடி	இடது முன்கை, மேற் முழங்கை ஆகியவற்றில் இரத்தக்கட்டு, தொடையில் காயம்.
A-44	வீடு, 8—11—1992 அன்று காலை 6-30 மணி.	மரக்கட்டை	இடது முன்கையில் இரத்தக்கட்டு, இடது கையில் வெட்டு, இடது முழங்கை, இடது முழங்கால், வலது முழங்கால் மூட்டு, இடது மேற் சீப்ராந்தோ சினியஸ் ஆகியவற்றில் இரத்தக்கட்டு.

இணைப்பு

வாக்குமூலத்தில்/ உறுதிமொழிப் பத்திரத்தில் உள்ள விவரங்கள்.

தொடர் எண்.	பெயர்.	சாட்சி எண்/ சான்றாவணம் எண்.	இடமும் நேரமும்.	பயன்படுத்தப் பட்ட ஆயுதம்.	ஏற்பட்டதாகக் கூறப்படும் காயங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
16	சந்திரசேகரன், த/பெ. குப்பன்.	சா.ஆ. A-141.	வயல், 8—11—1992 அன்று காலை 7-30 மணி.	குறுந்தடி.	உடல்.
17	சின்னப்பையன், த/பெ. முருவன்.	சா.ஆ.A-144	வீடு, 8—11—1992 அன்று காலை 7-30 மணி.	குறுந்தடி.	உடல்.
18	துரை, த/பெ. இராஜா	சா.ஆ.A-149	வீடு, 8—11—1992 அன்று.	..	..
19	பி. எம். முருகன்.	சா.ஆ.A-152	வீடு, 8—11—1992 அன்று.	..	கை, கால்.
20	கலா, க/பெ. முத்து	சா.ஆ.A-157	கடை, பொன்னூர். 8—11—1992.	..	..
21	டி. காசி, த/பெ. தங்காளன்	சா.ஆ.A-165	நெல் வயல், 8—11—1992 அன்று காலை 7-30 மணி.	..	கால்.
22	குப்பன், கந்தரி என்பவரின் மகன்.	சா.ஆ.A-169	வீடு, 8—11—1992 அன்று காலை.	..	உடல் முழுவதும், இடது கை முறிவு.
23	மாணிக்கம், த/பெ. படவேட்டன்	சா.ஆ.A-178	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 7-30 மணி.	..	உடல் முழுவதும்.
24	மங்கையம்மாள், க/பெ. நாராயணன்.	சா.ஆ.A-180	வீடு, 8—11—1992 அன்று காலை 8-00 மணி.	..	..
25	மாசனன், த/பெ. வெள்ளை	சா.ஆ.A-182	வீடு, 8—11—1992 அன்று காலை 7-30 மணி.	..	முகம், உடல் முழுவதும்.
26	மூர்த்தி, த/பெ. குப்பன்	சா.ஆ.A-184	வீடு, 8—11—1992 அன்று காலை 7-30 மணி.	குறுந்தடி.	தலை தவிர உடல் முழுவதும்.
27	படவேட்டன், த/பெ. ராகவன்.	சா.ஆ.A-205.	பொன் னூர், 8—11—1992 காலை.	குறுந்தடி.	இடது முழங்கால், உடல் முழுவதும்.
28	புஷ்பவதி, க/பெ. கதிர்வேலு.	சா.ஆ.A-216.	வீடு, 8—11—1992	..	..
29	இராஜம்மாள், க/பெ. தங்காளன் (காலஞ்சென்றவர்).	சா.ஆ.A 218	வீடு, 8—11—1992 அன்று காலை 7-15 மணி.	..	தொடை.

III—தொடர்ச்சி.

விபத்துப் பதிவேட்டுப் பதிவில் உள்ள விவரங்கள்.

விபத்துப் பதிவேடு சான்றவணம்.	இடம், நேரம்.	பயன்படுத்தப்பட்ட ஆயுதம்.	காணப்பட்ட காயங்கள்.
(7)	(8)	(9)	(10)
A-25 ..	ஆதிநாவிடர் காலனி, பொன்னூர், 8—11—1992 அன்று காலை 7-30 மணி.	குறுந்தடி	வலது, இடது முழங்காலில் இரத்தக்கட்டு. வலது முன் கையில் நேரான சொய்ப்பும், கன்ன காயமும், வலது முழங்கை அருகே சொய்ப்பு.
A-57 ..	வீடு, 8—11—1992 அன்று காலை 7—30 மணி.	கம்பு.	வலது முழங்கை, வலது தொடை, வலது பக்க பிட்டம் ஆகியவற்றில் கன்ன காயம், வலது முன்கையில் சொய்ப்பு, வலது மணிக்கட்டில் பெரிய வீக்கம். முதுகின் இடது பக்கத்திலும், வலது முழங்காலிலும், வலது பக்க இடுப்பிலும் இரத்தக்கட்டு. வலது காலில் சிராய்ப்பு.
A-79 ..	வீடு, 8—11—1992 அன்று காலை 6—30 மணி.	கம்பு, கத்தி, கடப்பாரை.	வலது தொடையில் வெட்டு, ஏனைய தான்கு காயங் கள்.
A-62 ..	வீடு, 8—11—1992 அன்று காலை 7.00 மணி.	கம்பு.	இடது மணிக்கட்டு, இடது முழங்கை, இடது பெருவிரல், வலது தொடை, இடது தொடை, வலது இடுப்பு ஆகியவற்றில் இரத்தக்கட்டு.
A-50 ..	வீடு, 8-11-1992 அன்று காலை 6-30 மணி.	மரக்கட்டை, குறுந்தடி.	வலது முன் கை, வலது கால் பகுதியில் இரத்தக்கட்டு.
A-103 ..	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 6-30 மணி.	கல், கம்பு, கத்தி, கடப்பாரை.	வலது முன்கை, இடது வலது கால்கள், இடது பக்க முதுகு ஆகியவற்றில் பரவலான இரத்தக்கட்டு.
A-107 ..	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 6-30 மணி.	கத்தன், குறுந்தடி, கத்தி, கடப்பாரை.	வலது மோதிர விரலில் வெடி காயம், இடது மணிக்கட்டு இணைப்பு, வலது கை, இடது கால் ஆகியவற்றில் பரவலான இரத்தக்கட்டு.
A-59 ..	மேட்டுத் தெரு, பொன்னூர் 8—11—1992 அன்று காலை 7-00 மணி.	குறுந்தடி	தலை உச்சி வட்டத்தின் முன் பக்கத்தில் இரத்தக் கலிவுடன் கூடிய வெடி காயம், இடது பாதத்தில் வெடி காயம், வலது முழங்கை, இடது முழங்கை ஆகியவற்றில் அதிக அளவு வீக்கம், வலது இடுப் பிலும், இடது இடுப்பிலும், வலது காலிலும் இரத்தக்கட்டு.
A-115 ..	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 6-30 மணி.	கல், குறுந்தடி, கத்தி, கடப்பாரை.	இடது தொடை, வலது கையில் பரவலான இரத்தக் கட்டு.
A-76 ..	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 8-30 மணி.	கல், குறுந்தடி, கடப்பாரை.	வலது தோள் பட்டையில் வெட்டு, ஏனைய மூன்று காயங்கள்.
A-58 ..	வீடு, 8—11—1992 அன்று காலை 8-30 மணி.	குறுந்தடி.	இடது மேல் கை, வலது பக்க முதுகு, வலது பக்க பிட்டம், இடது பக்க பிட்டம், இடது முழங்கால் ஆகியவற்றில் இரத்தக்கட்டு.
A-109 ..	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 6-30 மணி	கல், கத்தி கடப் பாரை.	இடது பேரண்டல் பகுதியில் வெடி காயம், வலது தோள்களும் இடது மணிக்கட்டு மூட்டிலும் பரவலான வீக்கம்.
A-67 ..	அவர் வீட்டு அருகே.	குறுந்தடி.	வலது முன் கையில் வெடி காயம், அத்துடன் வலது காலில் இரத்தக்கசிவு, இடது காலில் இரத்தக்கட்டு.
A-32 ..	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 8-00 மணி.	குறுந்தடி.	வலது முழங்கையிலும் இடது தொடையிலும் இரத்தக் கட்டு.

இணைப்பு

வாக்குமூலத்தில்/உறுதிமொழிப் பத்திரத்தில் உள்ள விவரங்கள்.

தொடர் எண்.	பெயர்.	சாட்சி எண்/ சான்றாணம் எண்.	இடமும் நேரமும்.	பயன்படுத்தப் பட்ட ஆயுதம்.	ஏற்பட்டதாகக் கூறப்படும் காயங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
30	இராஜி, த/பெ. சின்னப்பையன்.	சா.ஆ.A 221	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 7·00 மணி.	..	வலது கை.
31	இராமன், த/பெ. நாராயணன் ..	சா.ஆ.A 222	பொன்னூர், 8—11—1992 ஆம் நாளன்று காலை.	..	தலை.
32	சங்கர், த/பெ. பட்டு ..	சா.ஆ.A 226	பொன்னூர்	குறுத்தடி.	..
33	சுப்பிரமணி, த/பெ. பெருமாள் ..	சா.ஆ.A 236	பொன்னூர் காவல் நிலையம்.	குறுத்தடி.	கைகள்.
34	சுந்தரம்மாள், க/பெ காலஞ்சென்ற மாலைமணி.	சா.ஆ.A 237	வீடு, காவல் நிலையம், 8—11—1992 ஆம் நாள்.	..	கை.
35	தங்காளன், த/பெ. பெருமாள் ..	சா.ஆ.A 239	வீடு, 8—11—1992 ஆம் நாள்.	குறுத்தடி.	..
36	துரைக்காளம், த/பெ. கோவிந்த சாமி.	சா.ஆ.A 240	வீடு, 8—11—1992 ஆம் நாள் காலை 7.15 மணி.	..	காலிலும் உடம்பு முழுவதிலும்.
37	உஷா, க/பெ. மதியழகன்	சா.ஆ.A 243	வீடு, 8—11—1992 ஆம் நாள் காலை 7.30 மணி.	..	உடம்பு முழுவதும்.
38	வேலியப்பன், த/பெ. சின்னத் தம்பி.	சா.ஆ.A 248	பொன்னூர், 8—11—1992 அன்று காலை.	..	கால்களிலும் கைகளிலும்.
39	வேண்டாவரம்	சா.ஆ.A 252	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 7.45 மணி.	..	..

குறிப்பு.—(1) சான்றாகக் காட்டப்பட்ட 29 விபத்துப் பதிவேட்டுப் பதிவுகளைப் பொறுத்தவரையில், சம்பந்தப் பத்திரங்கள் பெறப்படவுமில்லை.

(2) உறுதிமொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்த 94 பேர்களைப் பொறுத்தவரையில், விபத்துப்

(3) விசாரிக்கப்பட்ட 3 சாட்சிகளைப் பொறுத்தவரையில், விபத்துப் பதிவேட்டுப் பதிவுகள் எவையு

III—தொடர்ச்சி.

விபத்துப் பதிவேட்டுப் பதிவில் உள்ள விவரங்கள்.

விபத்துப் பதிவேடு சான்றாவணம்.	இடம், நேரம்.	பயன்படுத்தப்பட்ட ஆயுதம்.	காணப்பட்ட காயங்கள்.
(7)	(8)	(9)	(10)
A-27	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 8.00 மணி.	குறுந்தடி	முதுகின் இன்கிபிராவிஸ்பூலன் இடது பகுதியில் ரொய்ப்பும், ஏனைய ஏழு காயங்களும்.
A-106	பொன்னூர், 8—11—1992 ஆம் நாளன்று காலை 6-30 மணி.	கல், கம்பு, கத்தி, கடப்பாரை.	இடது கை, வலப்பக்க முதுகு, வலது முழங்கை ஆகிய வற்றில் பரவலாக இரத்தக்கட்டு.
A-77	பொன்னூர், 8—11—1992 ஆம் நாளன்று காலை 6-30 மணி.	கல், கம்பு, குறுந்தடி, கத்தி, கடப் பாரை.	இடப்பக்க முகத்தில் இழி காயம், இடப்பக்க தொடையில் இரத்தக்கட்டு.
A-84	பொன்னூர், 8—11—1992 ஆம் நாளன்று காலை 6-30 மணி.	கல், கம்பு, குறுந்தடி, கத்தி, கடப்-பாரை.	வலது மணிக்கட்டில் இரத்தக் கட்டும் மூன்று காயங்களும்.
A-88	பொன்னூர்.	குறுந்தடி, கல், கம்பு.	வலது கையிலும் வலது பக்க இடுப்பிலும் இரத்தக் கட்டு.
A-43	பொன்னூர் காலனி, 8—11—1992 ஆம் நாள் காலை 6-30 மணி.	மரக்கட்டை, குறுந்தடி.	வலது பக்க செபிலா (Sepila) இடக்கை, வலக்கை ஆகியவற்றில் இரத்தக்கட்டுகளும் ஐந்து பிற காயங்களும்.
A-61	பொன்னூர், 8—11—1992 ஆம் நாள் காலை 7.30 மணி.	தடி.	இடது காலில் ஒரு இழி காயம், அதில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது, இடது பக்க முதுகில் இழி காயம், இடக்கால், இடது முன்கை, இடது மேல்கை ஆகியவற்றில் அளவுக்கு மீறிய வீக்கம், வலது பக்க முழங்கை, இடப்பக்க முதுகு ஆகிய வற்றில் இரத்தக் கட்டு.
A-49	காவல் நிலையம், 8—11—1992 ஆம் நாள் காலை 9.00 மணி.	மரக்கட்டை	வலது பக்க ஸ்பெடல் (Sbetal) இடது கை ஆகியவற்றில் இரத்தக்கட்டு.
A-45	பொன்னூர் காலனி, 8—11—1992 அன்று காலை 6.30 மணி.	கம்பு	இடது முன்கையில் இரத்தக்கட்டு, மேலும் இரண்டு காயங்கள்.
A-30	பொன்னூர், 8—11—1992 அன்று காலை 8-00 மணி.	குறுந்தடி.	இடது பக்கத் தொடையிலும், வலது பக்க பிட்டத் திலும் இரத்தக்கட்டு.

பட்டவர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்படவுமில்லை; அன்றியும் அவர்களிடமிருந்து உறுதிமொழிப் பதிவேட்டுப் பதிவுகள் எவையுமில்லை.
மில்லை.

(ஒப்பம்)
விசாரணைக் கமிஷனர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



7. விசாரணைக் கமிஷனுக்குத் தெரிவிக்கப்பட்ட பல்வேறு ஆய்வு வரம்புப் பகுதிகள் குறித்து அளிக்கப்பட்ட காரணங்கள், பதிவு செய்யப்பட்ட முடிவுகள் குறித்த கருக்கம்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7. விசாரணைக் கமிஷனுக்குத் தெரிவிக்கப்பட்ட பல்வேறு ஆய்வு வரம்புப் பகுதிகள் குறித்து அளிக்கப்பட்ட காரணங்கள், பதிவு செய்யப்பட்ட முடிவுகள் குறித்த சுருக்கம்.

பகுதி I

(விசாரணை அறிக்கையிலுள்ள 3 முதல் 15 வரையிலான பத்திகள்.)

இந்தத் தகராறில் அடங்கியுள்ள பொருள், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்தில் 331/1 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தில் அடங்கியுள்ளதும், பலன் தரும் 60 புளிய மரங்களுடன் 1.52 எக்டேர் பரப்பளவுள்ள காலி இடத்தையும் கொண்டுள்ளதுமான சிறிய நிலப்பரப்பு தொடர்புடையதாகும். கிராமக் கணக்குகளில் '' தர்மதாயம் '' என்றழைக்கப்படுகின்ற இந்த நிலம், அருள்மிகு திரு. சௌந்தர்யராத ராஜப் பெருமாள் கோயில், அருள்மிகு திருக்காமேஸ்வரர் கோயில் ஆகியவற்றின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. T. D. 547 ஆம் எண்ணின்கீழ் இனாம் மூலப் பதிவேட்டின் குறிப்பின்படி இக்கோயில்களின் பராமரிப்பிற்காக இந்நிலம் வழங்கப்பட்டது அல்லது ஒப்படை செய்யப்பட்டது. அருள்மிகு திரௌபதி அம்மன் கோயில் இந்த நிலத்தின் மையத்தில் அமைந்துள்ளது. நி.அ.பு. எண் 332 என்று தனியே அளவை செய்து குறிக்கப்பட்டுள்ளது. வந்தவாசி நகராதிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பொன்னூர் கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 7,402 ஆகும். அவர்களில் 310 பேர் செங்குந்தர்கள். அவர்களுடைய தலையாய பணி நெசவுத் தொழில் ஆகும். 950 பேர் ஆதிதிராவிடர்கள். அவர்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலாளர்கள் ஆவர். எஞ்சியுள்ளவர்கள் வன்னியர்களும் சமணர்களும் ஆவர். அவர்களுக்கென்று சிறப்பான அல்லது குறிப்பிட்ட தொழில் ஏதுமில்லை. செங்குந்த முதலியார்கள், மேற்சொன்ன 331/1 ஆம் எண் நி. அ. புலத்தில் உள்ள காலியான நிலப்பகுதியைக் கடந்த காலத்தில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, நெசவுக்கு முந்தைய வேலைகளைச் (பாவு போடுதல்) செய்வதற்காகப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதற்கு மறுப்பு ஏதுமில்லை. இவ்வாறு அந்நிலம் அந்த வேலையைச் செய்வதற்கே முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததற்குப் பொருத்தமாக அப்பகுதி ''பாவுத் தோப்பு '' என்றும் அழைக்கப்படலாயிற்று. மேலும், இத்தகைய நெசவுக்கு முந்தைய வேலை, காலை 8 மணிக்கு முன் சுமார் 3 மணி நேரம் என்ற குறைந்த கால அளவிலும், காலை நேரச் சூரியனின் இள வெப்பம் நிலவுகின்ற தட்ப வெப்ப நிலையிலும் மட்டுமே நடைபெற்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகவும் அரிய சந்தர்ப்பங்களில் மட்டுமே மாலையில் மூன்று மணி நேரம் சூரியன் மறைவதற்கு முன்பு மேற்சொன்ன வேலை நடைபெறும். கிராமத்திலுள்ள அனைத்துக் கோயில்களையும் அவற்றின் சொத்துக்களையும் பொதுவாக நிருவகிப்பதற்கு வகை செய்வதற்காக, இன வேதகிள்ளி, அந்தக் கிராமத்தில் வசிக்கின்ற இந்துக்கள் அனைவரும் 1911 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர் என்பது அளிக்கப்பட்ட பதிவுக்குகளிலிருந்து தெரிய வருகிறது. அத்தகைய ஒப்பந்தம் இருந்த போதிலும், கோயில்களையும் அவற்றின் சொத்துக்களையும் தாங்கள் மட்டுமே நிருவகிக்க உரிமையுடையவர்கள் என்னும் கோரிக்கையைச் செங்குந்த முதலியார்கள் முன் வைத்தனர். இதன் காரணமாக, 1917-க்கும் 1988-க்கும் இடையே செங்குந்த முதலியார்களுக்கும் வன்னியர்களுக்கும் இடையே உரிமையியல் நீதிமனறங்களிலும், ஏனைய குறிப்பிட்ட சட்டப்படிக்கான மன்றங்களிலும் எண்ணற்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அதன் விளைவாக, கிராமத்திலுள்ள கோயில்களையும், அவற்றின் சொத்துக்களையும் நிருவகிக்கின்ற உரிமை, அந்தக் கிராமத்தில் வசிக்கின்ற அனைத்து இந்து மதத்தினரிடம் நிலை பெற்றிருக்கும் வகையில் தீர்ப்பளிக்கப்பட்டு, அந்த வழக்குகள் முடித்து வைக்கப்பட்டன. 1989 ஆம் ஆண்டில், அதற்கு முந்தைய எந்த ஒரு வழக்கிலும் உண்மை நியமனதாரராக இல்லாதவர்களான, அந்த கிராமத்தில் வசிக்கின்ற ஆதிதிராவிடர்கள், இந்தச் சொத்துரிமை, பரமாபிப்புரிமை வழக்குகளின் சூழலில் இடையே நுழைந்தனர். அவர்கள் தங்களுடைய காலனியில் அம்பேத்கார் மன்றம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு, பாவுத்தோப்பில் அண்டொன்றில் மூன்று அல்லது நான்கு இரவுகளுக்கு இரவு 10 மணியிலிருந்து காலை 4 மணி வரையில் அவர்களுடைய பரம்பரிய விழாக்களை நடத்துவதற்கும், கூட்டங்களைக் கூட்டுவதற்கும் அவர்களின் உரிமையை உறுதி செய்ய விரும்பினர். இதற்குச் செங்குந்த முதலியார்கள் மறுப்புத் தெரிவித்து, ஆரணி, மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் O. S. 591/1989 ஆம் எண்ணில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து, மேற்சொன்ன நோக்கங்களுக்காக பாவுத் தோப்பினை பயன்படுத்த முயற்சி செய்த பெயர் குறிப்பிடப்பட்ட 9 ஆதிதிராவிடர்களுக்கு எதிராக தடையாணையைப் பெற்றனர். மேற்சொன்ன தீர்ப்பு ஆணை உறுதிப்பட்டதையடுத்து, இது தொடர்பாக, காவல்துறை முதலில் அளித்திருந்த அனுமதியைச் செங்குந்த முதலியார்கள் தெரிவித்த மறுப்பின் பேரில் ரத்து செய்துவிட்டப்படியால், காவல் துறையினரின் ஆணையை மீறி, ஆதிதிராவிடர்கள் 25-10—1992 ஆம் நாளன்று 334/1எ ஆம் எண் நி. அ. புலத்தில் அமைந்துள்ளதும், பாட்டை புறம்போக்கின் அருகில் உள்ளதுமான களப் பகுதியில் மேடை ஒன்றை அமைத்து பாவுத் தோப்பின் ஒரு பகுதியில் கூட்டம் ஒன்றை நடத்தினர். இருப்பினும், வருவாய் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் மேற்சொன்ன கூட்டம், பாதியிலேயே கலைக்கப்பட்டது. மேற்சொன்ன அதிகாரிகள் அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு, 3—11—1992, 4—11—1992 மற்றும் 7—11—1992 ஆகிய நாட்களில் கூட்டங்கள் நடத்தினர். எனினும், அந்த அமைதிக் கூட்டங்கள் தோல்வியுற்றன.

2. உரிமையியல் நீதிமன்றத் தீர்ப்பு, பாவுத்தோப்பையும், பாட்டை புறம்போக்கின் பகுதிகளையும் அனுபவிப்பதற்குத் தனி முழு உரிமையை அளித்திருந்த காரணத்தின் பேரில், ஆதிதிராவிடர்களைப் பாவுத் தோப்பில் ஆண்டொன்றில் மூன்று இரவுகளுக்காவது தங்களுடைய பாரம்பரிய விழாக்களை நடத்த அனுமதிப்பதற்குச் செங்குந்த முதலியார்கள் மேற்சொன்ன அமைதிக் கூட்டத்தில் திட்டவட்டமாக மறுத்து விட்டதும், அமைதிக் கூட்டங்களை நடத்திய வருவாய் மற்றும் காவல்துறை அதிகாரிகள் உதவிக்கு வர முடியாத நிலையில் இருந்ததும், ஆதிதிராவிடர்களின் உணர்வைப் பெரிதும் பாதித்து விட்டதாகத் தோன்றுகிறது. இத்தனைக்கும் இந்த விஷயத்தை மேற்சொன்ன அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் வைத்து, 10—11—1992-க்குள் அவருடைய முடிவைப் பெறுவதாகவும் வாக்களித்தனர். அதன் மேல் ஆதிதிராவிடர்கள் பாவுத் தோப்பில் தங்களுடைய கூட்டங்களை நடத்துவது என்ற குறிக்கோளை எய்துவதற்காக, அல்லது செங்குந்தர்கள், பாவுத்தோப்பை நெசவுக்கு முந்தைய வேலைகளைச் செய்வதற்குப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்காக சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டனர். இத்தீர்மானத்தைச் செயல் படுத்தும் வகையில், அமைதிக் கூட்டம் பாதியில் முடிந்த 7—11—1992 ஆம் நாளன்று மாலையிலேயே பொன்னூர் கிராமத்தின் நுழைவிடத்தில் தங்களுடைய காலனிக்கு அருகில் ஆத்திரங்கொண்டு வன்முறையில் இறங்கினர். இதன் விளைவாக, முதலியார் இனத்தைச் சேர்ந்த திருவாளர்கள் மாணிக்க வாசகம், காண்டீபன் ஆகியோரும், காவல்துறைப் பணியாளர்கள் சிலரும் காயமடைந்தனர். 25—10—1992 ஆம் நாள் இரவிலிருந்து கிராமத்தில் சம்பவம் நடந்த இடத்தில் காவல் பணியை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட வந்தவாசி காவல் நிலையத்தைச் சேர்ந்த காவல்துறை இன்ஸ்பெக்டர் திரு. தியாகராஜன் (சாட்சி எண் 43) 7—11—1992 ஆம் நாள் மாலையிலிருந்து கிராமத்தில் பாதுகாப்புப் பணியை மேற்கொள்வதற்காக, காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் நால்வரையும், தலைமைக் காவலர்கள் ஐவரையும், காவலர்கள் இருபத்தைந்து பேரையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். மேலே கூறப்பட்ட விவரங்கள், 8—11—1992 ஆம் நாளன்று காலை பொன்னூர் கிராமத்தில் செங்குந்தர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் இடையே வகுப்புப் பதட்ட நிலையும் குழு மோதல்களும் ஏற்பட்டதற்கான காரணங்களையும் சூழ்நிலைகளையும் குறிப்பிடு கின்றன.

பகுதிகள் II, III, IV.

(அறிக்கையில் 16 முதல் 30 வரை உள்ள பத்திகள்.)

3. நெசவுக்கு முந்தைய பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும், அப்படிச் செய்தால் விரும்பத்தகாத சம்பவம் நிகழ்ந்து விடும் என்றும் ஆய்வாளர் (சாட்சி 43) கூறிய ஆலோசனையை உதறிவிட்டு, 8—11—1992 அன்று காலை 5.30 மணிக்குப் பாவுத்தோப்பில் செங்குந்தர்களில் சிலர் நெசவுக்கு முந்தைய வேலைகளை மேற்கொள்ளத் தொடங்கியபோதும் பாவுத்தோப்பில் செங்குந்தர்கள் நெசவுத் தொழிலைச் செய்வதையும், காவல்துறையினரும் அங்கிருப்பதையும் பார்த்த ஆதிதிராவிடர்களில் சிலர் காலனிக்குச் சென்று கம்புகள், கற்கள், சங்கிலி முதலிய ஆயுதங்களுடன் பெரும் எண்ணிக்கையில் திரும்பி வந்தனர். வன்முறை எதனையும் தூண்ட வேண்டாம் என்று ஆதி திராவிடர்களைக் காவல்துறையினர் நயந்து கேட்டுக்கொண்டது பலனளிக்கவில்லை. ஏனெனில், செங்குந்தர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள செங்குந்தர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவே காவல்துறையினர் அங்கு உள்ளார்கள் எனத் தவறாக நினைத்து, செங்குந்தர்கள் மீதும் இடையில் சிக்கிக் கொண்ட காவல்துறை யினர் மீதும் ஆதிதிராவிடர்கள் கற்கள், கம்புகள் கொண்டு தாக்கினர். இதைத் தவிர்க்க முடியாத நிலையில் செங்குந்தர்களும், கற்கள், கம்புகள் முதலியவற்றைக் கொண்டு ஆதி திராவிடர்களைத் திருப்பித் தாக்கினர். மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்த காவலர்களால் திறமையான முறையில் தடுக்க முடியாத அல்லது கட்டுப்படுத்த முடியாத இத்தகைய கடும் மோதலின் விளைவாக (காவலர்கள் சண்டையிடும் கோஷ்டியினரைத் தள்ளிவிடவும், பிரிக்கவும் மட்டுமே தங்கள் குறுந்தடிகளைப் பயன்படுத்தினர்) காவல்துறையினைச் சேர்ந்த 10 பேரும், ஆதி திராவிடர்களைச் சேர்ந்த ஆண், பெண் 72 பேரும், செங்குந்தர் வகுப்பைச் சேர்ந்த 33 பேருமாக மொத்தத்தில் 116 பேர் காயமுற்றனர். இதில் பெரும்பாலானோர் அடிபட்ட காயமும், சிராய்ப்புக் காயமும் உற்றனர். காவல்துறைக் துணைக் கண்காணிப்பாளர் படைக்கலத் தாங்கிய மேசக் காவல் படையினர் உடன் வந்தபின்தான் மோதலில் ஈடுபட்டவர்கள் இங்குமங்கும் ஓடினர். அவர்கள் சென்ற பின்னர், தொடர்ந்து காவலர்களை மீறி நின்றவர்களும் காயமுற்ற வர்களும் மட்டுமே அங்கு எஞ்சியிருந்தனர். இவர்களைக் காவல்துறையினர் கைது செய்தனர். காயமுற்ற அனைவரும் சிகிச்சைக்காக வந்தவாசி அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். ஆதிதிராவிடர்கள் சார்பாக கோபால் (சாட்சி எண் 1) என்பவரும் செங்குந்தர்கள் சார்பாக செல்வம் (விசாரிக்கப்படவில்லை) என்பவரும் தாக்கல் செய்த புகார் மற்றும் எதிர் புகார் பேரில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. விசாரணையின்போது அளிக்கப்பட்ட சாட்சியம், குறிப்பாக காவல்துறைக் கண்காணிப்பாளரின் இரண்டு அறிக்கைகள், மாவட்ட ஆட்சித் தலைவரின் முதல் அறிக்கை (இவர்கள் இருவரும் சம்பவம் நடந்த உடனேயே பொன்னூர் கிராமத்திற்குச் சென்றனர்) ஆகியவை 8—11—1992 அன்று காலையில் தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்கள் மேலே விவரித்துள்ளவாறு நடந்துள்ளன எனத் தெளிவாக நிலைநாட்டியுள்ளன. பின்னர் ஒரு நிலையில் காலங்கடந்து ஆதிதிராவிடர்கள் தெரிவித்த வாதம், அதாவது செங்குந்தர்களின் தூண்டுதலின்பேரில், ஆதிதிராவிடர்கள் காலனியில் உள்ள தத்தம் வீடுகளில் தங்களுடைய வழக்கமான தொழிலை மேற்கொண்டிருந்தபோது, அப்பாவியான, நிராயுதபாணியான ஆதிதிராவிடர்கள் மீதும் அவர்களின் சொத்துக்கள் மீதும் கட்டற்ற தாக்குதலை 11—11—1992 அன்று காவல்துறையினர் நடத்தினர் என்பதும், அதனால்

ஆதிதிராவிடர்களுக்கும் அவர்தம் சொத்துக்களுக்கும் சேதங்கள் விளைந்தன என்பதும் (இவையெல்லாம் மாவட்ட வருவாய் அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவரும் 14—11—1992 அன்று பார்வையிட்டபோது தங்கள் தரப்பில் அனுதாபத்தை வரவழைக்க அவர்களாக உருவாக்கிக் கொண்ட நடிப்புச் செயல்களின் விளைவு என்றே தோன்றுகிறது) அவர்கள் காவலருக்கு எதிராக எழுப்பிய வழக்கும் வாதமும் ஏற்றுக்கொள்ளத் தக்க சான்றுகளின் அடிப்படையில் மெய்ப்பிக்கப்படவில்லை. விசாரணையின்போது கிடைத்த தகவல்கள் மூலம் அத்தகைய வாதம் முற்றிலும் பொய்யானது என்றும், நடைபெற்றிருக்கவியலாதது என்றும் தெளிவாகியது. மோதலில் ஈடுபட்ட கோவ்டிகளைக் கலைக்கக் காவல்துறையினர் குறைந்தளவு பலத்தையே பயன்படுத்தினர், அதிக அளவு பலத்தைப் பயன்படுத்தவில்லை என ஆய்வு வரம்புகளின் II ஆம் பகுதியைக் குறித்த எனது முடிவுகள் பதிவு செய்யப்படுகின்றன. 8—11—1992 அன்று செங்குந்தர்களின் தூண்டுதலின் பேரில் திட்டமிட்ட முறையில் காவலர்கள் ஆதிதிராவிடர்களைத் தாக்கி அவர்களின் சொத்துக்களை அதிக அளவில் சேதப்படுத்தினர் என்பது தொடர்பாக காவல்துறையினர்மீது முதல் நோக்கிலேயே நம்பக்கூடிய ஆதாரம் ஏதுமில்லை என்பது மட்டுமல்ல ; அத்தகைய வழக்கு எதுவுமே இல்லை என்று III ஆம் பகுதியைக் குறித்து எனது முடிவுகள் பதிவு செய்யப்படுகின்றன. காவல்துறையினரின் நடவடிக்கை முற்றிலும் தேவையானதுதான் என்றும், மேற்சொன்ன சம்பவத்தில் காவல்துறையினர் அத்துமீறி நடக்க வில்லை என்றும் IV ஆம் பகுதியைக் குறித்த எனது முடிவுகள் பதிவு செய்யப்படுகின்றன.

பகுதி V.

(அறிக்கையில் 31 ஆம் பத்தி.)

4. ஆதிதிராவிடர் சொத்துக்களுக்கு அதிக அளவில் சேதம் விளைவிக்கப்பட்டது என்று எழுந்த வாதம் மாவட்ட ருவாய் அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவரும் பின்னர் சென்று பார்வையிட்டபோது பின்னர் நினைத்துக் கொண்டு அவர்களே உருவாக்கி நடத்திய நாடகம் என்று நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சியம் உள்ளது. இச்சூழ்நிலையில், ஆதிதிராவிடர்களின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாக சொல்லப்படுவதற்குப் பொறுப்பான அதிகாரிகள், அதிகாரிகள் அல்லாதோர் ஆகியோரைக் கண்டறிவதற்கான பிரச்சினை எழவில்லை என்னும் எனது முடிவு பதிவு செய்யப்படுகிறது.

பகுதி VI.

(அறிக்கையில் 32 ஆம் பத்தி.)

5. பொன்னூரில் ஏற்பட்ட வகுப்பு மோதலில் ஆதிதிராவிடர்கள்தான் வலியச் சண்டைக்குச் சென்றவர்கள் (Aggressors) என்பதைக் காட்டுவதற்குப் போதிய சாட்சியம் உள்ளது. அவர்களின் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டதற்கு ஆதாரமாக ஏற்றுக் கொள்ளத்தக்க சாட்சியம் ஏதும் இல்லை. இச்சூழ்நிலையில் ஆதிதிராவிடர்களின் சொத்துக்களுக்கும், சொந்த உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது தொடர்பாக ஆதிதிராவிடர்கள் இழப்பீடு ஏதும் பெறுவதற்கு உரியவர்கள் அல்லர் என்றும் எனது முடிவு பதிவு செய்யப்படுகிறது.

பகுதி VII.

(அறிக்கையில் 33, 34 ஆம் பந்திகள்.)

6. இச்சம்பவத்தில் கூறப்பட்ட பாவுத்தோப்பு, அக்கிராமத்தில் உள்ள இந்து மக்கள் அனைவராலும், அவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்களாயினும் சரி, பயன்படுத்தப்பட்டு வந்தது. மேற்சொன்ன தோப்பின் உடைமை உரிமையும் அனுபோக உரிமையும் முற்றிலும் செங்குந்தர்களுக்கு மட்டுமே உரியது என்று அவர்கள் கொண்டாடும் உரிமை சாட்சியத்தால் நிரூபிக்கப்படவில்லை. முதல் மேல்முறையீட்டு நடுவர் மன்றம் உறுதி செய்தவாறு, ஆரணி மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் 591/89ஆம் எண் அசல் மனுவில் அவர்கள் பெற்ற தடையாணையின் தீர்ப்பு கூட பாவுத்தோப்பில் நெசவுக்கு முந்தைய வேலைகளில் பெயர் குறிப்பிடப்பட்ட எதிர்மனுதாரர்கள் ஒன்பது பேர் (கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்கள் அனைவரிலிருந்தும் வேறுபட்டவர்கள்) தலையிடுவதிலிருந்து தடுத்தது. சட்டப்படி நெசவுக்கு முந்திய பணிகளுக்காகச் செங்குந்தர்கள் பாவுத்தோப்பைப் பயன்படுத்துவது, அது வெளிப்படையான அல்லது உள்ளார்ந்த பொருளைக் கொண்டதானாலும் '' உரிமை '' என்பதாகும். '' உடைமையுரிமையும், அனுபோக வுரிமையும் '' என்று பொருள் விளக்கம் சொல்வது தவறான வழக்கு ஆகும். செங்குந்தர்கள் 3—2—1993 அன்று ஆரணி துணை நீதிமன்றத்தில் 30/93ஆம் எண் அசல் வழக்கில் வழக்குதாக்கல் செய்யப்படும் வரை பாவுத்தோப்பின் உடைமை உரிமை, அருள்மிகு சௌந்தர்ய வரதராஜ பெருமாள், அருள்மிகு திருக்காமேஸ்வரர் திருக்கோயில்களிடம் நிலை பெற்றிருந்தது என்பதில் எவ்வித கருத்து மாறுபாடும் இருந்ததில்லை. மேற்சொன்ன திருக்கோயில்களின் நிருவாகத்தின் தக்கார் பாவுத்தோப்பைப் பயன்படுத்துவதற்கு ஏனைய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அனுமதி வழங்குவதற்குத் தனது உரிமையைப் பயன்படுத்துவதற்கு, அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 30/93 ஆம் எண் அசல் வழக்கில் அது தொடர்பாக வழங்கப்பட்ட இடைக்காலத் தடை ஆணை காரணமாக வழக்கு முடிவு தெரியும்வரை காத்திருக்க வேண்டும். ஆயினும், 30/93ஆம் எண் அசல் வழக்கில் அரசு ஒரு தரப்பினராக குறிப்பிடப்படாததால் 334/1ச ஆம் எண் நி.அ.புலத்தில் அடங்கியுள்ள பாட்டைப் புறம்போக்கைப் பயன்படுத்துவதற்கு ஆதிதிராவிடர்களுக்கு அத்தகைய அனுமதி வழங்க வருவாய்த்துறை அதிகாரிகளுக்குள்ள

உரிமை, மேற்சொன்ன வழக்கில் பிறப்பித்துள்ள நடவடிக்கைகளினால் பாதிக்கப்படவில்லை. மேற்சொன்ன வழக்கு இறுதியாகத் தீர்ப்பாகும் வரையில் பாட்டைப் புறம்போக்கில் எந்தப் பகுதியிலும், செங்குந்தர்களின் நெசவுக்கு (பாவுபோடும்) முந்திய பணிகளுக்கு இடையூறு விளைவிக்காத முறையில் ஆதிதிராவிடர்கள் கோருவதுபோல், சித்திரை, ஆடி, தை ஆகிய தமிழ் மாதங்களில் முதல் நாளன்று பாட்டைப் புறம்போக்கில் தங்கள் திருவிழாக்களை நடத்துவதற்கு வருவாய்த்துறை அதிகாரிகள் ஆதிதிராவிடர்களை அனுமதிப்பதற்கு முற்றிலும் உரிமையுண்டு. பொன்னூர் கிராமத்தில் சமூக ஒற்றுமையை நிலைநாட்டவும், '' பாவுத்தோப்பு '' தொடர்பாக தொடர்ந்து வழக்கு நடைபெற்றுவரும் சூழ்நிலையில் இனிமேல் மோதல் ஏற்படாமல் பயனுள்ள வகையில் தடுக்கவும் வேண்டி, 7—11—1992, 8—11—1992 ஆகிய நாட்களில் பொன்னூரில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான புகார்கள்மீது குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடராமல் விட்டுவிடுவது குறித்தும், பொன்னூர் கிராமத்தில் காவல்நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்தும் கூட அரசால் கருதிப் பார்க்கப்படலாம். மேற்சொன்ன கருத்துரைகளை இக்கமிஷன் தெரிவிக்கிறது.



8. விசாரணைக் கமிஷனின் பணி முன்னேற்ற விவரங்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. விசாரணைக் கமிஷனின் பணி முன்னேற்ற விவரங்கள்.

கமிஷனின் பணிகள்.

(1) விசாரணைக் கமிஷன் 9—12—1992 அன்று பிற்பகல் பதவி ஏற்றது.

(2) விசாரணைக் கமிஷன் அலுவலகம், சென்னை-15, நீநகர் காலனி, மேற்கு மாடவீதி, மேஜர் பரமேஸ்வரன் மாளிகை, இரண்டாம் தளத்தின் ஒரு பகுதியில் 30—12—1992 அன்று அமைந்தது.

(3) துணைப் பணியாளர்கள் கமிஷன் அலுவலகத்தில் 8—1—1993 அன்று பணியில் சேர்ந்தனர்.

(4) கமிஷன் பதவி ஏற்றது குறித்த அறிவிக்கையை 11—1—1993 அன்று வெளியிடுமாறு கேட்டு, சென்னை-9, செய்தி, மக்கள்—தொடர்புதுறை இயக்குநருக்கு கமிஷன் கடிதம் எழுதியது.

(5) சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து உறுதிமொழிப் பத்திரங்கள் / மனுக்கள் பெறுவதற்கு 31—1—1993 அன்று கடைசி நாள் என்று கமிஷன் அறிவித்தது.

(6) காவல்துறை சார்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் கேட்டுக் கொண்டபடி 19—2—1993 வரை உறுதிமொழிப் பத்திரங்களை அனுப்பலாம் என கமிஷன் அறிவித்தது.

(7) 22—1—1993ஆம் நாளிட்ட அரசு ஆணையில், வழக்குரைஞர் திரு. எஸ்.ஆர். வீரராகவனை விசாரணைக் கமிஷனின் வழக்குரைஞராக (Standing Counsel to the Commission) அரசு நியமித்தது.

(8) உரியவாறு அறிவிப்பு வெளியிட்ட பின்னர், கமிஷன் 24—2—1993 அன்று உள்ளூரில் சென்று பார்வையிட்டது.

(9) 3—3—1993ஆம் நாளிட்ட அரசு ஆணையில், திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை-I (நிருவாகம்), திரு. என். சேஷாத்திரியையும், சேலம் தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-I, திரு. ஜி. இராஜன் பாபுவையும் காவல்துறையின் சார்பில் வாதாட சிறப்பு வழக்குரைஞர்களாக அரசு நியமித்தது.

(10) கமிஷன் 10—3—1993 அன்று திருவண்ணாமலையில் தொடக்க விசாரணையை நடத்தியது.

(11) கமிஷன் 12 முறை கூடியது. 53 சாட்சிகளை விசாரித்தது. இத்துடன் 367 சான்றாவணங்களையும் 2 காட்சிப் பொருள்களையும் பெற்றது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

©
தமிழ்நாடு அரசு
1994

பொதுத் (கடும் மந்தணம்) துறை.

[அரசாணை எண் SS II/493-11/93, நாள் : 6 செப்டம்பர் 1994.]

சட்டம்-ஒழுங்கு—திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்—வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்தில் 8—11—1992 அன்று செங்குந்தர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் இடையே ஏற்பட்ட இனக்கலவரம்—காவல்துறையினரின் மிகையான பலப்பிரயோகம்—1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) கீழ் விசாரணைக் கமிஷன் அறிக்கை—முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன—ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

பின் வருவனவற்றைப் படிக்கவும் :—

(1) பொதுத் (சட்டம்-ஒழுங்கு-B) துறையின் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் நாளிட்ட 1397 ஆம் எண் அரசாணை.

(2) திரு. கே. இ. வரதன், விசாரணைக் கமிஷன் 8—1—1994 அன்று அனுப்பிய 3 கே.இ.வ.வி.க./93-22 ஆம் எண் கடிதம்.

ஆணை —எஸ் SS II/493-11/93, பொதுத்(கடும் மந்தணம்)துறை, நாள் : 6 செப்டம்பர் 1994.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்திலுள்ள ஒரு சொத்தின் உடைமை உரிமை, அனுபோக உரிமை குறித்து செங்குந்தர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் இடையே நீண்டகாலமாக இருந்து வந்த தகராறு தொடர்பாக அக்கிராமத்தில் 8—11—1992 அன்று நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு 1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) கீழ் ஒய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. கே. இ. வரதன் அவர்கள் மேலே பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையின்படி விசாரணைக் கமிஷனாக நியமனம் செய்யப்பட்டார். இந்த விசாரணைக் கமிஷனின் ஆய்வு வரம்பு வருமாறு :—

(i) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்திலுள்ள ஒரு சொத்தின் உடைமை உரிமை, அனுபோக உரிமை குறித்து செங்குந்தர்களுக்கும், அதிதிராவிடர்களுக்குமிடையே நீண்டகாலமாக இருந்து வந்த தகராறு தொடர்பாக 8—11—1992 அன்று அக்கிராமத்தில் செங்குந்தர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்குமிடையே இனக் கலவரப் பதட்ட நிலையும் கோஷ்டி மோதலும் ஏற்பட்டதற்கான காரணங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகியவை குறித்து விசாரித்தல் ;

(ii) மோதலில் ஈடுபட்ட கும்பலைக் கலைப்பதற்கு 8—11—1992 அன்று காவல் துறையினர் பயன்படுத்திய பலப்பிரயோகம் குறைந்த அளவினதா அல்லது அத்து மீறியதா என்பது குறித்து விசாரித்தல் ;

(iii) செங்குந்தர்களின் தூண்டுதலின் பேரில் காவல்துறையினர் 8—11—1992 அன்று ஆதிதிராவிடர்களைத் திட்டமிட்ட முறையில் தாக்கினார் என்பது பற்றியும், காவல்துறையினர் ஆதிதிராவிடர்களின் சொத்துக்களைப் பெருமளவு சேதப்படுத்தினார் என்பது பற்றியும் நம்பக் கூடிய ஆதாரம் உள்ளதா என்பது குறித்து விசாரித்தல் ;

(iv) காவல்துறையினரின் மேற்சொன்ன நடவடிக்கை தேவையானதுதானா என்பது பற்றியும், மேற்சொன்ன சம்பவங்களில் காவல்துறையினரின் பலப்பிரயோகம் அத்து மீறியிருந்ததா என்பது பற்றியும் விசாரித்தல் ;

(v) ஆதிதிராவிடர்களின் சொத்துக்களுக்குப் பெருஞ்சேதம் ஏற்படுவதற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகள் அல்லது அதிகாரிகளல்லாதவர்கள் ஆகியோரைக் கண்டறிதல் ;

(vi) சேதமடைந்த சொத்திற்கும், அடைந்த கஷ்டத்திற்கும் இழப்பீட்டுத் தொகை பெற ஆதிதிராவிடர்கள் தகுதியானவர்களா என்பதைத் தெரிவித்தல் ;

(vii) எதிர்காலத்தில் அப்பகுதியிலுள்ள வெவ்வேறு இன மக்களிடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான பொதுவான நடவடிக்கைகள் பற்றித் தெரிவித்தல்.

2. விசாரணைக் கமிஷன், அதன் முன் சாட்சிகள் அளித்த பல்வேறு சாட்சியங்களை ஆய்வு செய்த பிறகு, கமிஷன் பின்வருமாறு அதன் முடிவுகளைத் தெரிவித்துள்ளது :—

(i) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்திலுள்ள ஒரு சொத்தின் உடைமை உரிமை, அனுபோக உரிமை குறித்து செங்குந்தர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்குமிடையே நீண்டகாலமாக இருந்து வந்த தகராறு தொடர்பாக, 8—11—1992 அன்று அக்கிராமத்தில் செங்குந்தர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்குமிடையே இனக் கலவரப் பதட்ட நிலையும், கோஷ்டி மோதலும் ஏற்பட்டதற்கான காரணங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகியவை குறித்து விசாரித்தல் ;

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், பொன்னூர் கிராமத்தைச் சேர்ந்த நில அளவை எண் 331/1-ல் உள்ள காய்க்கும் அறுபது புளியமரங்களையும், 1·52 எக்டேர் அளவுடைய காலியிடத்தையும் கொண்ட சிறு நிலப்பகுதியே இத்தகராறுக்குரிய நுதல் பொருளாகும். கடந்த ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக மேற்சொன்ன 331/1 ஆம் நில அளவை எண்ணில் காலியாகவுள்ள பகுதியைச் செங்குந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பாவு போடுவதற்குப் பயன்படுத்தி வந்துள்ளனர். இப்பகுதி ''பாவுத்தோப்பு'' என்று அழைக்கப்படுகிறது. இக்கிராமத்திலுள்ள அனைத்துக் கோயில்களையும், அவற்றிற்குரிய பொதுவான சொத்துக்களையும் நிருவகிப்பதற்கு வகை செய்து, 1914 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருந்த்தாதிலும், கோயில்களையும் அவற்றின் சொத்துக்களையும் நிருவகிக்க செங்குந்தர் வகுப்பினர் பிரத்யேக உரிமைக் கோரிக்கை ஒன்றை முன் வைத்தனர். அது, செங்குந்தர்களுக்கும், வன்னியர்களுக்கும் இடையே 1917-லிருந்து 1988 வரையிலான கால அளவில் உரிமையியல் நீதிமன்றத்திலும், ஏனைய குறிப்பிட்ட சட்டப்படிக்கான அமைப்புக் களிலும் எண்ணிறந்த வழக்குகளைத் தொடரக் காரணமாக இருந்தது. மேற்சொன்ன உரிமைகள், அந்தக் கிராமத்தில் வசிக்கின்ற அனைத்து இந்து சமுதாயத்தினரிடம் நிலை பெற்றிருக்கும் என்ற தீர்ப்பின் மூலம் அவை இறுதியாக முடிவுக்கு வந்தன. அக்கிராமத்தில் வசிக்கின்றவர்களும், மேற்சொன்ன வழக்குகளில் உடன் நேமக்தாராக இல்லாதவர் களுமாகிய ஆதிதிராவிடர்கள் 1989 ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, பாவுத் தோப்பில் ஆண்டொன்றில், மூன்று அல்லது நான்கு இரவுகளில் இரவு 10 மணியிலிருந்து காலை 4-00 மணி வரையில் தங்களுடைய பாரம்பரிய திருவிழாக்களையும் கூட்டங்களையும் நடத்துவதற்கான தங்களுடைய உரிமையை உறுதிப்படுத்தக் கோரினர். செங்குந்த முதலியார்கள் இதற்கு மறுப்பு தெரிவித்து ஆரணி, மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் O. S. 591/1989 ஆம் எண்ணில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து, பாவுத் தோப்பைப் பயன்படுத்த முயற்சி செய்த ஒன்பது அதிதிராவிடர்களுக்கெதிராக தடையாணையைப் பெற்றனர். மேல் முறையீட்டு நீதிமன்றம் மேற்சொன்ன ஆணையை உறுதிப்படுத்தியதையடுத்து செங்குந்த முதலியார்கள் மாறப்பு தெரிவித்ததால் முன்னர் வழங்கப்பட்டிருந்த அனுமதியைக் காவல் துறையினர் ரத்து செய்ததற்குக் கீழ்ப்படிந்து நடக்காமல், அதனை எதிர்த்து 25—10—1992ஆம் நாளன்று ஆதிதிராவிடர்கள் 334/1ஏ ஆம் எண் நி. அ. புலத்தில் உள்ள பாட்டைப் புறம் போக்கின் களப் பகுதியில் மேடை ஒன்றை அமைத்து பாவுத்தோப்புப் பகுதிகளில் கூட்டம் ஒன்றைக் கூட்டினர். இந்தக் கூட்டம் வருவாய் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இந்த அதிகாரிகள் 3, 4, 7—11—1992 ஆகிய நாட்களில் அமைதிக் கூட்டங்களைக் கூட்டினர். ஆனால், அவை பயனற்றதாயின.

உரிமையியல் தீர்ப்பாணை, செங்குந்த முதலியார்கள், பாவுத்தோப்பையும், பாட்டைப் புறம்போக்கையும் அனுபவிப்பதற்கான பிரத்யேக உரிமையை அளித்துள்ளது என்ற காரணத்தால், பாவுத்தோப்பில் ஆண்டொன்றில் மூன்று இரவுகளுக்குக் கூட ஆதிதிராவிடர்கள் தங்களுடைய பாரம்பரிய திருவிழாக்களை நடத்த அவர்களுக்கு இடவசதியளிக்க மேற் சொன்ன அமைதிக் கூட்டங்களில் செங்குந்த முதலியார்கள் மிகத் தெளிவாக மறுத்து விட்டதும், அமைதிக் கூட்டங்களை நடத்திய வருவாய் மற்றும் காவல்துறை அதிகாரிகள் உதவ முடியாத நிலையில் இருந்ததும், 10—11—1992-க்குள் இதற்கொரு முடிவு காண அவர்களே இந்த விஷயத்தை மாவட்ட ஆட்சியரின் முடிவை அறிவதற்காக அனுப்பி வைத்ததும், ஆதிதிராவிடர் களின் உணர்ச்சியைப் பாதித்தது. அதன் பேரில், அவர்களுடைய குறிக்கோளை எய்த, சட்டத்தைத் தாங்களே கையாள அவர்கள் தீர்மானித்தனர். பாதியிலேயே முடிவடைந்த அமைதிக் கூட்டம் நடைபெற்ற 7—11—1992 ஆம் நாளன்று மாலையிலேயே ஆதிதிராவிடர்கள் பொன்னூர் கிராமத்தின் நுழைவாயிலில் உள்ள தங்களுடைய காலனிக்கு அருகில் வன்முறையில் ஈடுபட்டனர். இதன் விளைவாக, முதலியார் வகுப்பைச் சேர்ந்த திருவாளர்கள் மாணிக்க வாசகம், காண்டீபன் ஆகியோரும், காவலர்கள் சிலரும் காயமடைந்தனர். அக்கிராமத்தில் கலவரம் ஏற்படக்கூடிய முக்கியமான பகுதிகளில் 25—10—1992 ஆம் நாளன்று இரவிலிருந்து காவலர்களைப் பணியில் நியமித்த வந்தவாசி காவல் நிலையத்தில் காவல்துறை ஆய்வாளரான திரு.[2]தியாகராஜன் (ராட்சி எண் 43) 7—11—1992 ஆம் நாளிலிருந்து கிராமத்தில் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள 4 காவல் துறை உதவி ஆய்வாளர்களையும், 5 தலைமைக் காவலர்களையும், 25 காவலர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். மேலே தெரிவிக்கப் பட்டவை, பொன்னூர் கிராமத்தில் 8—11—1992 ஆம் நாளன்று காலையில், செங்குந்தர் களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் இடையே இனக் கலவரப் பதட்டமும், கோஷ்டி மோதலும் ஏற்பட்டதற்கான காரணம் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.

(ii) 8—11—1992 அன்று, சண்டையிட்டுக் கொண்ட கும்பலைக் கலைப்பதற்காக காவலர் செய்த பலப்பிரயோகம் குறைவானதா அல்லது மிகையானதா என்பது குறித்து விசாரணை செய்தல் ;

(iii) செங்குந்தர் வகுப்பினரைச் சேர்ந்த கும்பலின் தூண்டுதலின்பேரில், காவலர் திட்டமிட்ட ஆதிதிராவிடர்களைத் தாக்கினர் என்பதற்குக் காவலருக்கு எதிராக முதல் நோக்கிலேயே நம்பக்கூடிய ஆதாரம் உள்ளதா என்பதையும், காவலர் 8—11—1992 அன்று ஆதிதிராவிடர் சொத்துக்களுக்குப் பெருமளவில் சேதம் விளைவித்தனரா என்பதையும் விசாரணை செய்தல் ;

(iv) காவலரின் மேற்சொன்ன நடவடிக்கைக்குத் தேவை எற்பட்டதா என்பது குறித்தும் மேற்சொன்ன சம்பவங்களில் காவலர்கள் அத்துமீறி பலப் பிரயோகம் செய்தனரா என்பது குறித்தும் விசாரணை செய்தல் ;

விரும்பத்தகாத சம்பவம் எதுவும் நடைபெற்றுவிடக்கூடும் என்பதால், நெசவுப் பணிக்கான முன் தொடக்கப் பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று காவல்துறை ஆய்வாளர் (சாட்சி 43) கூறிய ஆலோசனையையும் மீறி செங்குந்தர்கள் 8—11—1992 அன்று காலை 5-30 மணிக்குப் பாவுத்தோப்பில் தங்கள் நெசவு பணிக்கான முன் தொடக்கப் பணிகளைத் தொடங்கினர். அப்போது அங்கு காவலர்கள் இருந்ததைப் பார்த்த ஆதிதிராவிடர் சிலர், தங்கள் குடியிருப்புக்குத் திரும்பிச் சென்று அதிக ஆட்களுடனும், கம்பு, கல், செயின் முதலியவற்றுடனும் திரும்பி வந்தனர். கலவரம் எதிலும் ஈடுபடவேண்டாம் என்று காவலர் ஆதிதிராவிடர்களுக்கு மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறிய அறிவுரைகள் பயனற்றுப் போயின. ஏனெனில், காவலர்கள் அங்கு வந்திருந்ததைப் பார்த்து, செங்குந்தர்கள் தங்கள் பணிகளைச் செய்வதற்குக் காவலர்கள் பாதுகாப்பு அளிக்கின்றனரோ என்று ஆதி திராவிடர்கள் தவறாக நினைத்துக் கொண்டதால், அவர்கள் கற்கள், கம்புகள் முதலியவற்றைக் கொண்டு செங்குந்தர்களையும், இடையில் சிக்கிக் கொண்ட காவலர்களையும் தாக்கத் தொடங்கினர். பிழிவாங்கும் வகையில் செங்குந்தர்கள் இதேபோன்று கற்கள், கம்புகள் முதலியவற்றால் ஆதி திராவிடர்களைத் திருப்பித் தாக்கினர். இந்தகைய வன்மையான மோதலை குறைவான எண்ணிக்கையிலிருந்த காவலரால் நிறுத்தப் தடுக்க முடியவில்லை அல்லது கட்டுப்படுத்தக் கூட இயலவில்லை; அவர்கள் தங்கள் தடிகளைப் பயன்படுத்தி, சண்டையிடும் கும்பலைப் பின்னே தள்ளி விலக்கி விட மட்டுமே முடிந்தது. இதன் விளைவாக, ஆண்கள், பெண்கள் உட்பட பெரும் பான்மையினருக்கு அதாவது காவலர் (10 பேர்), ஆதிதிராவிடர்கள் (73 பேர்), செங்குந்தர்கள் (33 பேர்) ஆகிய 116 பேருக்கு அடிபட்டு இரத்தங்கட்டிய காயங்களும், சிராய்ப்புக் காயங்களும் ஏற்பட்டன. காயம்பட்ட அனைவரும் வந்தவாசி அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டனர். காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஆயுதந்தாங்கிய காவலருடன் வந்த பின்னர்தான் சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்கள் சாயம்பட்டவர்களையும், காவலர்களையும் மீறி எதிர்த்து நின்று சண்டையிட்டவர்களையும் காவலர்கள் பாதுகாப்பில் பிடித்து வைத்துக் கொள்ளுமாறு சம்பவம் நிகழ்ந்த இடத்திலேயே விட்டுவிட்டு இங்குமங்குமாகத் தலைத்தெறிக்க ஓடினர். இருதரப்பினரும் அளித்த புகார்களின் பேரில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. விசாரணையின்போது அளிக்கப்பட்ட சாட்சியங்களும், குறிப்பாக சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து உடனே பொன்னூர் கிராமத்திற்குச் சென்ற காவல்துறை கண்காணிப்பாளரின் இரு அறிக்கைகளும், மாவட்ட ஆட்சித் தலைவரின் முதல் அறிக்கையும், 8—11—1992 அன்று காலை அடுத்தடுத்து நடைபெற்ற சம்பவங்கள் பற்றித் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. காவலரைப் பற்றி, மிகவும் காலதாமதமாக, 11—11—1992 அன்று ஆதிதிராவிடர்கள் கூறிய கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்க பொருள்களின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படவில்லை. உண்மையில், விசாரணையின்போது கிடைத்த தகவல்கள் அவர்கள் கூறியது பொய்யானது என்பதையும் சாத்தியமற்றது என்பதையும் தெளிவாக்கியது. இக்கும்பலையில், சண்டையிட்டுக் கொண்ட குழுக்களைக் கலைப்பதற்காக காவலர் பயன்படுத்திய பலப்பிரயோகம் குறைவானதேயாகும்; மிகையானதல்ல என்று கமிஷன் கருதுகிறது. அய்வு வாய்வு (ii) ஐக் காண்க; செங்குந்தர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் தூண்டுதலின் பேரில், 8—11—1992 ஆம் நாளன்று காவல் துறையினர் திட்டமிட்ட முறையில் ஆதிதிராவிடர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களுடைய சொத்திற்குப் பெருமளவில் சேதம் ஏற்படுத்தினர் என்பதற்கு ஆதாரம் எதுமில்லை. (iii) ஆம் அய்வு வரம்பைக் காண்க. காவல்துறையினர் நடவடிக்கை எடுத்தது அவசியமானது என்பதும், மேற்சொன்ன சம்பவத்தில் காவல்துறையினர் அத்துமீறி நடக்கவில்லை என்பதும் தெளிவாகிறது, (iv) ஆம் அய்வு வரம்பைக் காண்க ;

(v) ஆதி திராவிடர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட பெருமளவு சேதத்திற்குக் காரணமாயிருந்த அரசு அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அல்லாத நபர் அல்லது நபர்களைக் கண்டறிதல்.

மாவட்ட வருவாய் அதிகாரியும், மாவட்ட ஆட்சியரும் பின்னர் பார்வையிட வந்த போது, ஆதிதிராவிடர்களின் சொத்திற்கு பெருமளவு சேதம் ஏற்பட்டது என்று காட்டப்படுவதற்காக பின்னர் சிந்தித்து செய்யப்பட்டது என்பதற்கும் போதிய ஆதாரம் உள்ளது. எனவே, ஆதி திராவிடர்களின் சொத்திற்குச் சேதம் விளைவித்ததாகக் கூறப்பட்ட அரசு அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அல்லாத நபர் அல்லது நபர்களைக் கண்டறிவது தொடர்பான வினா எழவில்லை என்று கமிஷன் கருதுகிறது.

(vi) சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கும் சொந்தக் கஷ்டங்களுக்கும் இழப்பீடு பெறுவதற்கு ஆதி திராவிடர்கள் தகுதியுடையவர்களா என்று கட்டிக் காட்டுதல்.

நடைபெற்ற கோஷ்டி மோதலில் ஆதிதிராவிடர்கள்தான் தாக்குதல் நடத்தியவர்கள் என்பதைக் காட்டுவதற்குப் போதிய ஆதாரம் உள்ளது ; அவர்களுடைய சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டதற்கு ஆதரவாக ஏற்றுக் கொள்ளத்தக்க ஆதாரம் ஏதுமில்லை. இச் சூழ் நிலையில், சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டதாகவும், சொந்தக் கஷ்டங்கள் ஏற்பட்டதாகவும் சொல்லப்பட்டதற்கு இழப்பீடு எதனையும் பெறுவதற்கு உரிய தகுதியானவர்களாக ஆதி திராவிடர்கள் இல்லை என்று கமிஷன் கருதுகிறது.

3. கமிஷனின் முடிவுகளை அரசு ஏற்றுக் கொள்கிறது.

4. இனி அப்பகுதியிலுள்ள வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்த மக்களிடையே அமைதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட விசாரணைக் கமிஷன் கீழ்க்காணும் பொதுவான நடவடிக்கை களைப் பரிந்துரைக்கிறது :—

(i) செங்குந்தர்கள் 3—2—1993ஆம் நாளன்று ஆரணி, சார்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த O.S. 30/93ஆம் எண் வழக்கில் இறுதித் தீர்ப்பு வழங்கப்படாத நிலையில் பாட்டைப் புறம்போக்கின் ஏதேனும் பகுதிகளில் செங்குந்தர்களின் பாவுபோடும் பணிக்கு இடையூறு ஏற்படாத வகையில், ஆதிதிராவிடர்கள் கோரியவாறு, சித்திரை, ஆடி, தை ஆகிய தமிழ் மாதங்களில் முதல் நாள் இரவு பாட்டைப் புறம்போக்கில் ஆதி திராவிடர்கள் தங்களுடைய பண்டிகைகளை நடத்த அவர்களுக்கு அனுமதி வழங்க வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு உரிமை உண்டு ;

(ii) 1992ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7, 8ஆம் நாட்களில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான புகாரின் பேரில் மேற்கொண்டும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் மேற் கொள்வதை விட்டு விடுதல் ;

(iii) மற்றும் இக்கிராமத்தில் வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்த மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் ''பாவுத்தோப்பு'' சம்பந்தமாக தொடர்ந்து வழக்கு நடை பெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மேற்கொண்டும் மோதல்கள் ஏற்படுவதைத் திறம் படத் தடுக்கவும், பொன்னூர் கிராமத்தில் காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது விரும்பத் தக்கது என்பதை மாநில அரசு கருதிப் பார்க்கலாம்.

5. கமிஷனின் முடிவுகளை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கின்றபோது, கமிஷன் தெரிவித்துள்ள திட்டவட்டமான கருத்துரைகளை/பரிந்துரைகளை, உரிய ஆணைகள் பிறப்பிப்பதற்காக சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகள், மேற்கொண்டும் விரிவாக ஆய்வு செய்ய வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். ஹரிபாஸ்கர்,
தலைமைச் செயலாளர்.

பெறுநர் :

செயலாளர், உள்துறை, சென்னை-9.
செயலாளர், வருவாய்த்துறை, சென்னை-9.
செயலாளர், பொதுத் (சட்டம்-ஒழுங்கு) துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலை.
காவல்துறை கண்காணிப்பாளர், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.
காவல்துறைத் துணைத் தலைவர், வேலூர் சரகம், வேலூர்.
காவல்துறைத் தலைமை இயக்குநர், சென்னை.
காவல்துறைக் கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு), சென்னை.
காவல்துறைத் தலைவர், புலனாய்வு, சென்னை.

நகல் பெறுநர் :

மத்திய அரசு செயலாளர், உள் விவகார அமைச்சகம், புதுடில்லி.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.